KALKI 17.5.92 ரூ. 3.00
பொன்விழா ஆண்டு

கல்கி



ஷாக் அளிக்கும் ஷாப்பிங் மோகம்!


முத்துமுத்தான
வியர்வை.
ஊக்குவித்தது
உள்ளுணர்வை.
Second Nature
செகண்ட நேச்சர் டால்க்.
வெற்றியைப் பிரதிபலிக்கும் இணையற்ற நறுமணம்

பணம் காய்க்கும் மரம்



சாலையோரத் தேக்குகள் - தஞ்சை

'இன்றைக்குத் தேக்கு மர வளர்ப்பில் ஆயிரம் ரூபாய் முதலீடு செய்யுங்கள்; இருபது வருடங்கள் கழித்து அறுபதாயிரம் ரூபாய் அறுவடை செய்யுங்கள்!' என்கிறது ஒரு விளம்பரம்.

தேக்கு மரங்களை நட்டுப் பணம் சம்பாதிக்கலாம் என்ற வகையில் பல விளம்பரங்கள் இப்படி வரத் தொடங்கியிருக்கின்றன. 'முதல் ஆயிரம் ரூபாய்தானே!' என்று பல தரப்பட்ட மக்களும் இவற்றில் முதலீடு செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

இது எல்லாம் உண்மையில் சாத்தியம் தானா? முழு விவரங்களை அறிய, முன்னாள் முதன்மை-தலைமை வனக் காப்பாளர் கோண்டாஸ் அவர்களைச் சந்தித்தோம். (இவர் இது போன்ற சில நிறுவனங்களின் ஆலோசகரும் கூட.)

''இது நல்ல முதலீடு மட்டுமல்ல; நம்பகமான முதலீடு!'' என்று எடுத்த எடுப்பிலேயே அடித்துச் சொன்னார் கோண்டாஸ். பிறகு விளக்கத் தொடங்கினார்:



தேக்கு - ஆரம்ப நிலை.

''உலகத் தரம் மிக்க ஆறு வகை மரங்களில், தேக்கு ஒன்று. தேக்கு மரம் போட்டால் பணத்தை நிச்சயம் பார்க்கலாம். ஏனென்றால் தேவை அத்தனைக்கு இருக்கிறது! பர்மா, தாய்லாந்து, இந்தோனேஷியா, வியட்நாம், இந்தியா என்று குறிப்பாக ஆசிய நாடுகளில் வளரும் வகையைச் சேர்ந்தது.

மற்ற பயிர்களைப் பாதிக்காது



''இதை நடுகின்ற முறையை, இந்தியாவில், தமிழ் நாட்டில்தான் மிகச் சரி

யானபடி கையாளுகிறோம். கட்டை விரல் பருமனுக்கு வந்தவுடன் கன்றை அப்படியே பிடுங்கி விட்டு, சுற்றியுள்ள வேர்களை வெட்டி 'ட்ரிம்' பண்ணி, ஆறிலிருந்து ஒன்பது அங்குல ஆணி வேர் பாகத்தை மட்டும் வெட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். 'ஸ்டம்ப்' எனப்படும் இந்த வேர்ப் பகுதியை, ஒன்பதங்குலத்துக்குத் தரையில் கடப்பாறையால் துளை போட்டு, நட்டுவிட்டு, நிலத்தை நன்றாக அழுத்திவிட்டால், அதிலிருந்து மரம் மெல்ல வளரத் தொடங்கும்.

''முழு வளர்ச்சி பெற 60 முதல் 80 வருடங்கள் ஆகும். ஏனென்றால் காடுகளில் ஆறு மாதத்துக்கே மழை. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் மூன்று மாதத்துக்கே மழை. அதனால் வளர்ச்சி மெதுவாகவே இருக்கும். ஆனால் இப்பகுதிகளில் தேக்கு மிக அதிகம். மொழிவாரி மாநிலங்கள் பிரிவினைக்குப் பிறகு, அதிக தேக்கு மரங்கள் இருந்த ஆந்திரா, கேரளா எல்லாம் தனித்தனியாகப் போய்விட்டன, என்பதால் தமிழ்நாட்டில் தேக்கு மிகவும் குறைவு.

''அந்தச் சமயத்தில் அ த ா வ து 1956-ல், தலைமை வனப் பாதுகாவலராயிருந்த என் குருநாதர் வி.எஸ். கிருஷ்ணசுவாமி, 'நாம் புதிதாகத் தேக்கை உற்பத்தி செய்தாக வேண்டும்' என்று யோசனை சொன்னார். ஏரிகளும், வாய்க்கால்களும் உள்ள, காவேரி டெல்டா பகுதிகள் இதற்குத் தகுதியானவை என்றார். அன்று பலரும் அவரைக் கேலி செய்தார்கள். அவரது யோசனையைத் தட்டிக் கழிக்கக்கூடப் பார்த்தார்கள். ஆனால் அவர் விடாப்பிடியாக இருந்தார். தஞ்சாவூர் தேக்கை அப்போது வளர்க்கத் தொடங்கினோம்.

''இன்றைக்கு அதே காவிரிப் படுகையில், சுமார் 50,000 ஏக்கர் நிலங்களில், தேக்கு மரங்கள் வளர்ந்து நிற்கின்றன. இந்தப் 'பச்சைத் தங்க'த்தின் விலைமதிப்பு 400 கோடி ரூபாய்க்கும் மேல்! 9 அடி சுற்றுள்ள ஒரு பெரிய தேக்கில் இரண்டரை அடிப் பலகை கிடைக்கும். ஒரு மரம் ஐந்து லட்சம் ரூபாய் பெறும்!

''சென்ற நவம்பரில் ஏற்பட்ட புயலில், சுமார் பத்தாயிரம் மரங்கள் சாய்ந்த போது, அவற்றைத் தரம் பிரித்து விற்றதில் மாநில அரசுக்கு மார்ச்சில் மட்டும் 52 லட்ச ரூபாய் கிடைத்தது; ஏப்ரலில் இன்னுமொரு 50 லட்சம் கிடைக்கும்!''

''உங்கள் கூற்றுப்படியே 60 வருடம், 70 வருடம் காத்திருக்க வேண்டுமே? இந்த விளம்பரங்கள் 20 வருடங்களில் அறுவடை என்கின்றனவே?''

''இது மரங்களின் தரத்தைப் பொறுத்த விஷயம். நிலத்தில் ஈரப்பதம் இருப்பது கூடுதலான சாதகம். காடுகளில் தன்னால் 60 வருடத்தில் வளர்ந்து பயன் தரும் மரம் செம்மையாகப் பயிரிடப்படும் போது மும்மடங்கு வளர்ச்சித் திறன் பெற்று 20 வருடங்களிலேயே பலன் தந்துவிடுகிறது. ஒரு கன மீட்டர் தேக்கு 24,000 ரூபாய்க்கு விற்றிருக்கிறது!

''தேக்கு மரத்துக்குத் தேவை இருக்கிறது. 20 வருடங்கள் கழித்தும் டிமாண்ட் இருக்கும். இன்னும் கூடுதலாகவே இருக்கும். கட்டடங்கள் கட்டுவது பெருகி வருகிறது. அதனால் உள்நாட்டுத் தேவைகளுக்கு ஈடு கட்டியது போக, வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு நிச்சயம் இருக்கிறது. எனவே இதில் முதலீடு செய்வது மிகுந்த லாபகரமானதாகவே இருக்கும்!''


- சித்தார்த்


கோண்டாஸ்


வி.எஸ். கிருஷ்ணசுவாமி



"நல்ல வேளை என் வயித்துல பாலை வார்த்தீங்க."
"எப்படி?"
"நோ என்ட்ரியில வசமா வந்து சிக்கி இருக்கீங்களே!"
- வாசி ஜான்



அதி நவீன ஆபரேஷன் தியேட்டர்

"ஆபரேஷன் வெற்றி; ஆனால் நோயாளி இறந்து போனார்" என்று கூறப்படுவது வெறும் ஜோக்காக மட்டுமல்ல; அதில் உட்பொருள் உண்டு.

ஆபரேஷன் வெற்றி என்ற நிலையிலும் மரணம் நிகழ என்ன காரணம்? எத்தனை தான் சுத்தமான ஆபரேஷன் தியேட்டரில், எத்தனை சுத்தமான உபகரணங்களைக் கொண்டு ஆபரேஷன் செய்தாலும், வெளியிலிருந்து உடலுக்குள் புகுந்து விடும் நுண்கிருமிகள் காரணமாகச் சில சமயம் மரணம் சம்பவித்து விடலாம்.

வெற்றிகரமாக ஆபரேஷன் செய்து கொண்ட நூறு பேரில் இருபத்தியாறு பேர் இறந்து போனார்கள் என்கிற நிலையில் கூட அந்த மருத்துவமனை சிறந்த மருத்துவமனை என்று லண்டன் மாநகரிலேயே கருதப்பட்ட காலம் ஒன்று உண்டு.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் ஜோஸப் பேரான் லிஸ்டர் என்பவர் கார்பாலிக் அமிலம் மூலம் இந்த நோய்த் தொற்று ஏற்படாமல் காக்கும் முறையைக் கண்டறிந்தார். அதன் பிறகுதான் ஆபரேஷன் செய்து கொண்டவர்களில், நுண்கிருமிகளால் பாதிக்கப்பட்டு இறப்போரின் சதவிகிதம் இருபத்தியாறிலிருந்து 8.9 சதமாகக் குறைந்தது.



இப்போது இன்னும் குறைக்கப்பட்டிருக்கிறது. அதாவது 8.9 சதத்திலிருந்து 0.3 சதம் அளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு அதி நவீனக் கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நவீனக் கருவிகளுடனான ஆபரேஷன் தியேட்டர் ஒன்றைத் தமது 'எலும்பு - மூட்டுச் சிகிச்சை' மருத்துவமனையில்

புதிதாக உருவாக்கியிருக்கிறார் டாக்டர் எஸ். சௌந்திரபாண்டியன்.

மற்ற ஆபரேஷன் தியேட்டருக்கும் இதற்கும் என்ன வித்தியாசம்?

''சாதாரண ஏ.சி.க்கள் மணிக்கு இரண்டு முறைதான் புதிய காற்றை உள்ளே அனுப்புகின்றன என்றால், இதில் பொருத்தப்பட்டுள்ள விசேஷ ஏ.சி. அமைப்புகள் மணிக்கு இருநூறு முறை புதிய காற்றை உள்ளே அனுப்புகின்றன. அப்படி உள்ளே வருகிற காற்றும் ஹீபாஃபில்டர் என்கிற வடிகட்டி அமைப்பின் வழியாக வருவதால், ஷவரில் கம்பிகம்பியாகத் தண்ணீர் பொழிகிற மாதிரி ஒரே சீராக சர்ஜிகல் மேஜை மேல் பொழிகிறது.

''சாதாரண சர்ஜிகல் தியேட்டர்களில் பயன்படும் ஏ.சி. அமைப்புகளில் மைக்ரோவீ (Microvee) என்கிற வடிகட்டிகளில் ஐந்து மைக்ரான் அளவுள்ள கிருமிகள் வரைதான் வடிகட்டப்படும். ஆனால், இந்தப் புதிய அமைப்பிலுள்ள 'லாமினார் ஏர்ஃப்ளோ' வடிகட்டிகளில் 0.3 மைக்ரான் அளவுக்கு நுண்ணுயிர்கள் வடிகட்டப்படுகின்றன!

''ஆபரேஷன் தியேட்டரின் பக்கச் சுவர்களில் பாலி யூரிதீன் பூச்சு செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பூச்சில் தூசு படியவே முடியாது. காரணம், படியவரும் தூசுகளை ரப்பர் மாதிரி உதைத்துத் தள்ளிவிடும் இயல்புடையது இந்தப் பூச்சு. அதே போல் தரைப் பகுதியிலுள்ள 'பாலி வினைல்' பூச்சு, நோய்க்கிருமிகளுக்கு இடம் தராது.

''இவற்றோடு இன்னொரு மிக முக்கியமான விஷயம், 'கிரீன் ஹவுஸ்' என்று சொல்லப்படும் முகமூடிகள்தான்! ஆபரேஷன் நடக்கும்போது உள்ளிருக்கும் டாக்டர்கள், நர்ஸ்கள் என்று அனைவரும் அணியக் கூடிய முகமூடிகள் இவை.

''சாதாரணமாக நாம் விடும் மூச்சுக் காற்றிலிருந்து கூட நுண்கிருமிகள் வெளி வந்து நோயாளியின் உடலுக்குள் புகுந்து விடும். அதிலிருந்து நோயாளியைப் பாதுகாக்க உதவுவதுதான் இந்த முகமூடிகள். இந்த முகமூடி, மூச்சுக் காற்று, வியர்வை போன்று இயல்பாக வெளிப்படும் அசுத்தங்களை எல்லாம் அப்படியே முழுமையாக உறிஞ்சிக் குழாய்களின் மூலம் அறைக்கு அப்பால் வெளியேற்றி விடுவதால், நோயாளிக்குப் பூரணமான பாதுகாப்புக் கிடைக்கிறது!'' என்றார் டாக்டர் சௌந்திரபாண்டியன்.

மற்ற ஆபரேஷன்களில் பாக்டீரியாக்களால் ஏற்படும் நோய்த் தொற்றை விட, மூட்டு இணைப்பு ஆபரேஷன்களின் போது ஏற்படும் நோய்த் தொற்றுதான் மிகவும் ஆபத்தானதாம். அதனால்தான் தமது மருத்துவமனையில் இந்த நவீன அமைப்புகளைக் கொண்ட ஆபரேஷன் தியேட்டரை உருவாக்கியிருப்பதாகச் சொல்கிறார், சென்னை மருத்துவக் கல்லூரியின் முடக்கு இயல் துறைப் பேராசிரியராகச் சுமார் இருபதாண்டு காலம் பணியாற்றிய டாக்டர் சௌந்திரபாண்டியன்.

- சுப்ர. பாலன்



யான் பெற்ற துன்பம்!

சென்ற முறை திருவள்ளுவர் மூலம் சென்னை சென்று திரும்பும் போது தலையைச் சாய்த்துக் கொண்டு, வழக்கம்போல் உறங்கினேன். வீடு திரும்பியது முதல் பின் தலையில் கழுத்தின் மேல்புறம் லேசாக அரிக்கத் தொடங்கி பெரியதாகத் தாங்க முடியாது போய், டாக்டரிடம், fungal infection என வைத்தியம் செய்து கொண்டு வருகிறேன்.

எனவே பயணிகள் வருமுன் காப்போராகக் கனத்த துண்டு ஒன்றைச் சாய்மானப் பகுதியில் போட்டுக் கொண்டு சாய்ந்து உறங்குவது நலம். யான் பெற்ற துன்பம் மற்றவர் பெறாதிருக்க வேண்டும்.

- கைலாசம்

☆ ☆ ☆ ☆ ☆ ☆

நல்ல மருமகன் கிடைத்தவன் ஒரு மகனை அடைகிறான்; கெட்ட மருமகனை அடைந்தவன் ஒரு மகளை இழக்கிறான்.

- பிரெஞ்சுப் பழமொழி

தகவல் : ஆர். கே. லிங்கேசன்



... பருகுவீர் பரிபூரண உணவை

ஆம், பருகுவீர் காம்ப்ளான். உங்கள் உடலுக்குத் தேவையான அனைத்து 23 இன்றியமையாத ஊட்டச்சத்துக்களும் விஞ்ஞான ரீதியில் திட்டமிட்ட விகிதங்களில் அடங்கியுள்ள திட்டமிட்ட பரிபூரண உணவாகும் காம்ப்ளான்.



23
மூலாதார
சத்துணவுகள்
திட்டமிட்ட
விகிதங்களில்

பால் சேர்க்கத்
தேவையில்லை

காம்ப்ளான்®

திட்டமிட்ட பரிபூரண உணவு.



GX/20/202 TAM R2

ஷாக் அளிக்கும் ஷாப்பிங் மோகம்!

மயிலாப்பூரின் பிரம்மாண்டமான ஒரு டிபார்ட்மெண்டல் ஸ்டோரின் இரண்டாவது தளத்திலிருந்த அலங்கார உபயோகப் பொருள்கள் பகுதியில், தெர்மாஸ் பிளாஸ்க்குகளை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தார், டன்லப் நிறுவனத்தில் பணி புரியும் பிச்சுமணி.

''இன்றைக்கு இதுமாதிரி ஷாப்பிங் செய்வது என்ற தீர்மானத்துடன்தான் வந்தீர்களா?''

''அதுதான் இல்லை! ஹேர் புரோவிஷன்ஸ் வாங்க வந்தோம். அப்படியே மேலே ஏதாவது வாங்கலாம் என்று வந்தோம். கல்யாண சீசன் வருகிறது. அதனால் அவ்வப்போது பரிசுப் பொருள்கள் தேவைப்படும் என்பதால் இங்கே வந்ததை ஷாப்பிங் செய்யவும் பயன்படுத்திக் கொள்ளலாமே என்று பார்க்கிறோம்!'' என்றார் அவர்.

''வெளியூர்களுக்குச் செல்லும் போது, பார்க்கும் பொருள்கள் பிடித்திருந்தால் எதுவானாலும் வாங்கி விடுவது உண்டு!'' என்ற பிச்சுமணி ''எந்தப் பொருளுக்கும் உபயோகம் இல்லாமல் போகாது!'' என்று அடித்துச் சொல்லுகிறார்!

இவரைப் போல் நிறையப் பேர் இருக்கிறார்கள். உபயோகமான - அத்தியாவசியமான பொருள்களை மட்டும்தான் வாங்குவது என்றில்லாமல், பிடித்திருக்கும் பொருள் எதுவானாலும் முதலில் வாங்கி விடுவது; பிறகுதான் அவற்றுக்கான உபயோகங்களைப் பற்றி யோசிப்பது! வீட்டிலிருந்து புறப்படும் போது இன்னதுதான் வாங்க வேண்டும் என்று தீர்மானத்துடன் புறப்பட்டாலும் கடையில் நுழைந்த பிறகு, பார்த்த சிலவற்றின் மீது திடீர் மோகம் ஏற்பட, வாங்கிப் போட்டு விடும் பழக்கம் சிலருக்கு உண்டு.

ஷகிலா கருணாகரன்



இது மாதிரியானவர்களைச் சுலபமாக வாங்கத் தூண்டுவது மூன்று விஷயங்கள். ஒன்று இப்போது மிகவும் பிரபலமாகிக் கொண்டிருக்கும் கிரிடிட் கார்டு வசதிகள். இரண்டாவது, கவர்ச்சிகரமான - டீ.வி. விளம்பரங்கள். மூன்றாவது, உபயோகிப்பாளரின் மனங்களைச் சுண்டி இழுக்கிற வகையில் பொருள்களை அடுக்கி வைத்திருக்கும் டிபார்ட்மெண்டல் ஸ்டோர்கள்.

''எந்தவொரு பொருளையும் பக்கத்தில் போய்த் தொட்டுப் பார்க்கலாம்; கையில் எடுத்துப் பரிசோதித்தும் பார்க்கலாம் என்கிற நிலையில், எப்படி வாங்காமல் வர மனசு இடம் கொடுக்கும்?'' என்று கேட்கிறார் இளைஞர் சுந்தரம்.

''டிபார்ட்மெண்டல் ஸ்டோர்களுக்குக் குழந்தைகளையும் கூட்டிக் கொண்டு போய் விட்டால், அவ்வளவுதான்! பிஸ்கட், சாக்லேட், விளையாட்டுப் பொம்மைகள்... என்று டெலிவிஷன் விளம்பரங்களில் வருவதை நேரடியாகவே பார்க்கும் குழந்தைகள் வாங்கித் தரச் சொல்லி அடம்பிடிக்க ஆரம்பித்து விடுகின்றன! ஒன்றிரண்டாவது வாங்கித் தராமல் எப்படி அவர்களைச் சமாதானப்படுத்த முடியும்?'' என்கிறார் இந்து.

''டெலிவிஷன் விளம்பரங்கள், வாங்கத் தூண்டுகின்றனவா?'' என்ற போது, ''நிச்சயமாக. குறிப்பாகக் குழந்தைகளை அந்த விளம்பரங்கள் மிகவும் ஈர்க்கின்றன. அடுத்த முறை அம்மாவோடு கடைக்குப் போகும் போது, என்னென்ன வாங்கித் தரச் சொல்ல வேண்டும் என்பதை ஒரு லிஸ்டாகவே மனத்திற்குள் தயார்படுத்திக் கொள்கின்றன, குழந்தைகள்!'' என்கிறார் இந்து.

குழந்தைகள் ஒரு புறம் இருக்கட்டும். பெண்மணிகள் என்ன செய்கி

றார்கள்? இவர்களை விளம்பரங்கள் ஈர்ப்பதில்லையா?

''ஈர்க்காமல் என்ன?'' என்கிறார் மளிகைக் கடைக்காரர் அன்வர். ''கடைக்கு வந்து பொருள்களை வாங்கும் பெண்மணிகளில் பலர், வந்ததும் கேட்கும் முதல் கேள்வி, என்னென்ன வாங்கினால் என்னென்ன இலவசமாகக் கிடைக்கும்? என்பதுதான். அப்படிப்பட்ட இலவசங்களுக்காகவும் நிறையப் பொருள்கள் விற்பனையாகின்றன!'' என்கிறார் அன்வர்.

''இப்போது புதிதாக ஒரு குளி





☛ மக்களைக் கவரும் டிபார்ட்மெண்டல் ஸ்டோர்கள்......

யல் சோப்பை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். விலை பத்து ரூபாய்க்கு மேல் என்பதால், அது எந்த அளவுக்கு விற்பனையாகும் என்று எனக்குச் சந்தேகமாகவே இருந்தது. அதனால், முதன் முதலில் அந்தக் கம்பெனியினர் வந்து, அந்த சோப்பை எங்கள் ஸ்டோரில் வாங்கி வைக்கச் சொன்னபோது, மிகவும் குறைவாகவும் அவநம்பிக்கையுடனும்தான் வாங்கி டிஸ்பிளே செய்தேன். ஆனால், எதிர்பாராத விதமாக, அதைப் பார்க்கும் பலரும் வசீகரிக்கப்பட்டு வாங்க ஆரம்பித்து விட்டார்கள். இதற்கு அது பற்றிய விளம்பரங்களும் ஒரு காரணம் என்றுதான் நினைக்கிறேன்!'' என்கிறார் எம்.வி.ஜே. டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸின் உரிமையாளர் லலிதா கருமாரன்.

இவை போன்ற மனோநிலை ஒரு புறம் என்றால், ஆங்கில வருஷப் பிறப்பின் போது ஏதாவது ஒரு பொருளை வாங்கியே ஆக வேண்டும் என்று அதற்காகவே ஆண்டு முழுவதும் பணம் சேர்த்துக் கொண்டிருப்பவர்களும் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர்தான் கப்பராயன். ''அது என்னவோ, புத்தாண்டு அன்றைக்கு ஏதாவது ஒரு பொருள் வாங்கினால், மனத்தளவில் ஓர் உற்சாகம். இந்த ஆண்டு முழுவதும் நமக்கு நிறையப் பொருள் சேரும் என்கிற நம்பிக்கை. அதோடு புத்தாண்டு சமயத்தில் நிறையத் தள்ளுபடி செய்தும் தருகிறார்களே! அதுகூட ஒரு காரணம்தான்!'' என்கிறார் அவர்.

இவரைப் போன்ற ஆண்களாவது பரவாயில்லை. ஆண்டுக்கு ஒரு முறைதான்

ஏதாவதொன்றை வாங்கியே ஆக வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆனால் சில பெண்கள் - அதிலும் குறிப்பாக வேலைக்குப் போகும் பெண்கள், மாதம் ஒரு சேலையாவது வாங்கித்தான் தீர வேண்டும் என்று ஒரு வேண்டுதலைப் போல் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்! இத்தனைக்கும் அவர்களிடம் தேவைக்கு அதிகமாகவே சேலைகள் இருக்கும். ஆயினும் அதன் மேலுள்ள மோகம் குறையாது!

இது போதாதென்று தீபாவளிக்குக் காஞ்சிபுரம் பட்டு, பொங்கலுக்குப் பனாரஸ் பட்டு, பிறந்த நாளுக்கு மைசூர்ப் பட்டு, திருமண நாளுக்கு அகலக்கரைபோட்ட பட்டு... என்று இன்னொரு பக்கமும் சேலைகளின் பட்டியல் நீண்டு கொண்டே போகும்!

இன்னும் சில வேலைக்குப் போகும் பெண்களுக்கு எலக்டிரிக் குக்கர்கள் மேல் ஏக மோகம்! அதை வாங்கி ஓரிரண்டு முறை உபயோகப்படுத்திவிட்டு, ஆகிற மின்சார பில்லைப் பார்த்து அதை ஓரங்கட்டி வைத்திருப்பவர்கள் நிறையப் பேர்.

''மின்சாரக் குக்கருக்கு ஏகப்பட்ட மின்சாரம் செலவாகும் என்பது முன்பே தெரியாதா?''

''இருந்தாலும் ஓர் ஆசை. அதில் எப்படிச் சமையல் ஆகிறது என்று பார்க்க ஓர் ஆர்வம்!'' என்கிறார் அதை இப்போது உபயோகிக்காமல் வைத்திருக்கும் கமலா.

வேலைக்குப் போகும் பெண்களிடம் தான் இது போன்ற ஆசைகள் என்பதில்லை; இல்லத்தரசிகளாக வளைய வரும் பெண்களையும் இது போன்ற ஆசைகள் விட்டு வைப்பதில்லை!

வேலைக்குப் போகும் பெண்கள் முதல் தேதி மொத்தமாகப் பணம் கொடுத்துச் சேலை வாங்குகிறார்கள் என்றால், இவர்கள் தவணை முறையில் வாங்குகிறார்கள். அந்தச் சேலைகள் கொஞ்சம் பழசானதும் அவையே பாத்திரங்களாக உரு மாற்றம் கொள்கின்றன. அந்தப் பாத்திரங்களெல்லாம் அவசியமா அவசியமில்லையா என்பது பற்றியெல்லாம் அவர்கள் கவலைப் படுவதேயில்லை. கொடுக்கிற சேலைகளுக்கு எந்தப் பாத்திரம் கிடைக்குமோ, அதை வாங்கிப் பரணில் அடுக்கி வைத்து விடுகிறார்கள்.

இப்படிப்பட்டவர்களிடம் கேட்டால், ''எங்கள் பெண்களைத் திருமணம் செய்து அனுப்பும் போது வேண்டாமா? இப்போதே சேர்த்து வைத்தால்தானே ஆயிற்று. இல்லையென்றால் மொத்தமாக அப்போது வாங்குவதற்குச் சிரமப்பட வேண்டுமே!'' என்றுதான் சொல்கிறார்கள்.

ஆனால், ''இதில் ஒரு பாதிதான் உண்மை. பழைய சேலைகளை டிஸ்போஸ் செய்து கொண்டே இருந்தால்தானே, சேலையே இல்லை என்கிற பல்லவியைத் திரும்பத் திரும்பப் பாடிப் புதுப் புதுச் சேலைகளை வாங்கிக் கொண்டே இருக்க முடியும்! இதுதான் முக்கிய காரணம். மற்றதெல்லாம் பிறகுதான்!'' என்கிறார் பெயர் சொல்ல விரும்பாத ஒரு குடும்பத் தலைவர்.

ஆக, ஷாப்பிங் என்பது வீட்டுக்குத் தேவையான பொருள்களை மட்டும் வாங்குவதுதான் என்கிற நிலையெல்லாம் இப்போது மலையேறி விட்டது. தேவையோ, தேவையில்லையோ, பார்க்க அழகாக இருக்கிறது அல்லது அடிக்கடி விளம்பரங்களில் வருகிறது இல்லையெனில், பக்கத்து வீடுகளில் வாங்கியிருக்கிறபோது, நாம் மட்டும் வாங்காமலிருக்க முடியுமா என்கிற போலி கௌரவத்திற்காக வாங்குவது என்கிற நிலை இப்போது அதிகரித்து வருகிறது. பலருக்கு ஷாப்பிங் ஒரு மோகமாகவே ஆகிவிட்டது என்பது வருத்தத்திற்குரிய உண்மை!

- பிரின்ஸ், சாருகேசி

அட்டையில் :
திருமதி கீதா சீனிவாசன்
அட்டை வண்ணப்படமும் படங்களும்: **யோகா**



❑ நரசிங்க அண்ணவாரு குடும்பத்தில் 110 உறுப்பினர்கள்! இக்குடும்பம் கர்நாடக மாநிலத்தில் லோசார் என்ற ஊரில் உள்ளது. 65 வயதான பீமண்ணா குடும்பத் தலைவர். வேளாண்மை இவர்களின் தொழில். 200 ஏக்கர் நிலம். பெண்கள் வீட்டு வேலைகளைச் செய்கிறார்கள். ஒரு வேளைக்குக் குறைந்தது 600 சோள ரொட்டிகள் சுட வேண்டும். பெண்களுக்கு அடுப்பங்கரையிலேயே பொழுது கழிகிறது. நரசிங்க அண்ணவாரு குடும்பத்தை அண்மையில் டி. வி. காரர்கள் வந்து படம் பிடித்துக் கொண்டு போனார்கள். பி. பி. சி. யில் ஐம்பது நிமிட நேரத்திற்கு நான்காவது அலைவரிசையில் காட்டுவதற்காக!

ஆதாரம் : சன்
தகவல் : சேலம் சக்திக்கொடி

பெரியவா துணை

ஆஸ்திக அன்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!



நடமாடும் தெய்வமாய் நமக்கு நாளெல்லாம் அருள்பாலித்து வரும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகள் வேதம் காட்டும் வழியே நல்வழி என்று இவ்வையகமே போற்றும் வகையில் தானே வழிகாட்டி வந்து கொண்டிருக்கிறார்கள்.

1. தர்மத்தின் மேல் பற்று - தன் தேன் சொரியும் அருள்வாக்குகளாலும்

2. எளியோருக்கு சேவை - 'பிடி அரிசி', நோயுற்றோருக்கு 'பிரசாதங்கள்' போன்ற திட்டங்களாலும்

3. வேதங்களைப் போற்றி பாதுகாத்திட - 'வேத ரக்ஷண நிதி டிரஸ்ட்' என்றும்

4. கோவில்களில் பூஜை செய்யும் எளியோரை வாழ்விக்க - 'கச்சி மூதூர் அர்ச்சகர்கள் க்ஷேமநல நிதி டிரஸ்ட்'.

என்றும் நமக்கெல்லாம் நன்மை தர ஏற்படுத்தி அவை எல்லாம் இன்று ஆல் போல் தழைத்து அருகு போல் வேர் விட்டு அருள் மழை பொழிந்து வருவது யாவரும் அறிந்ததே! அள்ள அள்ளக் குறையாத அக்ஷய நிதியாகவே மகா பெரியவா அருள் பெருகி வந்து கொண்டேயிருக்கிறது!

இப்படிப்பட்ட பரமாத்மாவை நாம் புரிந்து கொள்ள நம் சந்ததிகள் தெரிந்து கொள்ள அவர்கள் அருளாட்சி பற்றி குழந்தைப் பருவத்திலே அவர்கள் பட்டத்திற்கு வந்தது முதல் நாளை வரை நடந்துள்ள, நடந்து வருகிற நல்லவைகளை எல்லாம் சிற்பம், ஓவியம், இயல் மூலமாகத் தெரிவிக்க அருமையான மணி மண்டபம் ஒன்று காஞ்சி மாநகர் அருகில் ஓரிக்கை (ஓர் இரவு இருக்கை) என்னுமிடத்தில் எழும்ப உள்ளது. நூறாண்டு ஜயந்தி விழா காணவிருக்கும் நம் காஞ்சி மாமுனிவருக்கு அர்ப்பணமாகும் இந்த 'பெரியவா சதாப்தி மணி மண்டபம்' எழும்ப பூஜ்ய ஸ்ரீ காஞ்சி காமகோடி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளும் பாலப் பெரியவா ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கர விஜயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகளும் தங்களுடைய பரிபூரண அனுக்ரகத்தைத் தெரிவித்துள்ளார்கள். இப் பெரியவர்களின் ஆசிகளையே மூலதனமாகக் கொண்டு உலகெங்கிலுமுள்ள பக்தகோடிகள் தரப் போகும் சிறிய பெரிய காணிக்கைகளைக் கொண்டு இந்த 'பெரியவா சதாப்தி மணி மண்டபம்' எழும்புகிறது. அயோத்தி ராமனுக்கு அன்று உதவிய அணில் போன்று ஏழை எளியோர் எல்லோருமே இதற்குப் பொருளுதவி அளித்திட வேண்டும் என்பதே எம் அவா. கொடுத்திடும் தொகை ஒரே ரூபாயாக இருப்பினும் குருபக்தி அதற்குப் பெருமை சேர்ப்பதால், அதை உடனே தந்து உதவிட முன்வர வேண்டும் - மகா பெரியவா அருளாசியால் வாழ்வில் எல்லா நன்மங்களங்களையும் பெற இதை ஒரு அரிய வாய்ப்பாகக் கருதித் தந்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். அணி அணியாய்த் திரண்டு மணியார்டரிலும் அனுப்பலாம். காசோலை, டிமாண்டு டிராப்ட் என்றும் காணிக்கைகளைக் குவித்திடலாம். வருமான வரிச் சட்டம் 80 'ஜி' பிரிவின்படி வருமான வரி விலக்கும் காணிக்கைகளுக்கு உண்டு.

''ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மகாலக்ஷ்மி மாத்ருபூதேஸ்வரம் டிரஸ்ட்'' என்கிற பெயருக்கு நிதி சேர்க்கும் முகவரிகள் :-

1. 'கடம்' வித்வான் ஸ்ரீ டி. எச். விநாயகராம், 74, பிள்ளையார் கோவில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

2. ஸ்ரீ சி. ஆர். ரவிச்சந்திரன், 57, கிருஷ்ணன் கோவில் தெரு, சேலம் - 636 001.

3. ஸ்ரீ வி. ராமரத்னம், 104, துலிப்ஸ் அபார்ட்மெண்ட்ஸ், 6-3-655, சோமாஜிகுடா, ஐதராபாத் - 500 482.

(காஞ்சி மாமுனிவரை உலகினுக்கே தந்து வான் புகழ்கொண்ட தாயார் மகாலக்ஷ்மி அவர்களுடைய திருநாமத்தோடு தானே தாயாகிக் காத்தருளிக் கொண்டிருக்கும் நம் ஈசனார் திருப்பெயரையும் இணைத்து உருவானது இந்த ''டிரஸ்ட்'').

மக்கள்: மன்னர்களா? ஏமாளிகளா?


சென்னையின் மையமான பகுதியிலிருந்து மிருகக் காட்சி சாலை வண்டலூருக்கு மாறினாலும் மாறியது. அந்த விசாலமான, பல கோடி மதிப்புள்ள இடத்தின் மீது பலருக்கு ஒரு கண். பழனி ஜி. பெரியசாமிக்கோ இரண்டு கண்களும் அதன் மீதுதான்! ஆனால் அங்கே ஒரு பசுமையான நந்தவனம் (பொடானிகல் கார்டன்) அமைய வேண்டும் என்பது மக்கள் நலனைக் கருதும் பலரது அபிப்பிராயம். புகையும் தூசியும் நிறைந்த நகரின் மத்தியில், இந்தப் பசுமைச் சூழ்நிலை மக்களின் ஆரோக்கியத்துக்குக் காவலாக இருக்கும் என்று சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றி அறிந்தவர்கள் கூறுகின்றனர். ஆனால் அது நடக்காது போலிருக்கிறது. 'மக்கள் இந் நாட்டின் மன்னர்கள் அல்ல; ஏமாளிகள்' என்பதுதான் நிஜமாகும் போல் தெரிகிறது.



▪ பழனி ஜி. பெரியசாமி

எம்.ஜி.ஆர். ஆட்சியிலேயே அங்கு ஒரு ஐந்து நட்சத்திர சொகுசு ஹோட்டலும் உல்லாச உலகும் அமையும் திட்டத்துக்கு நிலம் ஒதுக்கப்படவிருந்தது. தமது அமெரிக்க நண்பர் பழனி ஜி. பெரியசாமிக்கு எம்.ஜி.ஆர். காட்டும் சலுகை என்பதாகக் கண்டனங்கள் எழுந்தன. கல்கி உள்பட பல பத்திரிகைகள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் வரைபடத்தின்படியே மேற்படி இடம், திறந்தவெளி பொழுதுபோக்கு இடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டின. மேலும் 50 கோடி பெறுமானமுள்ள நிலம் இரண்டரை கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டின.

எம். ஜி. ஆர். அரசு எதிர்ப்பை லட்சியம் செய்யவில்லை. வேலைகள் தொடங்கப்பட இருந்த சமயம் எம்.ஜி.ஆர். காலமானார். பின்னால் வந்த தி. மு. க. அரசு, பல்லவா ஹோட்டல் சம்பந்தமாகப் போடப்பட்டிருந்த அரசு ஆணையை ரத்து செய்தது. இதை எதிர்த்து கோர்ட்டுக்குப் போன பழனி ஜி. பெரியசாமி, பின்னர் கேஸை வாபஸ் பெற்றுக் கொண்டார். அங்கு



☛ முன்னாளில் மிருகக் காட்சி சாலை இருந்த பகுதி

ஹோட்டல் கட்டும் திட்டம் கைவிடப்பட்டதாகக் கூறினார்.

தி. மு. க. ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்பட்டு, தேர்தல் நடந்து, இப்போது மறுபடி அ. தி. மு. க. ஆட்சி அமையவும் அடிக்கிறது அதிர்ஷ்டக் காற்று மறுபடி பழனி ஜி. பெரியசாமிக்கு. ஒரு பேட்டியில் அவர், தமது திட்டம் மிக உன்னதமான சுற்றுலாத் திட்டம் என்றும் 'திட்டச் செலவு இருமடங்காகி விட்டபோதிலும் இரண்டாண்டுகளில் முடித்துக் காட்டுவேன்' என்றும் பெருமிதத்தோடு கூறியிருக்கிறார். அரசு பச்சைக் கொடி காட்ட வேண்டியதுதான் பாக்கி.

இதைப் பார்த்து விட்டு மக்கள் உரிமைக் கழகம் (consumer action group), 'அடடா! இப்படி மக்கள் உரிமை பறிபோகிறதே, கேட்பார் இல்லையா?' என்று ஒரு சுற்றறிக்கையை எல்லாப் பத்திரிகைகளுக்கும் அனுப்பியுள்ளது. இதோ நாமும் எழுதி விட்டோம்.

'அரசுக்குரிய நிலம் என்பது உண்மையில் மக்களுக்குச் சொந்தமான நிலம்; அதைக் குற்றம் குறைகூற முடியாத விதத்தில் கையாள வேண்டும்' என்ற உணர்வு ஆட்சியில் உள்ளோருக்கு இருப்பது அவசியம். ஆனால் ஜெ அரசு செயல்படுகிற ஜோரைப் பார்த்தால் மக்கள் உரிமை மதிக்கப்படுமா, சந்தேகமாகத்தான் இருக்கிறது.

– தில்லப்பா


படம் : ராஜன்

அடுத்த இதழில்...

●● ராஜீவுக்குப் பின் இந்தியா
– ஸ்பெஷல் ரிப்போர்ட்



●● பரமாச்சாரியாள் ஜயந்தியையொட்டிய சிறப்புக் கட்டுரை



வர்றா பாரு, ஜான்சி ராணி...!
பத்திரிகைகள் உஷாரு...
சுப்ரீம் கோர்ட் ஸலீர், ஸலீர்...
மத்திய அரசு மரியாதை போயிடும்...
பாங்காரம்பா வாங்கிக் கட்டிக்கப்பா...
சங்கராச் சாரியார் சாக்கிரதை...!
அபரிமித மெஜாரிட்டி
வீரப்பன்
ராஜாராம்
மந்திரி பதவி போயி, இப்பக் கட்சிப் பதவியும் போயிடிச்சி... அய்யோ, பாவம்!
கட்சிப் பதவி போயிடுச்சி, மந்திரி பதவி போக ரொம்ப நாளாகாது...
இவங்க அடிச்சுக்கப் போயி தேர்தல்ல வந்து தொலைஞ்சி நம்ம தலை வீங்காமே இருக்கணும்!
நரசிம்மராவ்
காங்கிரஸ் மாநாடு
திருப்பதி மாநாடு



கல்கி

1992
மே 17
மலர் : 50
இதழ் : 42
ஆங்கீரச
வைகாசி 4

'ஜெ'யும் ஜால்ராவும்

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு நெருக்கமாக உள்ளவர்கள் அவருக்கு நல்லது செய்வதாகத் தெரியவில்லை. அதிகாரிகள் - அமைச்சர்கள்; நண்பர்கள் - கட்சிப் பிரமுகர்கள் யாராயினும் சரி, ஜெயலலிதா புகழ்பாடுவது எளிது. ஆனால் எளிதான காரியத்தைச் செய்து விட்டுப் போவதில் சிறப்பில்லை. நல்லதை எடுத்துச் சொல்ல வேண்டும். கசப்பான விஷயமானாலும் கூற வேண்டும். அதுதான் முதல்வருக்கு நல்லதை எண்ணுவோரின் கடமை. 'ஜெ'யும், 'ஜால்ரா தட்டியது போதும், நல்லது கெட்டதை எனக்கு எடுத்துச் சொல்வோர்தான் தேவை' என்று கண்டிப்புடன் தம்மைச் சூழ இருப்போரிடம் கூற வேண்டியது அவசியம்.

உதாரணமாக, தூத்துக்குடி விமான நிலையத்தைத் திறந்து வைக்கச் சென்ற முதல்வர், அங்கு தாம் என்ன பேசுவது என்பது பற்றி அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்தாரா? அப்படி யோசித்திருந்தால் மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து நடத்திய விழாவில் கட்சி அரசியல் பேசியிருப்பாரா? சிந்திக்க வேண்டும்.

விமானம் என்பது மேல் தட்டு மக்கள் பயன்படுத்துவது. அதனால் ஏழை பாழைகளுக்கு என்ன பயன்? அதை எடுத்துச் சொல்ல வேண்டும். 'தொழிலதிபர்களும் அதிகாரிகளும் வந்து போவது எளிதாகிறது. அவர்கள் நேரம் மிச்சப்படுகிறது. அவர்கள் வந்து போக வசதியும் அதே நேரத்தில் அனல் மின் நிலையத்தின் உற்பத்தியும் அதிகரிக்க, இந்த வட்டாரத்தில் தொழில்வளம் பெருகும். இது வேலை வாய்ப்புக்களை அதிகரிக்க, மக்கள் பயன் பெறுவர்' என்றெல்லாம் மக்களுக்கு அறிவூட்டுவது போல் பேசாமல், வந்த காரியத்தை மறந்து, ''என்னைப் பற்றித் தவறாக எழுதும் பத்திரிகைகளை மக்கள்தான் தண்டிக்க வேண்டும்'' என்றா கூறுவது? ஏற்கெனவே இங்கு ஆளும் கட்சிக்காரர்களின் தர்பார் தங்கு தடையின்றி நடக்க, அதனைத் தடியடி தர்பாராக மாற்ற அல்லவோ முதல்வரின் கூற்று துணைபுரியும்! சட்டத்தின் ஆட்சி செத்து மடியவல்லவா உதவி செய்யும்!

''சட்டமன்றத்தின் தீர்ப்பை எதிர்ப்பவர்கள் மக்களின் எதிரிகள்'' என்றா சொல்வது? மன்றத்தில் அமர்ந்திருப்பவர் எல்லோரும் மக்கள் அனைவரது ஏகோபித்த ஆதரவைப் பெற்றா வந்திருக்கிறார்கள்? சட்டமன்றத்தில் ஓர் அநீதியான சட்டம் நிறைவேறினால் அதனை எதிர்க்க மக்களுக்கு உரிமை இல்லையா? செலக்ட் கமிட்டி என்றும், நீதிமன்றம் என்றும், 'ரிட்' மனு என்றும் ஏராள பாதுகாப்புக்கள் எதற்காக?

முதல்வர்தான் இப்படி பேசுகிறார் என்றால், மத்திய அமைச்சர் ஃபாரூக், 'ஜெ' வர வேண்டும் என்பதற்காகவே விமான நிலையம் கட்டி முடிக்கப்பட்ட பிறகும் திறப்பு விழாவுக்காக இரண்டு மாத காலம் காத்திருந்ததாகப் பெருமையோடு கூறுகிறார்! தொழிலகமோ, விமான நிலையமோ கோடிக்கணக்கில் முதலீடு செய்த பிறகு, அதனை இயக்காமல் தாமதித்தால் அதனால் ஏற்படக்கூடிய லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டத்தை யார் தருவார்கள்? ஃபாரூக்கா தரப் போகிறார்? இந் நாட்டின் ஏழை மக்கள் அல்லவா தாங்குகிறார்கள் நஷ்டத்தை!

இதெல்லாம் போதாக்குறைக்கு, உச்சநீதி மன்றத்தை எதிர்க்கிற ஒரு நிலைக்குத் தமிழக சட்டமன்றமும் அரசும் வந்து விட்டதானது மிகவும் வருந்தத்தக்கது. 'உரிமைக் கமிட்டியின் முடிவு; சபாநாயகர் தீர்ப்பு' என்றெல்லாம் கூறி, தமக்குச் சம்பந்தமில்லாதது போல் 'ஜெ' நழுவி விட முடியாது. அவர் கோடி காட்டினால் போதும், நிலைமை சுமுகமாக மாறி விடும் என்பது அவருக்கே தெரியும். அவரை மீறி யாரும் எதுவும் செய்து விட முடியாது - இன்றையச் சூழ் நிலையில்.

உச்சநீதி மன்றத்தை மட்டுமின்றி, 'ஜெ' அரசு, இந்தியப் பத்திரிகைகள் அத்தனையையும் இன்று பகைத்துக் கொண்டிருக்கிறது. ரொம்ப ரொம்ப யோசித்து நிதானத்துடன் செயல்படும் ஹிந்து பத்திரிகை கூட, கண்டுக் கார்ட்டூன் போட்டு 'ஜெ'யைக் கண்டிக்கிறது என்றால், மற்ற பத்திரிகைகள் பற்றிக் கேட்கவே வேண்டாம். இது நல்லதா? ஜெக்கு நன்மை பயக்குமா? சாணக்கியமாகுமா?

ஜெயலலிதா என்ன பேசினாலும் எப்படி நடந்து கொண்டாலும் சாமானிய மக்கள் அவர் பக்கமே சாய்வார்களாயிருக்கலாம். இன்னும் ஒரு தேர்தலுக்கு வோட்டு அறுவடை பற்றிக் கவலையில்லாமலும் இருக்கலாம். ஆனால் சரித்திரம்? அது என்ன சொல்லும்? அதையும் ஞாபகத்தில் வைக்க வேண்டும் 'ஜெ'.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.

பம்பாய்க் கடிதம் :

சோகத்தின் விளைவாக ஒரு சாதனை!



காவஸ்கர்

பணம் உள்ளது போல் தம்மிடம் குணமும் உண்டு என்று நிரூபித்துள்ளார் திருமதி பாரு சோராப்ஜி கரஸ். நீண்ட காலமாகத் தமது வீட்டில் சமையல்காரராக இருந்து வருபவர் ஒரு விபத்தில் தீப்புண்ணுக்கு ஆளாக, பையகுல்லா, மசினா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதும் தமது 75 வயதையும் பொருட்படுத்தாமல் அந்தச் சமையல்காரருக்கு அருகிலிருந்து சேவை செய்தார். கண்ணும் கருத்துமாகக் கவனித்துக் கொண்ட போதிலும் பலனில்லை அவர் இறந்து விட்டார். இப்போது அதே மருத்துவமனையில் திருமதி பாருவின் முயற்சியால் ஒரு கோடியே நாற்பது லட்சம் செலவில் தீப்புண் ஆராய்ச்சிக்கு ஒரு தனிப்பிரிவே தோன்றியிருக்கிறது. இதில் திருமதி பாருவின் நன்கொடை மட்டுமே பத்து லட்சத்துக்கும் அதிகம். ஜே. ஆர். டி. டாடா தொடங்கி வைக்கும் இந்தப் பிரிவில் ஏழைகளுக்கு இலவச வைத்திய உதவி கிடைக்கும். தமது சமையல்காரர் இறந்து ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு தமது இவ்வயதில், ஒரு சோகமும் கூட சோர்வற்ற சாதனையாக மாற முடியும் என்று நிரூபித்திருக்கிறார் திருமதி பாரு.

தங்கமான பெண்மணிக்குப் பரிசு

சுற்றுச் சூழலைப் பாதுகாக்க முயற்சி எடுக்கும் 18 சர்வதேச நிறுவனங்கள் சேர்ந்து ''கோல்ட்மேன் பரிசு'' வழங்குகின்றன. கண்டத்துக்கு ஒருவராக ஆறு பேரை ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கின்றன. இந்த ஆண்டு ஆசியா கண்டத்தில் இப் பரிசைப் பெறுபவர் ஓர் இந்தியர் : திருமதி மேதா பட்கர். பரிசின் மதிப்பு 60000 டாலர்! ஆதிவாசிகளுக்குத் தீங்கிழைக்கும் அணைத் திட்டங்களை எதிர்த்துப் போராடி பலமுறை சிறை சென்றிருக்கிறார் திருமதி மேதா. சென்ற ஆண்டு உண்ணாவிரதப் போராட்டத்தில் மரணத்தின் எல்லைக்கே சென்று திரும்பியவர். இப்போதும் மணிபெலி என்ற இடத்தில் அணைகட்டும் ஒரு திட்டத்தை எதிர்த்துப் போராடி வருகிறார்.

சிவசேனாவின் கட்டளையை மீறிய காவஸ்கர்!



பால்தாக்கரே

பம்பாயில் குடிநீர்த் தட்டுப்பாடு!

சென்ற சில ஆண்டுகளாகக் காணாத அளவு மகாராஷ்டிரத்தில் இந்த ஆண்டு வறட்சி நிலை தோன்றியுள்ளது.



மேதா பட்கர்

பம்பாயில் வீடுகளுக்குத் தண்ணீர் சப்ளை, மே முதல் தேதியிலிருந்து 10 சதம் குறைக்கப்படுகிறது. மாடுகளின் தேவைக்கான புல், தீவனங்களின் உற்பத்தி குறைந்ததால், பால் உற்பத்தி குறைய, மகாராஷ்டிர அரசு பாலின் விலையை லிட்டருக்கு இரண்டு ரூபாய் ஏற்றியிருக்கிறது! ''மகாராஷ்டிரா அரசு வறட்சியைப் போக்க போர்க்கால நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை'' என்று எதிர்க்கட்சிகள் கூச்சல், ரகளை செய்ய, சட்டமன்ற நடவடிக்கை பெரிதும் தடைப்பட்டது. இப்போதுதான் அரசு நிவாரணப் பணியில் முழு மூச்சாக இறங்கியிருக்கிறது. ஆயினும் நிஜமான நிவாரணமான ஜூன் மாத மழைக்குப் பம்பாய் காத்திருக்கிறது.

சிவசேனாவும், காவஸ்கரும்

சிவசேனா அவ்வப்போது புதுப்புதுப் பிரச்னைகளைக் கிளப்பிக் கொண்டே இருப்பது வழக்கம். ''சுனில் காவஸ்கர் பாகிஸ்தான் சென்று, அவர்களது கிரிக்கெட் விழாவில் கலந்து கொள்ளக் கூடாது''என்று ஓர் உத்தரவைப் போட்டார் பால் தாக்கரே. இது தேசாபிமானத்திற்கு எதிரான செயலாம். ஆனால் இதையும் மீறி காவஸ்கர் பாகிஸ்தான் சென்று திரும்பி விட்டார். பத்திரிகையாளர்கள் கேட்ட போது, ''அவருடைய கருத்து அவருக்கு, என் கருத்து எனக்கு. இது சுதந்திர நாடு'' என்றார். ''நுண்கலைகள், விளையாட்டுக்கள், பாரம்பரியப் பண்பாடு இவை அரசியலுக்கு அப்பாற்பட்டவை என்பதைச் சிவசேனா உணர வேண்டும்'' என்கிறார் எழுத்தாளர் ராகுல் சிங்- குஷ்வந்த்சிங்கின் மகன்.

- ராஜீவி நரசிம்மன்

600 கோடி ரூபாய் கோல்மால்!

கடந்த சில நாட்களாகவே பங்கு மார்க்கெட்டின் சரிவு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. ஏப்ரல் 27ஆம் தேதி வரை 4467 புள்ளியில் இருந்த பம்பாய் பங்கு மார்க்கெட்டின் sensitive index ஏப்ரல் 29 அன்று 3674 பாயிண்டுகளுக்குத் தடாலென்று சரிந்தது. (Sensitive index என்பது, விலைவாசி உயர்வை உணர்த்தும் cost of living index போல, பங்கு மார்க்கெட்டின் ஏற்றத் தாழ்வுகளை உணர்த்தும் குறியீடு)

இந்த ஆண்டு மத்திய அரசின் பட்ஜெட் வெளியாகும் வரை பம்பாய் பங்குமார்க்கெட்டின் sensitive index 2000 புள்ளியளவிலேயே இருந்தது. பட்ஜெட்டில் பொருளாதாரக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் காரணமாகப் பங்கு மார்க்கெட்டில் முதலீடு அதிகமாகி இந்தப் புள்ளி ஏறுமுகமாயிற்று என்றே பலரும் கருதி வந்தனர். ஆனால், இரண்டு மாதங்களில் அசாதாரண உயரத்தை அது தொட்ட போது பொருளாதார வல்லுனர்கள் கவலையுடன் சந்தேகமும் பட ஆரம்பித்தார்கள். ஆனால் மத்திய அரசின் நிதித் துறை இதைக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. ரிசர்வ் வங்கி கவர்னர் வெங்கிட்ராமணன் மட்டும் இந்த விபரீத உயர்வு குறித்துக் கவலை தெரிவித்தார். எனினும் நிதித் துறையிடம் நடவடிக்கை எடுக்கச் சொல்லி அவர் வலியுறுத்தவில்லை.

திடீரென்று பங்குகளின் விலை குறைந்து மார்க்கெட்டில் சரிவு ஏற்பட்ட போதுதான், பம்பாய் ஷேர் புரோக்கர் ஒருவர் (ஹர்ஷத் மேத்தா என்று நாளிதழ்கள் ஆதாரங்களுடன் எடுத்துச் சொல்கின்றன) சட்டவிரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது அம்பலமாயிற்று.

ஹர்ஷத் மேத்தா செய்தது என்ன?

ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவின் பணம் சுமார் அறுநூறு கோடி ரூபாயை இவர் தந்திரமாகக் கையாண்டு அத்தொகைக்குப் பங்கு மார்க்கெட்டில் விளையாடியிருக்கிறார். முன்னணி நிறுவனங்களின் பங்குகளை அதிக விலை கொடுத்து வாங்கியிருக்கிறார். ஒருவர் அதிக விலை கொடுக்கவும் அந்தப் பங்குகளுக்கு மார்க்கெட்டில் கிராக்கி ஏற்பட்டு அவற்றின் விலை ஒரேயடியாக உயர்ந்தது.

பங்குகளின் இயல்பான விலை உயர்வு அவற்றை வெளியிடும் நிறுவனங்களின் பொருளாதார ஸ்திரத்தன்மை, அவை அளிக்கும் டிவிடெண்ட், அவற்றின் திறமையான செயல்பாடு போன்றவற்றைப் பொருத்தே படிப்படியாக அமையும். அவ்வாறின்றி சில குறிப்பிட்ட பங்குகளின் விலை சரேலென்று உயரக் காரணம் ஒரு ஸ்டாக் புரோக்கரின் 'சித்து விளையாட்டுதான்' என்பது வெளியானதும் அவற்றின் விலை மீண்டும் குறைந்து விட்டது!

ஹர்ஷத் மேதாவுக்கு அறுநூறு கோடி எப்படிக் கிடைத்தது?

வங்கிகள் அரசாங்கக் கடன் பத்திரங்களை வாங்கும் கட்டாயத்தில் உள்ளன என்பதை முன்பே ஒரு கட்டுரையில் கூறியிருக்கிறேன். தனியார் நிறுவனங்கள் வங்கியில் கரண்ட் அகவுண்ட் வைத்துக் கொள்வது போல், வங்கிகளும் அரசாங்கக் கடன் பத்திரங்களை ரிசர்வ் வங்கியில் Securities General Ledger Account என்ற கணக்கில் வைத்திருக்கும்.

ஒரு வங்கி மற்றொரு வங்கியிடமிருந்து இக் கடன் பத்திரங்களை வாங்க விரும்பினால் ஒரு புரோக்கர் மூலமே அதைச் செய்ய முடியும். கடன் பத்திரங்களை வங்கிகள் ரிசர்வ் வங்கிக் கணக்கில் வைத்திருப்பதால் விற்கும் வங்கியின் இருப்பிலிருந்து வாங்கும் வங்கியின் இருப்புக்கு அவை வந்து சேர சுமார் நான்கு வாரங்கள் ஆகும். இந்த இடைப்பட்டக் காலத்துக்கு, பத்திரங்களின் உடைமை மாறி விட்டதற்கு அடையாளமாக, வாங்கும் வங்கிக்கு ஒரு ரசீது வழங்கப்படும்.

இப்படி அறுநூறு கோடி ரூபாய் மதிப்புள்ள பத்திரங்களை ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா வாங்குகையில் இடைத் தரகராகச் செயல்பட்டவர் ஹர்ஷத் மேத்தா. இப்பத்திரங்களுக்கான ர சீ து கைக்கு வந்து பதினெட்டு

◄ ஹர்ஷத் மேத்தா



மாதங்களாகியும் பத்திரங்களின் உடைமை மாறவில்லை என்பது தெரியவந்துள்ளது.

ஸ்டேட் பாங்க் அறுநூறு கோடி கொடுத்து வாங்கிய பத்திரங்களை இடைத் தரகர் ஹர்ஷத் மேத்தா வேறு வங்கிகளில் அடகு வைத்து, அதன் மூலம் பெற்ற பணத்தைக் கொண்டே பல்லாயிரக்கணக் கான ஷேர்களை வாங்கியிருக்கிறார் என்று நம்புவதற்கு இடமிருக்கிறது.

இந்த கோல்மால் வெளிப்பட்டதும் ஷேர்களின் விலை இறங்கி விட்டது :

	29.4.வரை	30.4.அன்று
ஏ.ஸி. ஸி.ஸிமெண்ட்	ரூ 8500	ரூ 6700
அபோலோ டையர்ஸ்	ரூ 400	ரூ 280
ரிலயன்ஸ்	ரூ 435	ரூ 332
எல் & டி	ரூ 350	ரூ 280
டெல்கோ	ரூ 585	ரூ 505

இவை விலை இறங்கிய வேகத்தைக் குறிக்கும் உதாரணங்கள்!

பங்குகளின் விலையைச் செயற்கை யாக ஏற்றுவதன் மூலம் ஒரு புரோக்கர் நிறைய கமிஷன் பெற முடியும். இது மிகப் பெரிய ஆதாயம் என்பதோடு, இவ்வாறு பங்குகளின் விலையை ஏற்றுவதாக உறுதி யளித்து, சம்பந்தப்பட்ட தொழில் நிறு வனத்திடமும் அவர் ஆதாயம் கேட்க லாம்...

இந்த பகற்கொள்ளையொத்த அக்கிர மம் வெளிச்சத்துக்கு வந்த பிறகு சில கேள்விகள் எழுந்துள்ளன....

1. பங்கு மார்க்கெட்டில் பரபரவென்று விலை ஏறிய போது இந்திய அரசு - குறிப் பாக நிதியமைச்சர் - ஏன் அதற்கான கார ணத்தை ஆராயப் புகவில்லை.

2. பங்குகளின் திடீர் விலையுயர்வால் ஆதாயம் அடைந்தவர்கள் (புரோக்கரைத் தவிர) யார் யார்...?

3. பங்குகளின் செயற்கை விலை உயர் வால் பொருளாதாரத்துக்கு என்ன தீமைகள் ஏற்பட்டிருக்கும்?

4. ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவின் அதிகாரிகள் சேனை பதினெட்டு மாதங்கள் ஆகியும் பத்திரங்கள் வந்து சேராததைக் கவனியாமல் என்ன செய்து கொண்டிருந் தது?

5. பொது மக்கள் விற்பனைக்குக் கொடுத்த ஷேர்களுக்கு பம்பாய் புரோக்கர் களால் பணம் தர இயலாமல் போயிருந் தால் அவர்களின் நஷ்டத்தை யார் தாங்கி யிருப்பார்கள்?

6. ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவின் கணக்கு வழக்குகளைக் கடந்த பதினெட்டு மாதங்களாக ரிசர்வ் வங்கி திரும்பிக் கூடப் பார்க்காமல் இருந்தது ஏன்?

இந்தக் கேள்விகளுக்கு விடை தெரிய மக்களுக்கு உரிமை இருக்கிறது.

பல ஆண்டுகளுக்கு முன் பங்கு மார்க் கெட் வியாபாரத்தில் எல். ஐ. ஸி.யும் ஹரி தாஸ் முந்த்ராவும் சந்தேகத்துக்குரிய முறை யில் செயல்பட்டு அந்த விவகாரம் அம்பல மான போது, அப்போதைய நிதியமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி தார்மீகப் பொறுப் பேற்று ராஜினாமா செய்தார்.

இன்றைய 'ஹர்ஷத் கோல்மாலில்' அதைவிடப் பன்மடங்கு அதிகமான தொகை தவறாகக் கையாளப்பட்டுள்ளது. தார்மீகப் பொறுப்பு ஏற்க யாருக்கும் துணி வில்லை!

– வி. கோபாலன்

பொன் விழா ஆண்டு : ;தங்க நகைப் பரிசுத் திட்டம் - 22

மாம்பழ மயக்கம்!



இது மாம்பழ சீசன். பரவும் மணத் தில் மயங்காதவர் யார்? அதிகபட்சம் பத்தே வரிகள்தான் உங்களுக்கு அனுமதிக்கப் படுகிறது. ஒரு மரபுக் கவிதை அல்லது புதுக்கவிதை; ஒரு ஜோக், அல்லது மாம்பழம் தொடர்பான ஒரு ரசமான அனுபவம்; மாம்பழம் பற்றிய புதிய தொரு தகவல் துணுக்கு என்று எது வேண்டுமானாலும் எழுதலாம். மாம்பழச் சுவையை மிஞ்சுவதாக அது அமையட்டும்! தபால் கார்டில் எழுதி அனுப்ப, பிரசுரத் துக்கு ஏற்கப்படும் அனைத்துக்கும் சன்மா னம். அவற்றுள் சிறந்ததாக ஒன்று தேர்ந் தெடுக்கப்பட்டு, அதற்கு பாலு ஜுவல் லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் பெறுமான முள்ள பொன் நகை பரிசு. "கல்கி காரி யாலயம், சென்னை - 600 032" என்ற விலாசத்துக்கு மட்டுமே எழுதி அனுப்பக் கடைசி தேதி : மே 25. "மாம்பழ மயக்கம்" என்று தலைப்புத் தரவும்.

தெற்குத் தெரு மச்சான்



இட்டாம் பாளையம், விள்ளாம் பாளையம் பக்கத்து பக்கத்து கிராமங்கள். ஒரு கிராமத்தில் நாயகன் (சத்யராஜ்), சூதாடி அண்ணன் (பிரபாகரன் - தயாரிப்பாளரேதான்), அப்பா சோத்தமுக்கி (டைரக்டர் ஆர். சுந்தர்ராஜன்), தாத்தா (சொக்கலிங்க பாகவதர்). அடுத்த கிராமத்தில் நாயகி (பானுப்ரியா), அக்கா (சந்தியா), தந்தை (ஆர். பி. விஸ்வம்), முறை மாப்பிள்ளை (மன்சூர் அலிகான்), தாய் (கோவை சரளா).

நாயகி ஊர் வழியாக நதி ஒன்று நாயகன் ஊரை அடைகிறது. மேலே கதையை ஊகித்து விட்டிருப்பீர்களே!

1. நாயகன் - நாயகி முதல் சந்திப்பு கலகல. பஸ்ஸில் ஜன்னலோரம் சத்யராஜ் உட்கார்ந்திருக்க, பக்கத்தில் பானுப்ரியா வந்த பஸ். பானுப்ரியாவும் ஜன்னலோரம். சத்யராஜ் சாத்துக்குடியைப் பிளக்க, பானுப்ரியாவின் கண்களில் சாறு தெறிக்க, அவர் அழகில் மெய்ம்மறந்து, வாய் பிளந்து உட்கார்ந்திருக்கும் சத்யராஜை ஊமை என நினைத்து, பானுப்ரியா 'பேபே' என்று பேச ஆரம்பிக்க, தியேட்டரில் ஒரே கைத்தட்டல்! நிறைய இடங்களில் பானுப்ரியா கொஞ்சம் ப்ரீயாகவும் காட்சி தருவது அநாவசியச் சேர்க்கை.

2. பெண் கேட்டு வரும் முறைமாமன் மன்சூர் அலிகானை அழகாக வெட்டிப் பேசித் திருப்பி அனுப்புகிறார் ஆர். பி. விஸ்வம். அலட்டாத நடிப்பு.

3. மன்சூர் அலிகானின் வில்லத்தனத்தில், வில்லத்தனத்தை விடக் குழந்தைத்தனமே விஞ்சி நிற்கிறது. அவருடன் வரும் ஜால்ரா 'பங்காளி பங்காளி' என இயற்கையாக நடிக்கிறார்.

4. சத்யராஜ் வழக்கம் போல ஆரம்பத்தில் எம்.ஜி.ஆர். படத்தைக் காட்டி வழி காட்டி என்கிறார். அதே எம்.ஜி.ஆர். ஸ்டைலில்தான் சண்டை. சேட்டைகளும் எம். ஜி. ஆரையே நினைவுபடுத்துகின்றன. அப்புறம் எதற்கு சத்யராஜ்?

5. செந்தில், தமது புது தியேட்டரில் வைப்பதற்கென்று கவுண்டமணி தம்பதி போட்டோவை வாங்கிப் போகிறார். கவுண்டமணி ஆவலுடன் மனைவியுடன் தியேட்டர் போய்ப் பார்க்க, ஆண்கள் கக்கூஸில் கவுண்டமணி படமும், பெண்கள் கக்கூஸில் அவர் மனைவி படமும்! தியேட்டரே அதிர்கிறது. என்ன செய்ய, நமது நகைச்சுவை உணர்வு இந்த மட்டில்தான்!

6. பாடல்கள் கொஞ்சம் பரவாயில்லை. 'தென்னமரத் தோப்புக்குள்ளே' ட்யூன் பிரமாதம் என நினைக்கும்போதே, உத்தமபுத்திரன் 'முல்லை மலர் மேலே' பாடல் ட்யூன் நினைவுக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை.

மணியான கதைகளைத் தந்த மணிவண்ணனா இந்தப் படத்தை இயக்கியிருக்கிறார் என்று ஆச்சரியமாக இருக்கிறது!

\- ஸ்ரீதரன்.

6

ஜி.எச். வாசலில் ஆட்டோவில் வந்து இறங்கிய நந்தினிக்கு, ஆக்ஸிடெண்ட் வார்டுக்கு எப்படிப் போவது என்று கூடத் தெரியவில்லை. கேட்டுக்கு வெளியே வந்தவர்களில் பெரும்பாலானவர்கள், அங்கங்கே ஆஸ்பத்திரிக் கட்டும் ஃபினாயில் நெடியுமாக.

டெலிபோன் தொடர்பு அறுந்து போன பின், ஒரு விநாடி கூட உட்கார முடியாமல், பதறிக் கொண்டு கிளம்பி வந்து விட்டாள். யாருக்குக் காயம்? தேவராஜுக்கு எதுவும் ஆகியிருக்கக் கூடாது!

''எங்கேம்மா?'' என்று கேட்டில் வழி மறித்தவன், ஏதோ நிறத்தில் பேண்ட் அணிந்து, மேலே நேரு கோட் போல பட்டன் போடாமல் காக்கிச் சட்டை அணிந்திருந்தான்.

''ஆக்ஸிடெண்ட் வார்டு.''

சட்டைப் பையை ஜிலுங் ஜிலுங் என ஆட்டிய காக்கிச் சட்டை, என்ன நினைத்துக் கொண்டானோ ''நேராப் போய் பீச்சக்கைப் பக்கம் திரும்பும்மா'' என்று அவளுக்கு வழி விட்டான்.

நேராகப் போய் இடதுபக்கம் திரும்பினாள். ஆக்ஸிடெண்ட் வார்டில் நுழைந்தாள்.

வார்டின் அத்தனை படுக்கைகளும் காலியாக இருக்க, ஒரே ஒரு படுக்கையில் புவனா இருந்தாள். பக்கத்தில் யார் அது? ஓர் இளைஞன். அவன் கைகளை மிகத் தீவிரமாக ஆட்டிப் பேசிக் கொண்டிருக்க, புவனா சிரித்துக் கொண்டிருந்தாள்.

நந்தினி அவளை நெருங்க நெருங்க, ஒரு கோணத்தில் புவனாவின் பார்வையில் நந்தினி இடற, அவள் சிரிப்பு சட்டென்று நின்றது.

''அண்ணி'' என்றாள்.

''என்ன ஆச்சி புவனா?''

புவனா வலது கால் மணிக்கட்டைக் காட்டினாள். லேசாகப் பள்ளம் பறித்த மாதிரி ஒரு காயம். ரத்தம் கசிந்து உறைந்து இருந்தது. லேசான வீக்கம் இருந்தது.

''ஒண்ணுமில்ல மேடம். சின்னவ இவங்க வெயிட் பண்ணிட்டிருக்கறப்ப ஒரு ஆட்டோக்காரன் வந்து இடிச்சிட்டான். கால் மேல வண்டி விழுந்திடுச்சி. நான் ஒரு ஆட்டோவுல கூட்டிட்டு வந்து அட்மிட் பண்ணேன். எக்ஸ்ரே எடுத்துப் பார்த்து ஃப்ராக்சர் இல்லேன்னுட்டாங்க. லேசா வீக்கந்தான். சரியாப் போய்டும். டி.வி.எஸ். ஃபிஃப்டியை நான் ஓட்டிட்டு வந்துட்டேன். உங்களுக்குத் தகவல் கொடுக்கணும்னு சொன்னாங்க.''

நந்தினி புவனாவைப் பார்த்துக் கண்களாலேயே, 'யார் இது?' என்று கேட்டாள்.

''அவர் பாவம்ண்ணி. எங்கேயோ போய்ட்டிருந்தவரு. நான் விழுந்ததைப் பார்த்து ஹெல்ப் பண்ணாரு.''

''ரொம்பத் தாங்க்ஸுங்க'' என்றாள் நந்தினி.

''எதுக்கு மேடம் தாங்க்ஸ்லாம் சொல்லி என்னை சங்கோஜப்பட வக்கறீங்க. என் எடத்தில வேற யார் இருந்தாலும் இதைத்தான் செஞ்சிருப்பாங்க.''

''உங்க பேர் என்னன்னு தெரிஞ்சிக்கலாமா?''

''ஷ்யாம் சுந்தர்,'' என்று பதில் சொன்னது அந்த இளைஞனில்லை. புவனாதான். ''நான் முன்னாலேயே கேட்டுட்டேன் அண்ணி.''

புவனாவின் முகத்தில் அனாவசியத் திற்கு வெட்கம்.

ஒரு நர்ஸ் வந்து புவனாவிற்கு மருந்து தடவி பாண்டேஜ் கட்டி விட்டாள்.

''நீங்க போறதுன்னாப் போலாம். வீக்கம் சாயங்காலத்துக்குள்ள வடிஞ்சிடும். ஊசி போட்டுட்டோம். செப்டிக் பயமெல்லாம் வேணாம். ரொம்ப வலி இருந்தா இந்த மாத்திரையைச் சாப்டுங்க. சரியாய்டும்.''

நந்தினி நர்ஸ் கொடுத்த மாத்திரையைப் பெற்றுக் கொண்டாள்.

பஞ்சத்தில் வாடியவன் போல் இருந்த ஒருவன், நந்தினியை நெருங்கி,

சுபா

''நான்தாம்மா அம்மாவை கவனிச்சவன். காப்பிச் செலவுக்குக் கண்டுக்கம்மா'' என்றான். நந்தினி அவனைக் கண்டு கொண்டாள்.

புவனா எழுந்தாள். நந்தினியின் தோளில் கை வைத்து, மெல்ல நடந்து வந்தாள்.

''அப்ப நான் வரேங்க'' என்று வண்டிக்கருகில் வந்து ஷ்யாம் சுந்தர் விடை பெற்றுக் கொண்டான்.

''போலாமா புவனா?''

''ம்...''

''நான் ஒன்னு கேட்டா தப்பா நெனைச்சிக்க மாட்டயே?''

''என்ன அண்ணி?''

''நீ புத்தகத்து நடுவுல வெச்சிப் பாக்கற படம் இந்தப் பையனோடதுதானே?''

''அண்ணி...'' என்றாள் புவனா வியப்பான திகைப்புடன்.



''சொல்லண்ணி.''

''நான் வந்தப்ப அப்படிப் பேசிட்டிருந்தான். உன் கண்ணு அவனையே சாப்டுக்கிட்டு இருந்திச்சி.''

''நீ பெரிய ஆளு அண்ணி. அண்ணி,

வீட்டுக்குப் போய்ச் சேருவதற்குள் புவனா எல்லாவற்றையும் கொட்டி விட்டாள். அவன் அவளை முதலில் சந்தித்த இடம். அவன் வேலை செய்யும் மருந்துக் கம்பெனியின் பெயர். திருச்சியில் இருக்கும் அவனுடைய அம்மா, அப்பா. அவனும் அவளும் சந்தித்துக் கொள்ளும் இடங்கள். இன்றைய தினம் நந்தினியை அவளுடைய ஆபீசில் இறக்கி விட்டதும் அவன் அவளை வந்து சந்தித்தது. இருவரும் ஒன்றாகப் போன போது நேர்ந்த விபத்து.

''எப்படி அண்ணி கண்டுபுடிச்சே?''

''மை போட்டுப் பார்த்துத்தான்.''

அண்ணி, அண்ணி. நான் ஒங்கிட்ட சொல்லலாம்னுதான் இருந்தேன். நீதான் அண்ணன்கிட்டே சொல்லணும். நீதான் எப்படியாவது எங்க ரெண்டு பேரையும் சேத்து வக்கணும். ஒனக்கு நூத்தியெட்டுத் தேங்காய் ஒடைக்கறேண்ணி ப்ளீஸ்.''

''ஒனக்கு பல்ஸர்தான் லாயக்கு. மொபெட் வாங்கிக் குடுத்தேன் பாரு, என்னைச் சொல்லணும்.''

தேவராஜின் குரலில் சீற்றமிருந்தது.

புவனா நடுங்கிக் கொண்டு எதிரே நின்றாள். தேவராஜ் அவள் காலில் போடப் பட்டிருந்த கட்டை ஒருமுறை பார்த்தான். நிமிர்ந்து நந்தினியை ஒருமுறை பார்த்தான். நந்தினி பார்வையை விலக்கிக் கொண்டாள்.

''எங்கே பராக்குப் பாத்துக்கிட்டு ஓட்டினே? இன்னும் வேகமா வுழுந்து வச்சிருக்கறதுதான... காலு நொண்டியா விட்டா, கல்யாணம் பண்ணிக் கொடுக்கறது அண்ணனுக்கு சவுகரியமாயிருக்கும்னு திட்டம் போட்டியா?''

''அவ பேர்ல தப்பு இல்லியாம்... ஆட்டோக்காரன்தான்...'' என்று நந்தினி மெல்ல முனகினாள்.

''ஓஹோ... அண்ணி சிபாரிசுக்கு வந்திட்டீங்களாக்கும்! விவஸ்தையில்லாம சின்னப் பொண்ணு போல அவ கூட மழைல சேர்ந்து நனைஞ்சுக்கிட்டு வந்தவதான நீ?''

''ஏய்... ஏன்டா அவகிட்ட எகிறுறே?'' பாட்டி தன்னிடத்திலிருந்தே குரல் கொடுத்தாள்.

''உனக்குத் தெரியாது பாட்டி, இதுகளையெல்லாம் வக்கற இடத்துல வக்கணும். இல்லாட்டி இந்த மாதிரிதான் ஏடாகூடமா ஏதாச்சும் பண்ணிட்டு வந்து நிக்கும்...''

தேவராஜ் சரேலென்று ரூமிற்குள் போய் விட்டான்.

பிரமித்துப் போய் நின்றிருந்தாள் நந்தினி. இத்தனை நேரம் சீரியஸாக முகத்தை வைத்துக் கொண்டிருந்த புவனா, மெல்லப் புன்னகை செய்தாள். நந்தினியைப் பார்த்துக் கண்ணடித்தாள்.

நந்தினிக்கு ஒரு பக்கம் சிரிப்பாய் இருந்தது. ஒரு பக்கம் பாட்டியை நினைத்து மகா ஆச்சரியமாய் இருந்தது. கிழவி எவ்வளவு சரியாய் கணித்திருக்கிறது பார்.

ஷ்யாம்சுந்தரின் முகத்தை மறுபடி நினைவுக்குக் கொண்டு வந்து பார்த்தாள். திருத்தமான முகம். அப்பாவித்தனம் சொட்டும் கண்கள். புவனா அவனைக் கைக்குள் போட்டுக் கொள்வாள். இது சிரித்துப் பேசியே சாதிக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தது.

தேவராஜிடம் சொல்லி சிபாரிசு செய்வதற்கு ஒத்துக் கொண்ட போது, எந்தத் தைரியத்தில் அப்படி ஒத்துக் கொண்டாள் என்று தெரியவில்லை. தேவராஜ் பத்தி என்ன தெரியும்? கோபக்காரன். மிகவும் நடைமுறைக்காரன். பேச்சில் ரசனை இருக்காது. என்ன குழம்பு? என்ன பதார்த்தம்? தாத்தா இன்னைக்கு இருமினாரா? எத்தனை சிகரெட் பிடித்தார்? உனக்கு எப்போது இன்க்ரிமெண்ட்?

அவன் உரையாடல்கள் எல்லாமே இப்படித்தான் இருந்திருக்கிறது. புது மனைவியிடம் ஆரம்ப காலத்தில் கணவன் மார்கள் அடிமைகளாக இருப்பார்கள் என்று கேள்விப்பட்டதெல்லாம் இங்கே இல்லை. அவன் காதலைப் பற்றியோ, கவிதையைப் பற்றியோ, கதையைப் பற்றியோ, உணவில் அவனுக்கிருக்கும் ஈடுபாடு பற்றியோ- எதைப் பற்றியாவது பேசினால்தானே ரசனை தெரியும். அவன் முகம் எந்நேரமும் மரத்தில் செதுக்கப்பட்ட கோப சிற்பம் போல.

புவனாவின் காதலைப் பற்றிச் சொன்னால் என்ன சொல்வானோ? எப்படி நடந்து கொள்வானோ?

''அண்ணி... உனக்காக ஸ்பெஷலா கேசரியும் பிரெட் - பஜ்ஜியும் என் கையாலேயே பண்ணியிருக்கேன் சாப்பிடு...'' என்றாள் புவனா அடுத்த நொடிக்குள் சகஜ நிலைக்குத் திரும்பியவளாக.



''நம்ம தலைவரை இதுக்குத்தான் சாமானியரோடு சாமானியரா எலக்ட்ரிக் டிரெயினில் போக வேணாம்னு சொன்னேன்! அவர் கேக்கலை!''

''ஏன் என்ன ஆச்சு?''

''சைதாப்பேட்டையில் வண்டி உள்ளே, ஏறின பிளேடு பக்கிரி, தலைவரைப் பார்த்ததும், கட்டிப் பிடிச்சுக்கிட்டு, 'என்னா தலீவா? திரும்பத் தொழிலுக்கு வந்துட்டியா'ன்னு எல்லார் எதிரிலும் கேட்டுட்டான்!''

- சம்பத் குமாரி

முன்னறையில் இருந்து பாட்டியின் குரல் கேட்டது. நந்தினியைத்தான் அழைத்துக் கொண்டிருந்தாள் பாட்டி.

''என்ன நந்தினி? இன்னிக்குக் கேசரி, பஜ்ஜியெல்லாம் அமர்க்களப்படுதே? என்னை யாராவது பொண்ணுப் பார்க்க வராங்களா?''

''கெளவிக்கு வந்த ஆசையை பாருப்பா! புவனாவைப் பொண்ணு பாக்க வராங்களோ என்னவோ...'' தாத்தா சொல்லி விட்டு பஜ்ஜியை எடுத்து வாயில் போட்டு ஈறால் மென்றார். தவளைத் தாடை போல வாய் அசைந்தது.

''பாட்டி உங்க வாய்க்குச் சக்கரைதான் போடணும்'' என்றாள் நந்தினி ரகசியமாக. அவள் வாயைத் திறக்க வைத்து, ஒரு விள்ளல் கேசரியைப் போட்டாள்.

''என்ன பேசிக்கறீங்க ரெண்டு பேரும் ரகசியமா?''

''கேசரிக்கு உப்புப் பத்துமா பத்தாதான்னுதான். நீங்க ஒங்க வேலையைப் பாருங்க!'' என்று தாத்தாவிடம் கத்தி விட்டு, ''என்ன விஷயம் சொல்லு'' என்றாள் பாட்டி நந்தினியிடம்.

''புவனா லவ் பண்ணுது''

''நான் சொல்லலை... நான் சொல்லலை. பையன் யாரு?''

''அவன்தான்.''

''பொஸ்தவத்துக்கு நடுவுல இருந்த பையன்தானே?''

''ம்க்கும்! எங்கிட்ட சொல்லியிருக்குது. நான்தான் அவங்கண்ணன்கிட்டப் பேசணுமாம். அதுக்குத்தான் பஜ்ஜியும் கேசரியும்.''

நந்தினி சொல்லிக் கொண்டிருக்கும் போதே தாத்தா ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தார்.

''பொகை வண்டி பொறப்பட்டுடிச்சி. நீ வா. நாம வெளியில போய்ப் பேசலாம்'' என்று பாட்டி தாத்தாவை ஒருமுறை திட்டி விட்டு, நந்தினியின் கைப்பிடித்து வெளியே கூட்டி வந்தாள்.

வெளியே வந்த போது, ஏறக்குறைய எதிரில் வந்த அவன் மீது மோதிக் கொண்டார்கள்.

அவன்? அருண்குமார்!

அருண்குமார் பாட்டியையும் நந்தினியையும் மாறி மாறிப் பார்த்துத் திகைத்துப் போய் நின்றான்.

(தொடரும்)



''மறக்கமுடியாத நிகழ்ச்சிகளைச் சொல்றேன்'னு சொல்லிட்டு ஒன்னுமே சொல்லாம இருந்தா எப்படி....?''

''கொஞ்சம் பொறுங்க.. மறக்க முடியாத நிகழ்ச்சிங்க, நிறைய இருக்கு... ஒன்னுகூட 'சட்'டுன்னு ஞாபகத்துக்கு வராம.... சுத்தமா மறந்து தொலைஞ்சி போச்சு....?''

- ஜூனியர் தேஜ்

●●●●●

இரண்டு கைதிகளுக்குத் தூக்குத் தண்டனை வழங்க இருந்தார்கள். முதல் கைதி, தனது இறுதி விருப்பத்தை இப்படிச் சொன்னான்.

''சாகப் போறதுக்கு முன்னே நான் ஒரு சொற்பொழிவு செய்யணும். எல்லாரும் அதைக் கேட்கணும்.''

இரண்டாவது கைதி அவசர அவசரமாக இப்படிச் சொன்னான்.

''நீதிபதி சார், அவன் சொற்பொழிவு ஆரம்பிக்கறதுக்குள்ளே என்னைத் தூக்கில் போட்டுடுங்க, ப்ளீஸ்!''

- ஓர் அக்கரை ஜோக்

தகவல் : சேலம் சக்திக்கொடி



''ஏங்க ரேடியோவைக் கொஞ்ச நேரம் 'ஆப்' பண்ணுங்க.''

''ஏன்? பையன் அதிசயமாப் படிக்கிறானா?''

''அதில்லே, பக்கத்து வீட்டுப் பங்கஜமும், எதிர் வீட்டுக் கோமளாவும் எதுக்குச் சண்டை போடறாங்கன்னு காதிலே விழ மாட்டேங்குது!''

- ஆவடி க. கோபி

தலைவர்

"மகாலட்சுமி..."

"என்னா?"

"ஏண்டீ இப்படி அலுத்துக்கிறே?"

"என்னான்னா, அது அலுப்பா?"

"என்னவோ மாதிரிப் பேசுறியே"

"சரி. சொல்லுங்க.."

"நான் அடுத்த வாரம் மெட்ராஸ் போகலாம்னு இருக்கேன்."

"........."

"எதுக்குனு கேளேன்..."

"எனக்கு ஏகப்பட்ட வேலை கிடக்கு! ஒவ்வொண்ணுக்கும் எதுக்கு எதுக்குனு இழுத்துக்கிட்டிருக்க நேரமில்லை. மடமடன்னு சொல்லுறதா இருந்தாச் சொல்லணும். ஒரு கூடை அழுக்குத் துணி கிடக்கு. வீடே நாறுது. அவ்வளவையும் கசக்கிப் போடுறதுக்குள்ள... யப்பா சரி சொல்லுங்க..."

"என்னோட பிறந்த நாளுக்குத் தலைவரைப் பார்க்கலாம்னு இருக்கேன் மகா. அவர்கிட்ட ஆசீர்வாதம் வாங்கணும்."

"என்னவோ செய்யுங்க."

"பிடிக்கலையா?"

"ரொம்பத்தான் ஆடுறீங்க."

"நான் ஆடுறேனா மகா!"

"ஆமாம். இது ஆட்டம்தான். அடுத்த வேளைச் சோற்றுக்கு அடுப்பைப் பார்க்கிற ஜாதிதானே நாம? இப்பத் தெரியாது. இன்னும் இரண்டு மாசத்துலே பசங்க பள்ளிக்கூட பீஸ் - நோட்டுப் புத்தகம்னு வந்து நிக்கும் பாருங்க அப்பத் தெரியும். ஊரைச் சுற்றிக் கடன். எல்லாம் மொத்தமா வந்து நிக்கப் போறானுங்க பாருங்க அப்பத் தெரியும்! சின்னதுக்கு இப்பவே நெஞ்சு பூராச் சளி! ராவெல்லாம் கரட்டு கரட்டுனு இழுத்துக்கிட்டுக் கிடக்கு. சனியனை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போய்க் காட்ட முடியுதா? இது எதுவும் தெரியாம, நான் தலைவரைப் பார்க்கப் போறேன்னா அது ஆட்டமில்லையா?"

"உனக்கு எதுக்குப் பிறந்த நாளெல்லாம்னு குத்திக் காட்டுறியா?"

"வேண்டாம்னு சொல்லலை. நம்ம தகுதிக்கு உண்டானதைச் செய்யணும். காலையிலே குளிச்சுட்டு மகமாயிட்ட வேண்டிக்க வேண்டியதுதான். வேணும்னா உங்க அப்பா இல்லையா? கூப்பிடு தூரம் தானே! போய் அவர்கிட்ட ஆசீர்வாதம் வாங்கிக்கங்க. எல்லோருமே கூடப் போவலாம்..."

"அந்த ஆள் பேச்சை மட்டும் எடுக்காதே!"

"எதுக்கு இத்தனை எரிச்சல்?"

"வேண்டாம். அந்த ஆளைப் பத்திப் பேச்சே வேண்டாம். நான் மரியாதைக்காரன் மகா. சுயமரியாதையோட வாழணும்னு நினைக்கிறவன். திரும்பப் போய் அந்த வூட்டுப் படியை மிதிக்க மாட்டேன். உன்னை ஜாதி விட்டுக் கல்யாணம் பண்ணினதுக்குத் துரத்தி விட்டாரே இப்பப் போய் பாருங்கிறியே...!"

"அப்போ ஏதோ ஆத்திரம்! பேசிட்டார்!"

"வேண்டாம்."

"பிற்பாடு நம்மலெப் பார்க்க வந்தாரே!"

"நான் மரியாதைவுட மாட்டேன்."

"சரி. எதுனாச் செய்யுங்க..."

"நான் தலைவரைப் பார்க்கணும்."

"பைத்தியமா?"

"இதோ பாரு, எட்டி அறைஞ்சிடுவேன் மகா! என்னைப் பத்தி வேணாப் பேசு. தலைவரைப் பத்திப் பேசுனா மரியாதை கெட்டுடும். உனக்குத் தலைவர் பற்றித் தெரியுமா? அவர் தமிழுக்குக் கால் தூசி பெறுவியா? சினிமாவுலெ பூந்து கலக்கினார் பாத்தியா ஒரு காலத்துலெ! அவர் அழகைப் பார்த்திருக்கியா? சும்மா ஆப்பிள் கலர்டீ!"

"வூட்டுக் கஷ்டம் தெரியலையா?"

"நம்ம தரித்திரம் எப்ப வுட்டுச்சு?"

தங்கராசு அந்த இடத்தை விட்டு அகன்றான். மகாலட்சுமி புரியாது பேசுகிறாள். தலைவரின் முகம் பார்த்ததுமே ஒரு வேகம். தன் உடம்பு தனக்கே கட்டுப்படாத வேகம். இந்த உசிரே உனக்காகத்தான் இருக்கிறது தலைவா என்கிறது மாதிரியான கண்மூடி வேகம். இதெல்லாம் மகாலட்சுமிக்குப் புரியாது! எப்படியும் தலைவரைப் பார்க்க வேண்டும். தலைவரை அத்தனை சுலபமாய்ப் பார்த்து விட முடியுமா? எதற்கும் யூனியன் லீடரிடம் ஒரு கடிதம் வாங்கிக் கொள்ள வேண்டும். தங்கராசு யூனியன் அலுவலகம் சென்றான்.

''வா. தங்கராசு.''

''வணக்கம் தோழரே!''

''என்ன விசயம்?''

''தலைவரைப் பார்க்கணும்.''

''நல்லது!''

''ஒரு லெட்டர் கொடுத்தீங்கன்னா உதவியா இருக்கும்.''

''தர்றேன்யா! உமக்குத் தராது யாருக்குத் தரப் போறேன். போன மாசம் கூடத் தலைவரை மெட்ராஸ்லெ பார்த்தேன். நம்ம ஏரியாவைப் பத்தி நிறைய விசாரிச்சார். சரி. தலைவரை எதுக்குப் பார்க்கணும்? எதுனா மனுக் கொடுக்கவா?''

''இல்லை. ஆசீர்வாதம் வாங்கணும். அடுத்த வாரம் மூணாம் தேதி எனக்குப் பிறந்த நாள்!''

''அவ்வளவுதானா?''

''தலைவரைப் பாத்துடலாமா?''

''இரண்டு நாளைக்கு முன்னாடியே போயிடு.''.

''தலைவர் பேசுவாருங்களா?''

''லெட்டர் தர்றேன்யா, கொண்டு போ. நேரே கட்சி ஆபீஸ் போயிடு. அங்க முத்துச்சாமினு ஒருத்தர் குண்டா இருப்பார். நான் சொல்லி அனுப்பிச்சேன்னு மட்டும் சொல்லு. மத்ததை அவர் பாத்துப்பார்...''

அரண்மனை மாதிரி ஒரு பெரிய வீடு. சுற்றிலும் மரங்கள். தலை உயர்த்திப் பார்க்கின்ற உயரத்தில் பிரும

பாரதிபாலன்



மாண்டமான அளவில் தலைவரின் கட்-அவுட்! முன்னாடி பெரிய பந்தல். இதுதான் கட்சி ஆபீஸ்! அந்த மண்ணில் கால் வைக்கவே சிலிர்த்தது! இது தலைவரின் பாதம் படும் இடம்! இந்த இடத்தில் கால் வைப்பதே மகா பாக்கியம்! உள்ளே கட்சிக்கரை போட்ட வேஷ்டிகள் நிறைய அலைந்து கொண்டிருந்தன. தங்கராசு மெல்லஉள்ளே சென் றான். இருபது வருடங்களாக உடம் பில் ஊறிக் கொண்டிருந்த ஆசை! இன்று கிடைத்திருக்கிறது.

''யாரைப் பார்க்கணும்?''

தங்கராசு கடிதம் காட்டினான்.

''உள்ளே போங்க...''

போனான். ஓலைப் பாயில் ஓர் உருவம் படுத்துக் கிடந்தது. கட்சிப் பத்திரிகையில் முகம் மறைத்துக் கொண்டு ஓர் உருவம். தங்கராசு மெல்லக் குரல் கொடுத்தான். அந்த உருவம் பத்திரிகையை விலக்கிக் கண்ணை இடுக்கிப் பார்த்தது.

''முத்துச்சாமின்னு...''

''நான்தான். என்னா?''

தங்கராசு முதுகு வளைத்துக் கடிதம் நீட்டினான். ''என்ன விஷ யம்?'' என்று கடிதம் பிரிக்காமலே கேள்வி வந்தது. சொன்னான்.

''உக்காருப்பா.''

உட்காரவில்லை. கை கட்டி நின்று மரியாதை காட்டினான். முத்துச்சாமி பக்கத்தில் இருந்த ஒருவரிடம் 'தலைவருக்கு நாளை எங்க புரோக்ராம்?' என்று கேட்டார். தலைவர் எங்கும் போகவில்லை இங்குதான் இருக்கிறார் என்று பதில் வந்தது.

''எனக்கு வெளியூர் போற வேலை இருக்கு. உன்னை ஆபீஸ்ல சொல்லி வுட்டுட்டுப் போறேன்!'' என்றவர், கட்சி ஆபீஸில் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்த ஒருவரிடம் தங்கராசுவை அறிமுகம் செய்து விட்டுப் போனார் முத்துச்சாமி. அவரும் நாளாக்கு என்றார். தங்கராசுக்கு சந்தோஷம். விடிந்ததும் தலைவரைப் பார்க்கப் போகிறோமே என்ற குதூகலம். இரவு நான்கு நியூஸ் பேப்பரை விரித்து, மஞ்சள் பையைத் தலைக்கு வைத்துக் கண்மூட, தூக்கம் ஒட்டவே இல்லை.

விடிந்ததும் நெஞ்சுப் படபடப்புக் கூடிற்று! காலை ஐந்து மணிக்கெல்லாம் மாநகராட்சிக் குளிப்பறையில் குளித்து ரெடியாகி விட்டான். ஒரு ரோஜா மாலை. சின்னதுதான். நாற்பத்தி எட்டு ரூபாய்க்குக் கொண்டு போயிற்று! ஆறு மணியிலிருந்து பார்வை வாசலை அடைத்திருந்தது. காலை வெயில் ஏறிக் கொண்டேயிருந்தது. பசித்தது. வேண்டாம். சாப்பிட நகருகின்ற நேரத்தில் தலைவர் வந்தாலும் வந்து விடலாம். பசியை மென்று விழுங்கினான். வெயில் உக்கிரமாயிற்று! தலைவர் வந்து விடுவார் வந்து விடுவார் என்ற பரபரப்புத்தான். வரவில்லை.

''உங்களுக்கு ஏன் இப்படி மூச்சு வாங்குது?''

''ஆறு கிலோ மீட்டர் தூரம் ஓடி வர்றேனே... மூச்சு வாங்காதா பின்னே!''

''எதுக்கு ஆறு கிலோ மீட்டர் ஓடி வர்றீங்க?''

''வெறி பிடிச்ச நாய் மேல கல்லெறிஞ்சுட்டேனே... சும்மா விடுமா?''

- சேலம் நீலமேகன்





''எங்க தலைவருக்குக் கற்பனை வளம் அதிகம்.''

''எப்படிச் சொல்றீங்க?''

''ஒரு கூட்டத்துல பயன் படுத்திய கெட்ட வார்த்தையை மற்ற கூட்டங்கள்ல பயன் படுத்த மாட்டார்.''

- இரா. வசந்தராசன்

பதினோரு மணிக்குச் சரசரவென்று ஏழு எட்டுக் கார்கள் உள்ளே பாய்ந்து வந்தன. தங்கராசுக்கு உடம்பு வெடவெடத்தது! இத்தனை கூட்டமும் இவ்வளவு நேரம் எங்கிருந்தது? பூமியிலிருந்து பொங்கி எழுந்த மாதிரி... யப்பா! கூட்டம் பிளந்து கொண்டு உள்ளே போக முடியவில்லை. தலைவரின் கார் நேரே உள்ளே வந்து வாசல் படி உரசி நின்றது. வெளேரென்று தலைவரின் சிலுக்குச் சட்டை மட்டும்தான் தெரிந்தது. சுற்றிலும் கூட்டம்! தங்கராசுக்கு நரம்புகள் துடித்தன! கண்களை அழுத்தி மூடிக் கொண்டு கூட்டத்தில் முட்டினான். இன்றைக்கு என்ன வேண்டு மானாலும் ஆகட்டும்! முடிய வில்லை!

பெரிய பெரிய ஆட்கள் மட்டும் உள்ளே சென்று தலைவரைப் பார்த்து வந்தார்கள். தங்கராசு முத்துச்சாமி அண்ணன் அறிமுகப் படுத்திய ஆளைத் தேடினான். காணவில்லை. கிழக்கு மேற்காய் ஓடினான். யார் யாரையோ கெஞ்சிப் பார்த்தான். காரியம் ஆகவில்லை. இனி முடியாது என்றவுடன் உள்ளே உளறல் உருவாயிற்று. ''தலைவா... தலைவா...'' திடீரென்று அவனை அறியாமல் கைகூப்பி அலறினான். அரை மணி நேரத்தில் தலைவர் திரும்பிப் போய்விட்டார். தலை வரின் முகத்தைக் கூடப் பார்க்க முடியவில்லை! துவண்டு போய் ஊர் திரும்பினான்.

''உங்க தலைவரைப் பார்த் தாச்சா?''

''முடியலெ. கூட்டம் சாஸ்தி!''



''மாப்ளே...
நீங்க
வாழ்க்கையில்
படிப்படியா
முன்னேறி
இருக்கலாம்.
அதுக்காக
சிம்பாலிக்கா
வீட்டு
வாசப்படியை
இவ்வளவு
கட்டக்
கூடாது!''
- ராஜு ராயன்

''லெட்டர் எல்லாம் வாங்கிட்டுப் போனீங்க...''

''முடியலைன்னா வுட்டுடணும்.''

''என் மேலே ஏன் பாய்வானேன். கையிலெ பச்சை குத்திக்கிட்டுத் திரிஞ்சீங்களே அவர் மீதில்ல இந்த ஆத்திரம் வரணும்!''

''வாயை மூடு மகா!''

''ஏனாம்?''

''தலைவரைப் பத்திப் பேசாதமன்னு எத்தனை வாட்டி சொல்லியிருக்கேன்!''

மகாலட்சுமி சுவரில் சாய்ந்து, கண்மூடிக் கொண்டாள். முழுசாய் அறுநூற்றி ஐம்பது ரூபாயைத் தொலைத்து விட்டு வந்திருக்கிற புருஷனைப் பார்க்க வேதனை கிளம்பிற்று! ஒரு மாதச் சாப் பாட்டிற்கு உண்டான பணம். போகட்டும். பெத்த அப்பனைப் போய்ப் பார்த்தால் சுயமரியாதை குறைஞ்சிடுமாம்! இது எதில் சேர்த்தி? ஒன்றும் புரியவில்லை. தலைவர் பிறந்த நாளுக்கும் அடித்துக் கொண்டு ஓடி அவர் காலில் விழுகிறது. தன் பிறந்த நாளுக்கும் அவர் காலில் போய் விழுகிறது. இது என்ன வாதிக் என்று தெரியவில்லை. புருஷ னிடமே கேட்டுப் பார்க்கலாமா? வேண்டாம். அவர் சுயமரியாதை உடையவர். பொறுத்துக் கொள்ள மாட்டார். 'பளார்' என்று கன் னத்தில் அடி விழும். மகாலட்சுமி கண்ணை அழுத்தி மூடிக் கொண் டாள்!

சாபங்களை வரங்களாக்குவோம்

எல்லாமே நமக்குச் சாதகமாக அமைந்து விட்டால் வாழ்க்கையில் சிக்கல் இல்லை தான். ஆனால் பாதகமான நிகழ்ச்சிகள் ஏற்படாமலேயே வாழ்க்கை நடத்த யாரால் முடிகிறது? அதை விதி என்று விவரிக்கிறது நமது சமயம். ஆனால் அந்தப் பாதகமான ஒவ்வொரு நிகழ்விலும் நமக்குச் சாதகமான ஏதோ ஒன்று இருக்கிறது என்று உறுதியாக எடுத்துக் கொண்டால், இருக்கத்தான் செய்கிறது.

குந்தியின் மகனாய்ப் பிறந்தாலும் வெளி உலகுக்கு விளங்காமல் பிறந்தவன் கர்ணன். பெற்ற அன்றே பெட்டியில் வைத்து ஆற்றில் விட்டாள் அவள். கிழட்டுத் தேரோட்டியின் வளர்ப்புப் பிள்ளையானான் அவன். தேரோட்டக் கற்றுக் கொண்டு அரசனுக்கு ஊழியம் செய்யச் சொன்னான் கிழட்டுத் தந்தை. மறுதலித்தான் மகன். ''வில்வித்தை கற்று வேந்தன் நிலை பெறுவேன். அரசனை எனக்குத் தேர் ஓட்ட வைப்பேனேயொழிய, நான் தேரோட்டியாக மாட்டேன்'' என்பது கர்ணனின் கனவு.

எந்தக் குருவிடத்தில் வித்தை கற்பது? குலம் கோத்திரம் தெரியாத ஒருவனுக்கு அரச வித்தைகளை அப்பியசிக்க ஆள் கிடைக்கவில்லை. ராஜ அம்சம் இருந்தாலும் ராஜ வம்சம் இல்லை என்றால் வில் வித்தை கற்க முடியாத ஜாதிக் காலம் அந்தக் காலம்.

அவனது நல்ல நேரம் பரசுராமனின் பார்வையில் பட்டான். அவர் அதிசய அந்தணர். க்ஷத்திரியனுக்கே உரிய வில் வித்தையை க்ஷத்திரியனுக்குச் சொல்லித் தருவதில்லை என்று முடிவு செய்தவர். சிவந்த மேனி, ஒளியான விழிகள். கல்வியில் ஆர்வம்... இத்துடன் இருந்த கர்ணனைக் கண்டதும் பிராமணனாய் இருக்கக்கூடும் என்ற எண்ணத்துடன் வித்தைகளைத் தொடங்கினார். சகல வித்தைகளும் அவனிடம் சரண் புகுந்தன.

ஒருநாள்... பாடம் நடத்திய களைப்பில் குரு பரசுராமர் மாணவன் மடியில் தலைவைத்துப் படுத்திருந்தார். கர்ணன் அவருக்குக் காற்று வீசிக் கொண்டு கடமை உணர்வுடன் காத்திருந்தான். கர்ணன் அஸ்திர பலம் பெறுவதைப் பெற முடியாத இந்திரன் வண்டின் வடிவெடுத்தான். கர்ணன் மடியில் உறங்கும் பரசுராமர் தூக்கம் தடைப்பட வேண்டும். பாதியில் எழுந்து கோபத்தால் அவர் சாபம் கொடுத்து, கர்ணன் கல்வி கரைய வேண்டும் என்று எண்ணி, இந்திர வண்டு கர்ணன் தொடையைத் துளைத்து எடுத்தது! வலியைப் பொறுத்துக் கொண்டிருந்தான் கர்ணன். காலை அசைக்கக் கூட இல்லை. குருநாதர் தூக்கம் கலையக் கூடாதே என்ற கவலை.

இரத்தம் கசிந்து, பரசுராமர் உடலை நனைத்தது. தூக்கம் கலைந்து சினந்து எழுந்தார் குருநாதர். குருதி வடியும் கர்ணன் தொடையைக் கண்டார். வண்டு துளைத்தும் கூட வலியால் பாதிக்கப் படாத வதனம் கண்டார். வலியைத் தாங்கும் தேக வளம் கண்டார். கையை உயர்த்தி அலறினார். ''அடப்பாவி, என்னை ஏமாற்றி விட்டாயே? இவ்வளவு துன்பத்தை உன் தேகம் பொறுத்திருக்க வேண்டும் என்றால் நீ அந்தணனாக இருக்க முடியாது... அந்தணருக்குத் தேகபலம் குறைவு. மனோபலம் அதிகம். பொய் சொல்லிக் கல்வி கற்று விட்டாய்.. நீ க்ஷத்திரியன். க்ஷத்திரியன்.. என்னிடம் கற்ற வித்தை உனக்கு உரிய காலத்தில் பயன் படாமல் போகட்டும்'' என்று கோபத்தைச் சாபமாக உருப் பெயர்த்தார்.

எத்தனை பெரிய இழப்பு. கற்றவித்தை பயன்படாமல் போய் விடும். கர்ணன் கவலைப்படவில்லை. நன்றியுடன் குருவை வணங்கினான். உள்ளே ஒரு மகிழ்ச்சி மின்னல். சாபத்தில் என்ன சந்தோஷம்? ''நீ க்ஷத்திரியன். நீ க்ஷத்திரியன்'' என்ற வார்த்தைகள் அவனுக்குள் எதிரொலித்தன. ''குலம், கோத்திரம் எதுவும் தெரியாத என்னை க்ஷத்திரியன் என்று குரு சொல்லி விட்டார். குருவின் வார்த்தை பொய்யாகாது. என் நெடுநாள் அவலம் இன்றோடு நீங்கியது'' என்று கர்ணன் மகிழ்ந்தான். அந்தச் சாபம் அவனுக்கு வரமாக இருந்தது.

கர்ணனது பிறவி எதிரி அருச்சுனன். அவனுக்கும் அப்படி ஒரு அனுபவம். அஸ்திரங்கள் வேண்டித் தவம் இருந்தான் அருச்சுனன். சூதாடி நாடிழந்த பிறகு, காட்டில் இருந்த சமயம் வியாசர் சொன்ன யோசனையால் அவன் தவம் இருந்தான். இந்திரன் தந்தை அல்லவா? மகன்

சக்தி சிவம்

அருச்சுனனைச் சோதித்து வரம் பல வழங்கி, சிவனருளையும் பெற்றுத் தந்தான். அதன்பின் இந்திர உலகம் அழைத்துச் சென்று விருந்தினனாகத் தங்க வைத்திருந்தான்.

இரண்டாவது இந்திரனாக ஒளி வீசிய அருச்சுனன் இருந்த சபைக்கு ஊர்வசி வந்து நடனமாடினாள். ஏது கருதியோ அவளை நோக்கினான் அருச்சுனன். இந்திரன் தன்னைப் போலவே மகனை நினைத்தான். மருவத் துடிக்கிறது மகனது மனம் என்று நினைத்து, அருச்சுனன் அரண்மனைக்குச் சென்று, தங்கி, அவனை அணைந்து மகிழ்வுறுத்தும்படி ஊர்வசிக்கு உத்தரவும் இட்டான். அருச்சுனன் இளைஞன். பாவையர் பலரை மணந்த மாவீரன். ஊர்வசி உள்ளம் உருகி அவன் இல்லம் வந்தாள். என்ன அதிசயம்!



"தாயே..." என்று ஊர்வசி பாதங்களை வணங்கினான் அருச்சுனன். மையலால் மன மகிழ்ந்து நின்ற ஊர்வசியால் இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. தந்தை இந்திரனின் காதலுக்கு உரியவள் என்ற முறைமையால் தாயே என்றான் அருச்சுனன். நடனக் கலை மீது உள்ள நாட்டத்தால் மட்டுமே அவளை உற்று நோக்கிய உண்மையை உணர்த்தினான்.

"பேடியே... ஆண்மைக்கு அடையாளமாக என்னை அணையாது, பேடி போல் நடந்து கொண்ட நீ, உண்மையில் ஆண்மையற்ற பேடியாகவே ஆகக் கடவாய்..." என்று தன் ஆற்றாமையால் சாபம் இட்டாள். சாபம் அவன் சரித்திரத்தையே சரிய வைத்ததா? இல்லை. அதையே அவன் வரமாக்கிக் கொண்டான். எப்படி? அந்தச் சாபத்திற்குக் கால எல்லை ஓராண்டு என்று இந்திரன் மூலம் எல்லை கட்டினான். வேண்டும் போது அந்தச் சாபத்தை அனுபவிப்பதாக வாக்கும் கொடுத்தான்.

பாண்டவர்கள் மறைந்து வாழ வேண்டிய அஞ்ஞாத வாசம் என்ற ஓராண்டு முழுவதும் அந்தச் சாபத்தைப் பயன்படுத்திப் பிருகன்னளை என்ற பேடியாக விளங்கினான் அருச்சுனன். அந்தச் சாபம் இல்லை என்றால் அருச்சுனனை எப்படி மறைத்து வைக்க முடியும். நெருப்பை ஒளித்து வைக்க முடியுமா? கடலுக்கு மூடி போட யாரால் முடியும்? வீரமே உருவான அருச்சுனன் ஆணுமல்லாத பெண்ணும் அல்லாத பேடியாக இருக்க முடியும் என்று துரியோதனன் கனவிலும் நினைத்திருக்க முடியாது! அஞ்ஞாத வாசத்தின் வெற்றிக்கு அந்தச் சாபமே அடிப்படைத் துணை!

இரண்டு விழிகள் இழந்த அந்தணன் மகனை அறியாமல் கொன்றான் தசரதன். கமண்டலத்தில் நீர்முகந்த ஒலியை யானை நீர் அருந்துவதாக நினைத்து சப்தவேதி என்ற அம்பை விட்டுக் கொன்று விட்டான். தந்தைக்கு விஷயம் தெரியவந்ததும் (தசரதன் மறைக்கவில்லை... ஆட்சியாளர்கள் சத்யமாக இருந்த காலம்) சாபம் இட்டான். "என்னைப் போலவே பிள்ளையை இழந்து அந்தத் துன்பத்தில் உன் உயிர் பிரியும்." தசரதன் மகிழ்ந்தான். ஏன்? தன் தவறுக்குத் தண்டனை கிடைத்ததே என்பது முதல் காரணம். இன்னும் ஒன்று.

அப்போது அவனுக்குப் பிள்ளை இல்லை.. இவன் சாபம் உண்மையாவதற்காகவாவது தனக்கு மகன் பிறப்பான் என்று நம்பினான்.

தேடிப் பார்த்தால் ஒவ்வொரு சாபத்திலும் ஒவ்வொரு வரம் இருக்கிறது!

பார்வையற்றோரின் நடனம் பாருங்கள்!




நான்கு வருடங்களுக்கு முன்பு பூலே கௌடாவை நடனம் ஆடத் தெரியுமா என்றால் அவனது பார்வையற்ற கண்கள் விழித்திருக்கும்! ஆனால் இன்று அவன் பரதப் போட்டிகளில் கூடக் கலந்து கொள்ள முடியும்.

இந்தப் பத்தொன்பது வயது இளைஞர், பெங்களூர் ஸ்ரீ ரமண மஹரிஷி பார்வையற்றோர் அகாதமியின் மாணவர்களுள் ஒருவர். ஊனமுற்றவர்களுக்குச் சமமான வாய்ப்பளிக்கும் தேசிய ஸ்தாபனத்தின் பரிசும் பாராட்டும் பெற்று 'நடன மயூரா' விருதும் பெற்று விட்டார்.

இதுபோன்று அகாதமியில் உள்ள இருபது குழந்தைகள் சமீபத்தில் செகந்திராபாதில் நடந்த ராம நவமிக் கலை விழாவில், ராமாயண நாட்டிய நாடகம் நடத்திய போது, சபையினர் அசந்து விட்டனர்.

அவர்கள் போட்டிருந்த அழகிய பளபளக்கும் உடையின் வண்ணம் அவர்களுக்குத் தெரியாது. பிறருக்குத் தெரியும். அவர்களது நடனத்தை அவர்கள் பார்க்க முடியா விட்டாலும் பிறருக்கு அது விருந்தாக இருந்தது.

மேடையேறி வர அவர்களுக்குச் சிலர் உதவி [illegible]கள். மேடைக்கு வந்த



பிறகு குரு பிரசாத் (ராமன்), நாகரத்னா (சீதை)வுக்குச் சரியாக மாலை அணிவித்தார். தாரக ராமுடு, ஹனுமானாக மேடையில் பாய்ந்து பாய்ந்து இலங்கையை எரித்த சிற்றத்தைப் பார்த்த போது, அவர் மேடை விளிம்பைத் தாண்டி விழுந்து விடக் கூடாதே என்ற பயம் நம்மை அப்பிக் கொண்டது. ஆயினும் அவர் சரியாகவும் கணக்குப் பிசகாமலும் செய்து நம்மை ஆச்சரியப்படுத்தினார்.

ராவணனாக நடித்த நஞ்சே கௌடா அட்டகாசமாக நடித்தார். பதினாறு வயது மல்லிகார்ஜுனனின் மிருதங்கமும், பதினேழு வயது ஜோஷியின் இந்துஸ்தானி, கர்நாடக இசையும் சிறப்பாக இருந்தன. இவர்களும் பார்வை இழந்தவர்களே!

இது எப்படி இவர்களுக்குச் சாத்தியமாகிறது? இந்த அற்புதத்தைச் சாதித்திருப்பவர் அஷோக் குமார் என்ற இருபத்தாறு வயது இளைஞர்தான். அவர்தான் குரு. நடன சாஸ்திரம் கற்றவர். கடந்த ஆறு வருடங்களாக அகாதமியில் பாடம் நடத்தி வருபவர். ரஷ்யா சென்று பயின்று திரும்பிய ஸ்ரீமதி மாயா ராவிடம் மேலைநாட்டு மேடை ஒளி அமைப்பு; நடனத் தொகுப்பு முறைகளைப் பயின்றவர். ஸ்ரீமதி ராதா ஸ்ரீதரிடம் பரதம் பயின்றவர்.

''எப்படிச் சொல்லித் தருகிறீர்கள்?''

''நான் ஒரு போஸில் நிற்பேன். என் முகம், கை, கால்களைத் தடவிப் பார்த்து, அந்த 'நிலை'யை உணர்கிறார்கள். ஊனமுற்றோருக்குச் சில உணர்வுகள் நுட்பமாக இருக்கும். பூலே கௌடாவிற்குக் கண் நிறைந்தவர்களின் ஆற்றலையும் வெல்லும் சக்தி இருந்தது. அதை வளர்த்தோம். முத்திரைகளைக் கூடக் குருவின் விரல்களைப் பற்றிக் கொண்டு புரிந்து கொள்கிறார்கள்!''

''வேறு என்னவெல்லாம் சொல்லித் தருகிறீர்கள்?''

''எங்கள் மகரிஷி அகாதமியில் சுமார் 300 மாணவ மாணவிகள் உள்ளனர். பத்தாம் வகுப்பு வரை படிக்க வசதி உண்டு. பிரெய்ல் முறை தவிர, புதிதாக 'வாய்ஸ் சிந்தஸிஸ்' அடங்கிய கம்ப்யூட்டர் ஞானமும் பெறுகிறார்கள். தொழிற்கல்வியும் உண்டு. ஹிந்துஸ்தான் லீவர் போன்ற பெரிய நிறுவனங்கள் இங்கு அட்டைப் பெட்டிக்கு ஆர்டர் தந்து உதவுகின்றன.

''இவை தவிர, ஆரோஹல்லி என்ற தாலுகாவைத் தேர்ந்தெடுத்து, அறுபத்தைந்து பிரிவுகள் மூலம் 650 ஊனமுற்றோருடன் தொடர்பு கொண்டு, அவர்களுக்குப் பால் பண்ணை, கோழி வளர்ப்பு, தோட்டக் கலை முதலியவற்றில் பயிற்சி தந்து, அவர்கள் சொந்தக் காலில் நிற்க உதவுகிறோம்.''

பார்வையற்றோர் நடனம் கண்டு, வியப்புற்ற மக்கள், நடனம் முடிந்த போது அளித்த 'ஆன் தி ஸ்பாட்' நன்கொடை ரூ. 2,500/-. காரியதரிசி ராஜேந்திரன் மக்கள் உற்சாகம் கண்டு மனம் நெகிழ்ந்தார்.

அகாதமியினர் குழந்தைகளைச் சொந்த பஸ்ஸிலேயே அழைத்து வந்தனர். அவர்கள் பஸ் திரும்பப் புறப்பட்டது. ஓட்டுநர் கே. வி. பட், அகாதமியில் பி. ஏ. படித்து, வேலை பார்க்கும் அந்தகப் பெண் சரசுவதியை மணந்தவர். அவர் பஸ்ஸை ஸ்டார்ட் செய்தார். பார்வையற்ற குழந்தைகள் கைகளை ஆட்டிக் கண்ணுக்குத் தெரியாத ரசிகர்களிடம் விடைபெற்றுச் சென்றனர்.

இல்லை! இல்லை! அவர்கள் இன்னும் பார்த்தவர்கள் கண்ணுக்குள்ளேயே இருக்கின்றனர்!

– சுபஸ்ரீ

சிவகாமியின் சபதம்

இரண்டாம் அத்தியாயம்

மானவன்மன்

திருக்கழுக்குன்றத்தைச் சுற்றிலும் விசாலமான பிரதேசத்தில் பல்லவ சைனியம் தண்டு இறங்கியிருந்தது.

அந்தக் குன்றின் உச்சியில் வீற்றிருந்த சிவபெருமானாகட்டும், அந்தப் பெருமானைத் தினந்தோறும் வந்து வழிபட்டுப் பிரஸாதம் உண்டு சென்ற கழுகுகள் ஆகட்டும், அதற்கு முன்னால் அக் குன்றின் சாரலில் அம்மாதிரிக் காட்சியை எப்போதும் பார்த்திருக்க முடியாது. குன்றின் மேலேயிருந்து வடக்கே நோக்கினால் கண்ணுக்கு எட்டிய தூரத்துக்கு ஒரே யானைகள் யானைகள், யானைகள்! உலகத்திலே இத்தனை யானைகள் இருக்க முடியாது! இவ்வளவு யானைகளும் ஒரே இடத்தில் வந்து சேர்ந்திருப்பதினால் பூமி நிலை பெயர்ந்து விடாதா என்றெல்லாம் பார்ப்பவர்கள் மனத்தில் சந்தேகத்தைக் கிளப்பும்படியாக எல்லையில்லாத தூரம் ஒரே யானை மயமாகக் காணப்பட்டது.

கிழக்கே திரும்பிப் பார்த்தால், உலகத்திலே குதிரைகளைத் தவிர வேறு ஜீவராசிகள் இல்லையென்று சொல்லத் தோன்றும். எல்லாம் உயர்ந்த ஜாதிக் குதிரைகள்; அரபு நாட்டிலிருந்தும் பாரசீகத்திலிருந்தும் கப்பலில் வந்து மாமல்லபுரம் துறைமுகத்தில் இறங்கியவை. வெள்ளை நிறத்தவை, சிவப்பு நிறத்தவை, பளபளப்பான கரிய நிறமுடையவை, சிவப்பு நிறத்தில் வெள்ளைப் புள்ளி உள்ளவை;- ஹா ஹா! அந்த அழகிய மிருகங்களைப் பார்த்துக் கொண்டேயிருக்கலாமென்று தோன்றும். போர்க்களத்துக்குப் போகும் இந்தப் பதினாயிரக்கணக்கான குதிரைகளில் எவ்வளவு குதிரைகள் உயிரோடு திரும்பி வருமோ என்று நினைத்துப் பார்த்தால் கதிகலங்கும்.

தென்புறத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் குதிரைகள் பூட்டிய ரதங்களும், ரிஷபங்கள் பூட்டிய வண்டிகளும், பொதி சுமக்கும் மாடுகளும் ஒட்டகங்களும் கோவேறு கழுதைகளும் காணப்பட்டன.

வண்டிகளிலே தானிய மூட்டைகளும் துணி மூட்டைகளும் கத்திகளும் கேடயங்களும் வாள்களும் வேல்களும் ஈட்டிகளும் சூலங்களும் வில்களும் அம்பறாத் தூணிகளும் இன்னும் விதவிதமான விசித்திர ஆயுதங்களும் பிரம்மாண்டமான வடக்கயிறுகளும் நூல் ஏணிகளும் கொக்கிகளும் அரிவாள்களும் மண்வெட்டிகளும் தீப்பந்தங்களும் தீவர்த்திகளும் அடுக்கப்பட்டிருந்தன. வண்டியில் ஏற்றப்படாமல் இன்னும் எத்தனையோ ஆயுதங்களும் மற்றக் கருவிகளும் மலைமலையாக ஆங்காங்கு கிடந்தன. ஓரிடத்தில் மலைபோலக் குவிந்திருந்த தாழங்குடைகளைப் பார்த்தால், அவற்றைக் கொண்டு பூமியின் மீது ஒரு சொட்டு மழை கூட விழாமல் வானத்தையே மூடி மறைத்து விடலாம் என்ற எண்ணம் உண்டாகும்.

மேற்கே திரும்பினால், அம்மம்மா! பூவுலகத்திலுள்ள மனிதர்கள் எல்லாம் இங்கே திரண்டு வந்திருக்கிறார்களா, என்ன? அப்படிக் கணக்கிட முடியாத வீரர்கள் ஈ மொய்ப்பது போலத் தரையை மொய்த்துக் கொண்டு நின்றார்கள்! இராவணேசுவரனுடைய மூல பல சைனியம் என்று நாம் கேள்விப்பட்டிருக்கும் மகா சைனியத்திலே கூட வீரர்களின் எண்ணிக்கை இவ்வளவு இருந்திருக்குமா என்று சொல்ல முடியாது.

இவ்விதம் அந்த நாலு வகைப்பட்ட பல்லவ சைனியமும் தண்டு இறங்கியிருந்த

பிரதேசம் முழுவதிலும் ஆங்காங்கு ரிஷபக் கொடிகள் வானளாவிப் பறந்து காற்றில் ஆடிக் கொண்டிருந்தன.

மேற்கூறிய சேனாசமுத்திரத்தை அணுகி, மாமல்ல நரசிம்ம சக்கரவர்த்தியானவர் ரதத்தில் வந்து கொண்டிருந்தார்.

அவரைத் தூரத்திலே பார்த்ததும், பூரண சந்திரனைக் கண்டு ஆஹ்லாதித்துப் பொங்கும் சமுத்திரத்தைப் போல அந்தச் சேனா சமுத்திரத்தில் மகத்தான ஆரவாரம் ஏற்பட்டது.

சங்கங்களும் தாரைகளும் பேரிகைகளும் முரசுகளும் 'கடுமுகங்'களும் 'சமுத்திர கோஷங்'களும் சேர்ந்தாற்போல் முழங்கியபோது எழுந்த பேரொலியானது, நாற்றிசைகளிலும் பரவி, வான முகடு வரையில் சென்று, அங்கிருந்து கிளம்பி எதிரொலியோடு மோதி, கொந்தளிக்கும் கடலில் அலைகள் ஒன்றையொன்று தாக்கி உண்டாக்குவது போன்ற பேரமளியை உண்டாக்கியது.

இன்னும் அந்த வீரர் பெருங்கூட்டத்தில் ஆயிரமாயிரம் வலிய குரல்களிலிருந்து, ''மாமல்லர் வாழ்க!'', ''புலிகேசி வீழ்க!'' ''காஞ்சி உயர்க!'', ''வாதாபிக்கு நாசம்!'' என்பன போன்ற கோஷங்கள் காது செவிடுபடும்படியான பெருமுழக்க மாக ஏகோபித்து எழுந்து, வானமும் பூமியும் அதிரும்படி செய்தன.

இப்படி ஆரவாரித்த மாபெருஞ் சைனியத்திலிருந்து தனியே பிரிந்து உயர்ந்த ஜாதிக் குதிரை மீது ஆரோகணித்திருந்த ஒரு கம்பீர புருஷன் சக்கரவர்த்தியின் ரதத்தை எதிர்கொள்வதற்காக முன்னோக்கிச் சென்றான். ரிஷபக் கொடி ஏந்திய வீரர் இருவர் அவனைத் தொடர்ந்து பின்னால் சென்றார்கள்.

அப்படி மாமல்லரை எதிர்கொள்வதற்காகச் சென்றவன்தான் மானவன்மன் என்னும் இலங்கை இளவரசன்.

இந்த மானவன்மனுடைய தந்தையும் மகேந்திர பல்லவரும் நண்பர்கள். மகேந்திர பல்லவரைப் போலவே மானவன்மனுடைய தந்தையும் கலைகள் வளர்ப்பதில் ஈடுபட்டு, அரசியலை அதிகமாய்க் கவனியாது விட்டிருந்தார். இதன் பலனாக அவர் இறந்ததும் மானவன்மன் சிம்மாசனம் ஏற இடங்கொடாமல் அட்டதத்தன் என்னும் சிற்றரசன் இராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டான். மானவன்மன் காஞ்சி மாமல்லருக்கு உதவி கோரித் தூது அனுப்பினான். அப்போதுதான் தொண்டை மண்டலத்தைப் பெரும் பஞ்சம் பீடித்திருந்தது. எனினும் மாமல்லர் ஒரு சிறு படையைக் கப்பலில் ஏற்றி இலங்கைக்கு அனுப்பி வைத்தார். அந்தப் படை இலங்கையை அடையும் சமயத்தில் மானவன்மன் படு தோல்வியுற்றுக் காட்டில் ஒளிந்து கொண்டிருந்தான். மாமல்லர் அனுப்பிய சிறு படை அட்டதத்தனோடு போரிடுவதற்குப் போதாது என்று கண்ட மானவன்மன், பல்லவர் படையோடு தானும் கப்பலில் ஏறிக் காஞ்சிக்கு வந்து சேர்ந்தான்.

மகேந்திர பல்லவருடைய சிநேகிதரின் மகன் என்ற காரணத்தினால், மானவன்மன் மீது இயற்கையாகவே மாமல்லருக்கு அன்பு ஏற்பட்டது. அதோடு அயல்நாட்டிலிருந்து தம்மை நம்பி வந்து அடைக்கலம் புகுந்தவனாகையால் அன்போடு அநுதாபமும் சேர்ந்து, அரியாத சிநேகமாக முதிர்ச்சியடைந்தது. வெகு சீக்கிரத்தில் இணை பிரியாத தோழர்கள் ஆனார்கள்.

மாமல்லர் பரஞ்சோதிக்குத் தமது இருதயத்தில் எந்த ஸ்தானத்தைக் கொடுக்க விரும்பினாரோ, அந்த ஸ்தானத்தை இப்போது மானவன்மன் ஆக்கிரமித்துக் கொண்டான்.

உண்மையில் மாமல்லருக்கும் பரஞ்சோதிக்கும் மனமொத்த அந்தரங்க சிநேகிதம் எப்போதும் ஏற்படவேயில்லை. ஏனெனில், பரஞ்சோதியின் உள்ளத்தில் மாமல்லர் புராதன சக்கரவர்த்தி குலத்தில் உதித்தவராகையால் தாம் அவரோடு சரிநிகர் சமானமாக முடியாது என்னும் எண்ணம் எப்போதும் இருந்து வந்தது.

அதோடு, ஒன்பது வருஷத்துக்கு முன்னால் வாதாபியிலிருந்து திரும்பி வந்ததிலிருந்து, சேனாதிபதி பரஞ்சோதி படையெடுப்புக்கு வேண்டிய ஆயத்தங்களில் முழுவதும் கவனத்தைச் செலுத்தியிருந்தார். ஊர் ஊராகச் சென்று வீரர்களைத் திரட்டுவதிலும், அவர்களுக்குப் போர்ப் பயிற்சி அளிப்பதிலும், அவர்களில் யானைப் படை, குதிரைப் படைகளுக்கு ஆட்களைப் பொறுக்கி அமைப்பதிலும், ஆயுதங்கள் சேகரிப்பதிலும் அவர் பரிபூரணமாய் ஈடுபட்டிருந்தார். மாமல்லரிடம் சிநேகித சல்லாபம் செய்வதற்கு அவருக்கு நேரமே இருப்பதில்லை.

எனவே, மாமல்லருக்கு மனமொத்துப் பழகுவதற்கு வேறொருவர் தேவையாயிருந்தது. அந்தத் தேவையை இலங்கை இளவரசன் மானவன்மன் பூர்த்தி செய்வித்தான்.

அமரர் கல்கி

மானவன்மன் இலங்கையிலிருந்து காஞ்சி வந்தவுடனே மாமல்லர் அவனுடைய உதவிக்காகப் பெரிய சைனியத்தை அனுப்பி வைப்பதாகக் கூறினார். ஆனால் அப்போது வாதாபி படையெடுப்புக்காகச் சைனியம் திரட்டப்பட்டு வந்ததை மானவன்மன் அறிந்ததும் அந்தச் சைனியத்தில் ஒரு பெரும் பகுதியைப் பிரித்துக் கொண்டு போக விரும்பவில்லையென்பதைத் தெரிவித்தான். வாதாபி யுத்தம் முடியும் வரையில் அங்கேயே தான் தங்குவதாகவும், பிறகு இலங்கைக்குப் போவதாகவும் சொன்னான்.

இதனால் மாமல்லர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அச் சமயம் இலங்கைக்குப் பெரிய சைனியம் அனுப்புவதற்குச் சேனாதிபதி பரஞ்சோதி ஆட்சேபிப்பார் என்ற பயம் மாமல்லருக்கு உள்ளுக்குள் இருந்தது. எனவே, மானவன்மன் இலங்கைப் படையெடுப்பைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று சொன்னது நரசிம்மவர்மருக்கு மிக்க திருப்தியையளித்தது. மானவன்மனுடைய பெருந்தன்மையைப் பற்றியும், சுயநலமில்லாத உயர்ந்த குணத்தைப் பற்றியும் எல்லாரிடமும் சொல்லிச் சொல்லிப் பாராட்டினார்.

பின்னர், வாதாபிப் படையெடுப்புக்குரிய ஆயத்தங்களில் மானவன்மனும் பரிபூரணமாய் ஈடுபட்டான். முக்கியமாக யானைப் படைப் போரில் மானவன்மனுக்கு விசேஷ சாமர்த்தியம் இருந்தது. எனவே, யானைப் படைகளைப் போருக்குப் பயிற்சி செய்வதில் அவன் கவனத்தைச் செலுத்தினான்.

புலிகேசி முன்னம் படையெடுத்து வந்த போது, அவனுடைய பெரிய யானைப் படைதான் அவனுக்கு ஆரம்பத்தில் வெற்றி யளித்ததென்றும், யானைப் படை போதிய அளவில் இல்லாத படியாலேயே மகேந்திர பல்லவர் பின்வாங்கவும் கோட்டைக்குள் ஒளியவும் நேர்ந்தது என்றும் பரஞ்சோதியும் மாமல்லரும் அறிந்திருந்தார்கள். எனவே, வாதாபிப் படையெடுப்புக்குப் பெரும் யானைப் படை சேகரிக்கத் தீர்மானித்து, சேர நாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான யானைகள் தருவித்திருந்தார்கள். அந்த யானைகளைப் போருக்குப் பழக்குவதற்கு மானவன்மன் மிக்க உதவியாயிருந்தான்.

வாதாபிக்குப் படை கிளம்ப வேண்டிய தினம் நெருங்க நெருங்க, மானவன்மனுக்கும் மாமல்லருக்கும் ஒரு பெரும் வாக்குப் போர் நடக்கலாயிற்று; படை யெடுப்புச் சேனையோடு தானும் வாதாபி வருவதற்கு மானவன்மன் மாமல்லரின் சம்மதத்தைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

மாமல்லரோ வேறு யோசனை செய்திருந்தார். அதிதியாக வந்து அடைக்கலம் புகுந்தவனைப் போர்க்களத்துக்கு அழைத்துப் போக அவருக்கு விருப்பம் இல்லை. அதோடு அவர் மனத்தில் இன்னொரு யோசனையும் இருந்தது; தாமும் பரஞ்சோதியும் வாதாபிக்குச் சென்ற பிறகு, காஞ்சி இராஜ்யத்தைக் கவனித்துக் கொள்ளவும் அவசியமான போது தளவாடச் சாமான்கள், உணவுப் பொருள்கள் முதலியவை சேர்த்துப் போர்க்களத்துக்கு அனுப்பி வைக்கவும் திறமையுள்ள ஒருவர் காஞ்சியில் இருக்க வேண்டும். அதற்கு மானவன்மனை விடத் தகுந்தவர் வேறு யார்?



அன்றியும் மானவன்மனைக் காஞ்சியில் விட்டுப் போவதற்கு மாமல்லரின் இதய அந்தரங்கத்தில் மற்றொரு காரணமும் இருந்தது.

வாழ்வு என்பது சதமல்ல; எந்த நிமிஷத்தில் யமன் எங்கே, எந்த ரூபத்தில் வருவான் என்று சொல்ல முடியாது. அதிலும் நெடுந்தூரத்திலுள்ள பகைவனைத் தாக்குவதற்குப் படையெடுத்துப் போகும் போது, எந்த இடத்தில் உயிருக்கு என்ன அபாயம் நேரும் என்று யாரால் நிர்ணயிக்க முடியும்? புலிகேசியைக் கொன்று, வாதாபியையும் நிர்மூலமாக்காமல் காஞ்சிக்குத் திரும்புவதில்லையென்று மாமல்லர் தம் மனத்திற்குள் சங்கல்பம் செய்து கொண்டிருந்தார். வெற்றி கிடைக்கா விட்டால் போர்க்களத்தில் உயிரைத் தியாகம் செய்யும்படியிருக்கும். அப்படி ஒருவேளை நேர்ந்தால் காஞ்சிப் பல்லவ இராஜ்யம் சின்னாபின்னமடையாமல் பார்த்துக் கொள்வதற்கும், குமாரன் மகேந்திரனைச் சிம்மாசனத்தில் ஏற்றி ஸ்திரப்படுத்துவதற்கும் யாராவது ஒரு திறமைசாலி வேண்டாமா? அந்தத் திறமைசாலி தம்முடைய நம்பிக்கைக்கு முழுதும் பாத்திரமானவனாயும் இருக்க வேண்டும்.

காஞ்சி இராஜ்யத்தையும் குமாரன் மகேந்திரனையும் நம்பி ஒப்படைத்து விட்டுப் போவதற்கு மானவன்மனைத் தவிர யாரும் இல்லை. தம் மைத்துனனாகிய ஜயந்தவர்ம பாண்டியனிடம் மாமல்லருக்கு அவ்வளவாக நம்பிக்கை இல்லை. ஜயந்தவர்மனுக்கு ஒரு காலத்தில் தமிழகம் முழுவதையும் ஒரு குடையின் கீழ் ஆள வேண்டுமென்ற ஆசை இருந்ததென்பது மாமல்லருக்குத் தெரியும்.





"பழைய பேப்பர்க்காரன் பக்கி மேல கேஸ் போட்டு உள்ளே தள்ளிட்டாங்க!"

"அடடா, எதுக்கு....?"

"பொதுமக்கள்கிட்ட வாங்கற மனுக்களை எப்ப எடைக்குப் போடப் போறீங்கன்னு அரசாங்கத்துக்குக் கடிதம் எழுதினானாம்..!?"

- சீர்காழி வி. ரேவதி



"என்னப்பா இது? இந்த மெனு கார்டுல 'வருத்த மீன்'னு போட்டிருக்கீங்களே! பிழையா இல்லே இருக்கு!"

"அது கரெக்ட்தான் சார்! அந்த மீன் சாகும்போது வருத்தப்பட்டிருக்கும் இல்லீங்களா?"

- எம்.எம். ஆனந்தன்



"முதல்முதல்லே நான் மோட்டார் பைக் வாங்கி ஓட்டக் கத்துக்கிட்ட உடனே எங்கே போனேன் சொல்லு...?"

"'கோவில் குளம்'னு சாமி கும்பிட எங்கேயாவது போயிருப்பே...?"

"அதுதான் இல்லே... முதல்ல, பெரியாஸ்பத்திரிக்குத்தான் போனேன்...?"

- ஜூனியர் தேஜ்

பாண்டியனிடம் தமக்கு உள்ளுக்குள் இருந்த அவநம்பிக்கையை மாமல்லர் வெளியே காட்டிக் கொள்ளாமல் வாதாபி படையெடுப்புக்கு அவனுடைய உதவியைக் கோரினார். ஜயந்தவர்மனும் தன்னுடைய மகன் நெடுமாறனின் தலைமையில் ஒரு பெரிய சைனியத்தை அனுப்புவித்தான். அந்தச் சைனியந்தான் வராக நதிக் கரைக்கு அப்போது வந்திருந்தது.

இப்படி மாமல்லர் பாண்டியனிடம் யுத்தத்துக்கு உதவி பெற்றாரெனினும், தம் ஆருயிர்த் தோழனான மானவன்மனிடமே முழு நம்பிக்கையும் வைத்து, அவனைக் காஞ்சியில் இருக்கச் சொல்லி விட்டுத் தாம் வாதாபி செல்வதென்று தீர்மானித்தார்.

மானவன்மனோ, பி டி வா த மாகத் தானும் வாதாபிக்கு வரவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தான். மேற்படி விவாதம் அவர்களுக்குள் இன்னும் முடியாமலே இருந்தது.

மாமல்லர் ரதத்திலிருந்தும் மானவன்மன் குதிரை மீதிருந்தும் கீழே குதித்தார்கள். ஒருவரையொருவர் ஆலிங்கனம் செய்து கொண்டு மகிழ்ந்தார்கள். பிறகு, மானவன்மன் ரதத்திலிருந்த ஆயனரைச் சுட்டிக்காட்டி, "அண்ணா! இந்தக் கிழவரை எதற்காக அழைத்து வந்தீர்கள்? படையெடுக்கும் சைனியத்தைப் பார்த்து விட்டுப் போவதற்கா? அல்லது ஒரு வேளை யுத்தத்துக்கே அழைத்துப் போக உத்தேசமா?" என்று கேட்டான்.

அதற்கு மாமல்லர், "அதை ஏன் கேட்கிறாய், தம்பி! ஆயனக்கிழவர் எல்லார்க்கும் முன்னால் தாம் போருக்குப் போக வேண்டும் என்கிறார். அவருக்குப் போட்டியாகக் குமாரன் மகேந்திரன் தானும் யுத்தத்துக்குக் கிளம்புவேனென்கிறான். 'அண்ணா யுத்தத்துக்குப் போனால் நானும் போவேன்' என்கிறாள் குந்தவி. இதோடு போச்சா? நமது சாரதி கண்ணன் மகன் சின்னக் கண்ணன் இருக்கிறான் அல்லவா? அவன் நேற்றுக் கையிலே கத்தி எடுத்துக் கொண்டு தோட்டத்துக்குள் புகுந்து, 'சளுக்கர் தலையை இப்படித்தான் வெட்டுவேன்' என்று சொல்லிக் கொண்டே அநேகச் செடிகளை வெட்டித் தள்ளி விட்டானாம்!" என்றார்.

மானவன்மன் குறுக்கிட்டு, "ஆயனக் கிழவர், சின்னக் கண்ணன், குமார சக்கரவர்த்தி, குந்தவி தேவி ஆகிய வீரர்களைப் போர்க்களத்துக்கு அழைத்துப் போங்கள். என்னைப் போன்ற கையாலாகாதவர்களைக் காஞ்சியில் விட்டு விடுங்கள்!" என்றான்.



அருள்வாக்கு

வண்டானது எப்படிப் புஷ்பத்துக்கு வலி தெரியாமல் தேனை எடுத்துக் கொள்கிறதோ, அப்படித்தான் ராஜா பிரஜைகளுக்குக் கொஞ்சங் கூட சிரமம் தெரியாமல், அவர்களுடைய மலர்ச்சி குன்றாமலே வரி வசூலித்து எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது சாஸ்திரம். இதை இன்னொரு உவமையால் இன்னும் அழகுபடுத்திச் சொல்லியிருக்கிறான் உவமைக்கே பெயர் பெற்ற காளிதாஸன். ''ஸூரியன் எப்படி முதலில் பூமியிலிருந்து ஜலத்தை உறிஞ்சிக் கொண்டு, அப்புறம் அதை பூமிக்கே மழையாகப் பொழிகிறானோ, அப்படி திலீபன் பிரஜைகளிடமிருந்து வசூலித்ததைப் பிறகு அவர்களுடைய நலனுக்கேயான காரியங்களில் செலவிட்டான்'' என்கிறான். லோகத்துக்கு ஒரு பிரயோஜனமுமில்லாமல் எங்கேயோ ஸமுத்ரத்தில் இருக்கிற உப்பு ஜலத்தை ஸூரியன் இழுத்து, அப்புறம் உலகுக்குப் பயனாகிற சுத்த ஜலமாக அதை வர்ஷிக்கிறானல்லவா? இப்படித்தான் ஸமுதாய க்ஷேமத்துக்கு வராத செல்வத்தை ராஜா வரியாய் வசூல் செய்து, பிறகு அதன் க்ஷேமத்துக்கே செலவிட்டான் என்று அர்த்தம்.

'ராஜா' என்ற வார்த்தைக்குக் காளிதாஸன் கொடுக்கிற டெஃபனிஷனே அவன் ஜனங்கள் மீது யதேச்சாதிகாரம் பண்ணாமல், ஸர்வ ஜனங்களுக்கும் பரமப் பிரியனாக இருந்தானென்பதுதான். ராஜா ப்ரக்ருதி ரஞ்ஜநாத் என்பதுதான் அந்த டெஃபனிஷன். 'ப்ரக்ருதி' என்றால் 'பொது ஜனங்கள்'; 'ரஞ்ஜநாத்' என்றால் 'மகிழ்ப் பண்ணுவதால்'. பொது மக்களை மகிழப் பண்ணுவதாலேயே, 'ரஞ்ஜ்' என்ற 'ரூட்'டிலிருந்து 'ராஜ்' என்ற வார்த்தை உண்டானதாகக் காட்டியிருக்கிறான்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

''அப்படியெல்லாம் உன்னைத் தனியாக விட்டு விட்டுப் போக மாட்டேன். மாமா காஞ்சியில் இருந்தால் தானும் இருப்பதாக மகேந்திரன் சொல்கிறான்; மகேந்திரன் இருந்தால் தானும் இருப்பதாகக் குந்தவி சொல்கிறாள்'' என்றார் மாமல்லர்.

உடனே மானவன்மன், குமார சக்கரவர்த்தியைத் தூக்கிக் கொண்டு, ''நீ ஒரு குழந்தை! நானும் ஒரு குழந்தை, நாம் இரண்டு பேரும் காஞ்சியில் இருப்போம். மற்ற ஆண் பிள்ளைகள் எல்லாம் யுத்தத்துக்குப் போகட்டும்!'' என்றான்.

அப்போது குந்தவி, ''ஏன் மாமா! உங்கள் அப்பாவுக்கு நீங்கள் குழந்தை தானே?'' என்று வெடுக்கென்று கேட்டாள். மானவன்மன் குமார மகேந்திரனைத் தரையில் விட்டு விட்டுக் குந்தவியின் முன்னால் வந்து கைகட்டி வாய் புதைத்து நின்று, ''தேவி! தாங்கள் இருக்குமிடத்தில் யாரும் வாயைத் திறக்கக் கூடாதல்லவா? நான் பேசியது பிசகு! மன்னிக்க வேண்டும்!'' என்று வேடிக்கையான பயபக்தியோடு சொல்லவும், ஆயனர் உள்பட அனைவரும் நகைத்தார்கள்.

அன்று சாயங்காலம் மாமல்லரும் மானவன்மனும் தனிமையில் சந்தித்த போது, ''அண்ணா! உண்மையாகவே ஆயனரை வாதாபிக்கு அழைத்துப் போகப் போகிறீர்களா?'' என்று கேட்டான்.

''ஆமாம், தம்பி! இரண்டு முக்கிய காரணங்களுக்காக அவரை அழைத்துப் போகிறேன். முதலாவது, நம் படை வீரர்கள் தூர தேசத்தில் இருக்கும் போது காலொடிந்த கிழவரைப் பார்த்தும் அவருடைய புதல்வியை நினைத்தும் மன உறுதி கொள்வார்கள். அதோடு, யாருக்காக இத்தகைய பெருஞ்சேனை திரட்டிக் கொண்டு படையெடுத்துச் செல்கிறோமோ, அவளை ஒருவேளை உயிரோடு மீட்க முடிந்தால், உடனே யாரிடமாவது ஒப்புவித்தாக வேண்டுமல்லவா? அவளுடைய தந்தையிடமே ஒப்புவித்து விட்டால் நம் கவலையும் பொறுப்பும் விட்டது'' என்றார் மாமல்லர்.

அப்போது அவர் விட்ட பெருமூச்சு மானவன்மனுடைய இருதயத்தில் பெரு வேதனையை உண்டாக்கியது.

(தொடரும்)

விரும்பிக் கேட்டவை

ஸைசியகலக் கண்ணாடியில் தெரிந்த முகமே நிர்மலாவைக் கலங்க அடித்தது. தன் அழகைப் பற்றிய பிரக்ஞை இல்லாமலே இருந்திருக்கிறாள். ஆனாலும் இந்த அழகுதான் முரளியைக் கலவரப் படுத்தியிருக்கிறது. பணக்காரன் என்னும் ஒரே காரணத்திற்காக அவளை ராமகிருஷ்ணனிடமிருந்து பிரிக்கப் போகிறது.

கண்ணாடியை ஆக்ரோஷத்துடன் வீசி எறிய, அது சுவரில் பட்டு, நடுவில் விரிசல் விட்டது.

''என்னடி நிர்மலா?'' அம்மாவின் முகம் சமையலறை ஜன்னலிலிருந்து எட்டிப் பார்த்தது.

''ஒன்னுமில்லை.''

''நீ இன்னும் கிளம்பலியா?''

''இல்லை.''

''அஞ்சு மணிக்கு முரளி வரேன்னு சொல்லி இருக்காரே!''

''வரட்டும்.''

''என்ன ஆச்சு உனக்கு?''

''நான் என்ன பஜாரியா? என்னைப் புடிச்சிருக்குன்னு சொல்லி வர்றவன் முன்னாடி பளிச்சுன்னு ட்ரஸ் பண்ணிண்டு வந்து நிக்க?''

அம்மா சமையல் உள்ளிருந்து வந்துவிட்டாள். பெண் முகம் கலங்கிப் போயிருந்தது. மூலையில் கண்ணாடி விரிந்தபடி இருந்தது.

''நிர்மலா! முரளியை உனக்குப் பிடிக்கலியா?''

இப்பொழுது அம்மாவிடம் சொல்லிவிடலாமா ராமகியைப் பற்றி? அவனுடைய கவிதைகளையும், கயசிந்தனையையும், தைரியத்தையும், கோபத்தையும் அம்மாவால் புரிந்து கொள்ள முடியுமா? ஏன் காதல் என்பது தைரியமான சிந்தனையாக மாறாமல் குற்ற உணர்ச்சியாகவே போய் விட்டது.

''கேட்கிறேனே! முரளியைப் பிடிக்கலையா?''

''பிடிக்கலை.''

''ஏன்?''

''ஏன்னு கேட்டா என்ன சொல்ல? பிடிக்கறது, பிடிக்காததற்குக் காரணம் சொல்ல முடியாது.''

''வலிய வர்ற சம்பந்தம் இது நிர்மலா. வரதட்சணை வேண்டாம். கல்யாணச் செலவை நாங்களே செஞ்சுக்கறோம்னு முரளி வீட்டில் சொல்றாங்க. அப்புறமும் உனக்கு என்ன வீம்பு? நம்மளவா மாதிரி உள்ளவாளுக்குப் பிடிச்சது பிடிக்காதது கூடாது நிர்மலா.''

''பையனுக்கு மட்டும்தான் விருப்பம் இருக்கலாமா? பொண்ணு எதையும் விரும்பிக் கேட்கக் கூடாதா?''

''யோசிக்கப் பாரு நிர்மலா! இந்தக் கல்யாணம் மூலமா உனக்கு ஒரு நல்ல வாழ்வு கிடைப்பதோடு நம்ம குடும்ப அமைப்பே மாற வழி இருக்கு. முரளி மூலமா குமாருக்கு நல்ல வேலை கிடைக்கும். சௌம்யா படிப்பு தொடரும். உன் கல்யாணமே செலவுன்னு பயந்திண்டிருந்த எனக்கு, உன் கல்யாணம் நம் வீட்டுச் செலவைக் குறைக்கும்னா எவ்ளோ பெரிய விஷயம்? இதில் உன் விருப்பம் என்பதை மறந்து, சரின்னா... உன் குடும்பத்துக்கு, உன் அம்மாவுக்கு வாழ்வு கொடுத்த சந்தோஷம் இருக்கும். முடியாது... உன் விருப்பம்தான் பெரிசுன்னாலும் சரி, நான் கூட ரெண்டு வீட்டில் சமையல் வேலை பண்றேன். குமாரை ப்ளஸ் டூவோட நிறுத்திட்டு வேலைக்கு அனுப்புவோம்.''

அம்மா ப்ளாக்மெயில் பண்ணுகிறாள். வறுமை ஒன்றுதான் இவள் கையில் வைத்திருக்கும் அஸ்திரம்.

அம்மாவைக் கேவலமாகப் பார்த்தாள்.

வேறு ஒன்றும் சொல்லாமல் அலங்காரம் செய்து கொள்ளத் தொடங்கினாள்.

சொன்ன நேரத்திற்கு ஐந்து நிமிடம் முன்னதாகவே முரளி பச்சை நிற மாருதியில் வந்து நின்றான். அம்மா கேசரி, போண்டா, காப்பி என்று வழிந்து கொண்டிருந்தாள். முரளி தனியான சந்தர்ப்பத்தில் மறக்காமல் அவள் அழகுக்கு 'வாவ்' சொன்னான்.

சத்தியப்ரியன்

இந்த ஷாப்பிங்தான் எல்லாவற்றையும் நிர்ணயிக்கப் போகிறது. நகைக்கு ஆர்டர் கொடுக்கப்போகும் ஷாப்பிங். பத்திரிகை மாடல் பார்க்கப் போகும் ஷாப்பிங். முரளி அபத்த அபத்தமாக உளறப் போகும் ஷாப்பிங். நிர்மலா விரும்பிக் கேட்டதை வாங்கித் தரப் போகும் ஷாப்பிங். இத்தனைக்கும் மேலாக ராம்கியை அவளிடமிருந்து பிடுங்கி எறியப் போகும் ஷாப்பிங்.

முரளி மாருதியின் பின் கதவைத் திறந்து, அவளை அமரச் சொன்னதும் நிர்மலாவுக்கு ஆச்சரியமானது. முரளியின் கண்ணியத்திற்கு பால் மார்க் போட்டுக் கொண்டாள்.

''உன்னுடைய விருப்பம், அது சின்னதா இருந்தாலும் பெரிசா இருந்தாலும் அதை இன்னிக்கு நிறைவேத்தி வைக்கப் போறேன். உன் அழகு, உன் சாயல், உன் புத்திசாலித்தனம் காரணமா உன்னைப் பிடிச்சிருக்கு. உன் மேல் பிரியம் கொண்ட பிறகு உன் விருப்பம் இனிமேல் என் விருப்பமில்லையா?''

பேத்த ஆரம்பித்து விட்டான்.

மாருதி ஒரு ஐஸ்க்ரீம் பார்லர் முன்னால் வந்து நின்றது. நிர்மலா ராமகிருஷ்ணனுடன் அடிக்கடி வரும் பார்லர்.

''மூணு கஸாட்டா.''

முரளி ஆர்டர் கொடுத்தான்.

''மூணு எதுக்கு?''

''ரெண்டு உனக்கு. ஒண்ணு எனக்கு. உனக்குத்தான் ஒரு சமயத்தில் ரெண்டு ஐஸ்க்ரீமுக்குக் கம்மியா சாப்பிடப் பிடிக்காதே.''

இவனுக்கு எப்படி என் விருப்பம் தெரியும்? கோன் ஐஸ்க்ரீமாக இருந்





"உங்க கதையில சம்பந்தம் இல்லாமல் கதாநாயகி கங்காருவைக் கொஞ்சிக் கொண்டிருந்தான்னு வருதே!"

"அடடா, ஆஸ்திரேலியா கதையைக் காப்பியடிச்சுக் கதை எழுதினேனா, அதான் தவறுதலா கங்காரு வந்துடுச்சு!"

– எஸ். முகம்மது யூசுப்

தால் கூட ராமகிருஷ்ணனிடம் அடம் பிடித்து இரண்டு வாங்கிச் சாப்பிடுவாள். ஜில் என்று உணவுப் பாதை முழுவதும் ஐஸ்க்ரீம் இறங்கும் சுகமே அலாதி. அதே பார்லர்; அதே கலாட்டா. ஆனால் வாங்கிக் கொடுப்பவன் மட்டும் ராம்கி இல்லை. முரளி.

மாருதி மீண்டும் கிளம்பியது.

போஸ் மைதானத்தில் புத்தகக் கண்காட்சி முன்பு நின்றது.

"இறங்கு நிர்மலா. புக்ஸ் வாங்கலாம்."

நிர்மலா அவனைத் தொடர்ந்தாள்.

"புத்தகக் கண்காட்சியில் புத்தகங்கள் நடுவில் நடந்து செல்லும் பொழுது ஒரு கம்பீரமான உணர்வு ஏற்படும். இல்லியா நிர்மலா? கலையின் உன்னதமான, முப்பரிமாணம் கொண்ட, எல்லைகள் இல்லாத வெளிப்பாடு எழுத்து ஒன்றே என்பதால், புத்தகக் கண்காட்சிக்குள் நடந்து செல்லும் பொழுது, ஒரு ஞான வெளிக்குள் நடந்து செல்வதைப் போல இருக்காது?" முரளி கேட்டான்.

ராமகிருஷ்ணன் சொன்ன அதே வாசகங்கள்.

இவன் ஏன் என்னை இப்படி இம்சிக்கிறான்?

"கவிதை வெளின்னு ஓர் அமைப்பை ஏற்படுத்தணும் நிர்மலா. ஒரு கவிஞனின் மொத்தப் படைப்புகள் என்று எடுத்துக் கொண்டால் அடர்த்தியான கவிதைகளும் இருக்கும்; உள்ளீடற்ற கவிதைகளும் இருக்கும். ஒரு யுகத்துக்குக் கவிஞர்களின் கவிதைகளில் அடர்த்தியான கவிதைகளை மட்டும் எடுத்து, அவைகளைத் தொகுப்புக்களாக வெளியிட வேண்டும். அனைத்து மொழிகளிலிருந்தும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டதாக, ஒரு பெரிய கண்காட்சி முழுவதும் கவிதைப் புத்தகங்களாக அந்தக் கவிதை வெளி அமைய வேண்டும். அந்தக் கவிதை வெளியில் நடப்பதே பாக்கியமாக நாம் கருத வேண்டும்" என்று ராம்கி சொன்னது நினைவில் வந்து சிறியது.

இவனுக்கு எப்படி என் உணர்வில் தங்கிப் போய் விட்ட நிகழ்ச்சிகள் தெரிகின்றன. மாயச் சித்தனோ?

நிர்மலா அவன் பின்தொடர்ந்தாள்.

குப்பென்று ஒரு பயம் எழுந்தது. அகஸ்மாத்தாக ராம்கி புக் ஃபேருக்கு வந்து விட்டால்? முரளியை என்னவென்று சொல்லி அறிமுகப்படுத்துவது?

"என்ன புக்ஸ் வேணும்னு சொல்லு நிர்மலா."

நிர்மலாவைப் பொறுத்தவரை எல்லாம் மங்கலாக இருந்தன. விழித்தாள்.

"உனக்கு விருப்பமானதை நான் ஆர்டர் பண்ணட்டுமா?" அவன் நாடக பாணியில் அபிநயம் பிடித்தான்.

"உம்."

"தி. ஜானகிராமனின் மோக முள், மரப்பசு, உயிர்த் தேன், அம்மா வந்தாள்; ஜெயகாந்தனின் சில நேரங்களில் சில மனிதர்கள், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்; மௌனியின் சிறுகதைத் தொகுப்பு; புதுமைப்பித்தனின் சிறுகதைத் தொகுப்பு; அசோகமித்திரனின் தண்ணீர்; இந்திரா பார்த்தசாரதியின் குருதிப்புனல்; கண்ணதாசனின் திரை இசைப் பாடல்களின் எல்லாத் தொகுதியும். சரியா?"

நிர்மலாவுக்குப் பேயறைந்தது போலானது. அவள் மனத்தில் ஒரு பெரிய புத்தக லிஸ்ட் உண்டு. கொஞ்சம், கொஞ்சமாக அந்த லிஸ்டில் உள்ள புத்தகங்களை வாங்கி விட வேண்டும் என்ற நினைப்பும் உண்டு. ராம்கியிடம் சொல்லி 'இருக்கிறாள்.

"இவ்ளோ பெரிய லிஸ்டா?" ராமகிருஷ்ணன் வாயைப் பிளந்தான்.

"வாங்கித் தர முடியுமா? முடியாதா?"

"நான் ஒரு ஏழை குமாஸ்தா நிர்மலா! வருமானம் கம்மி! கருணை காட்டு."

"முடியாது."

"என்னால் வாங்கித் தர முடியாது எனில் என்ன பண்ணுவ? இவ்ளோ புத்தகத்தையும் ஒருத்தன் வாங்கித் தரேன்னு சொன்னா அவனைக் கல்யாணம் பண்ணிக்குவியா?"

ராமகிருஷ்ணன் அன்று விளையாட்டாகச் சொன்னது இன்று நிஜமாக நடக்கிறது. தன்னை முற்றிலும் கட்டுப்படுத்த முடியாமல் போய் விடுமோ என்ற பயத்தில், மாருதியின் அருகில் போய் நின்று கொண்டாள். தன்னிச்சையாகக் கண்களில் கண்ணீர் வழிந்தது. புத்தகக் கட்டைச் சுமந்து கொண்டு முரளி பின்னால் வந்து விட்டான்.

''நிர்மலா! ஏன் அழறே? பிடிக்கலியா? இதெல்லாம் உனக்குப் பிடிக்கும் என் பதால்தான் வாங்கித் தர்றேன். அதுக்குக் காரணமும் சொல்றேன். உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது; நான் உன்னை நேசிக் கிறேன்; இன்னும் நெருங்கிச் சொல்வ தென்றால் உன்னைக் காதலிக்கிறேன். என்னால் நேசிக்கப்படும் ஒரு பெண் விரும்பிக் கேட்டதை எல்லாம் வாங்கித் தருவதுதானே காதலுக்கு கௌரவம்?''

என் ராம்கியை உன்னால் வாங்கித் தர முடியுமா?

நாக்கு நுனி வரை வந்த வார்த்தை களை உள்ளே வாங்கிக் கொண்டாள். அம்மாவின் இறந்த முகம் நினைவில் வந்தது.

இன்னும் என்னவெல்லாம் நடக்கப் போகிறதோ?

வெளியில் இருந்த புழுக்கம் மறைந்து, சில்லென்று சுழன்று சுழன்று காற்று அடித் தது. நிர்மலா காரில் ஏறிக் கொண்டதும், சொல்லி வைத்தது போலப் பலத்த ஓசையுடன் மழை பெய்ய ஆரம்பித்தது. முரளி நிர்மலா உட்கார்ந்திருந்த சீட் கதவைத் திறக்க முயன்றான்.

''எதுக்குத் திறக்கறீங்க?''

''உனக்குத்தான் சோன்னு கொட்டும் மழையில் நடக்கப் பிடிக்குமே. சரஞ் சரமாய் விழும் மழைத் துளிகள் தரையில் பட்டு, அடுக்குமல்லி மலர்ந்ததைப் போல் சிதறுவதைப் பார்க்கப் பிடிக்காது?''

''வேண்டாம். காரை ஸ்டார்ட் பண்ணுங்க.''

நிர்மலா ராமகிருஷ்ணனுடன் ஒரு கிலோ மீட்டர் அளவுள்ள தூரத்தை முழு வதும் மழையில் நனைந்து கடந்திருக் கிறாள். ஏன் இதையே முரளியும் கேட் கிறான்? இளமைக்குச் சிந்தனையும் பொதுவா? விரும்பிக் கேட்டவை என்று காரணம் சொல்கிறான். ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி இதற்கு முன்னால் நடந்ததைப் போன்ற பிரமை நிர்மலாவுக்கு ஏற்பட் டிருக்கிறது. ஆனால் இது வேறு மாதிரி இருக்கிறது. அவள் வாழ்க்கையில் ஒரு வனுடன் நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் இன்னொருவன் மூலம் நடைபெறுகிறது. அமா னுஷ்யமா? சித்து வேலையா?

மாருதி இருட்டையும், மழையையும் கிழித்து கொண்டு போனது. நிர்மலா எல்லாக் கண்ணாடிகளையும் மேலே உயர்த்தினாள்.

''நிர்மலா! இறங்கும் இடம் வந்து விட்டது'' முரளி ஓர் இடத்தில் காரை நிறுத்தி விட்டுச் சொன்னான்.

''உன் விருப்பங்களில் மிக முக்கிய மான விருப்பத்தை உனக்கு நிறைவேற்றி வைக்கப் போகிறேன்.''

கார் கண்ணாடியைத் தாழ்த்தி, வெளி யில் எட்டிப் பார்த்த நிர்மலா தீயை மிதித் ததைப் போலானாள்.

ராமகிருஷ்ணன் குடி இருக்கும் அறை.

''வா!'' சொல்லி விட்டு முரளி அந்த வீட்டை நோக்கி ஓடினான். நிர்மலா பின் னால் ஓடினாள்.

''வாட் எ ஸர்ப்ரைஸ்'' ராம்கி ஆச்சரிய மானான்.

''நான் முரளீதரன். சார்டர்ட் அக்க வுண்டன்ட். நிர்மலாவின் பாஸ்'' முரளி அறிமுகப்படுத்திக் கொண்டான்.

''நிர்மலா! நீ விரும்பிக் கேட்டு நான் வாங்கித் தருவதில் மிகப் பெரிய பரிசு இதுதான். காதலின் கௌரவம் கூட இது தான். காதலின் தைர்யமான சிந்தனை. பொருளின்மை என்பது அதை அழித்து விடக் கூடாது. என் செலவில் உங்க ரெண்டு பேரின் கல்யாணமும் நடக்கப் போகிறது. ஏன் தெரியுமா? என்னால் நேசிக்கப்படும் ஒரு பெண் விரும்பிக் கேட்டதை வாங்கித் தருவதுதான் எனக்குப் பெருமை. இதைக் கொச்சையாக எடுத்துக் கொள்ளாதீர்கள். என்னடா ஆக்ஷன் ரீப்ளே மாதிரி எல்லா நிகழ்ச்சிகளும் நடந்தா மாதிரி இருக்கா நிர்மலா?''

''ஆமாம்'' என்றாள் நிர்மலா.

''நேத்திக்கு ஆபீஸில் நீ விட்டுட்டுப் போன டைரியை நான் படிச்சது தப்புத் தான். ஆனால் அதுவே நல்லதாவும் போச்சு. இல்லைன்னா வறுமை என்னும் ஒரே ஒரு காரணத்துக்காக உங்கள் காத லைப் பொசுக்கின பாவத்துக்கு ஆளாகி யிருப்பேன்.''

நிர்மலா உள்ளம் சிலிர்த்து நன்றி சொன்னாள்.


நீதிபதி : உன் வயசு என்ன?

கூண்டில் நிற்பவர் : ஐம்பது.

நீதிபதி : முப்பதுன்னு குறிப்பிட்டிருக்கே...!

கூண்டில் நிற்பவர் : வழக்கு ஆரம்பமானப்போ உள்ள வயசைங்க!

- எம். அசோக் ராஜா



பட்டாணியும் பெருமாளும்

கௌசல்யா ஸ்ரீவத்ஸவன்

“ஏ, ஏ, ச்சு, ஈஸ்வரா! ஏண்டி ரஞ்சி, இதப் பாருடி. இத சித்தே துரத்தேன்... குடத்துத் தண்ணியிலே கையை வைச்சுடும் போல இருக்கே...'' - அழாக்குறையாகப் படபடத்தாள் மாமி.

''இன்னாது, அந்தக் கொரங்கு கசுமாலம் வந்துடிச்சா? இதே ரோதனையாப் போச்சு. இன்னிக்குப் பாரு... தே... போ'' - கத்தியபடி வெளியே வந்த ரஞ்சிதத்தைப் பார்த்ததும் மாமியின் குடத்திலிருந்து இரண்டு அடி தள்ளி உட்கார்ந்து பல்லிளித்தது அந்தக் குரங்கு. அவசர அவசரமாகக் குடத்தை எடுத்துக் கொண்டு நடந்தாள் மாமி.

முன்பக்க எட்டுக்கு எட்டு ரூமிற்குக் குடிவந்தவன் பட்டாணி. வயதை ஊகிக்க முடியாத வகையில் குள்ளமாக உருண்டு திரண்டு இருந்தபடியால் தனிக்கட்டைகள் வைத்த பெயர்தான் பட்டாணி. வரும் போது தனிக்கட்டையாக வந்தவன், நான்கு மாதங்களுக்கு முன் எங்கிருந்தோ ஓடி வந்த இந்தக் குரங்குக் குட்டியைப் பிடித்துக் கட்டி, வளர்க்க ஆரம்பித்து விட்டான். நாளடைவில் கட்டிப் போடாமலேயே அவனைச் சுற்றி வந்து ஒட்டிக் கொண்டது அது. பெருமாள் என்று வாய் நிறையக் கூப்பிட்டு மகிழ்ந்ததோடு அதற்கும் ஏதேதோ வித்தைகளைப் பழக்கிக் கொடுத்தான். பிறகுதான் குடித்தனக்காரர்களுக்குத் தலைவலி ஆரம்பமாயிற்று.

'பேஸ்ட்டைக் காணோம்', 'பிரஷ்ஷைக் காணோம்' என்று தனிக்கட்டைகளின் குரல்கள் அலறுவதும், ரஞ்சிதம் நடத்திய மெஸ், பெருமாள் திருவிளையாடலால் ஒரே 'மெஸ்'ஸாகக் காட்சி தருவதும் அடிக்கடி நடக்கும் நிகழ்ச்சிகளாகி விட்டன.

பெருமாளையும் பட்டாணியையும் எப்படியும் வெளியேற்றி விட வேண்டுமென்பது அந்த ஸ்டோரில் குடியிருந்தவர்களின் பொது லட்சியமாகிப் போனதால், தங்கள் கசமுசாக்களை மறந்து அவர்களுக்குள் ஒரு போர்க்கால ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தது. வாய்ப்புக் கிடைத்து யார் பெருமாளைப் பிடித்தாலும் மற்றவர்கள் உதவுவது என்று முடிவாகியிருந்தது.

ஒருநாள் ராஜு குரங்கை வசியப்படுத்தி அழைக்க, மனோகர் அதைப் பிடித்துக் கட்டத் தைரியமில்லாமல் கோழி பிடிப்பது போல் ஒரு கூடையை அதன் மேல் கவிழ்த்து மூடி, மேலே உட்கார்ந்து கொண்டான்.

பால்கார ஏழுமலை கூடையைத் தூக்கி, கருக்குக் கயிற்றைக் குரங்கின் கழுத்தில் மாட்டுவதற்காகக் கையை உள்ளே நுழைக்க, அதைக் குரங்கு பதம் பார்க்க... தனது எருமை மாட்டை விட கோரமாகக் கத்தியபடி பின்னுக்கு விழுந்த ஏழுமலையை, ஆட்டுக் கல்லில் விழுந்து மண்டையை உடைத்துக் கொள்ளாமல் காப்பாற்ற மற்றவர்கள் விரைந்த நேரத்தில் ஓர் எகிறு எகிறிய பெருமாள், தனக்குச் செய்த தீங்கிற்குப் பழிவாங்கப் புறப்பட்டது போல், ரஞ்சிதத்தின் மெஸ்ஸில் நுழைந்து, தாவித் தாவிப் பறந்த அந்தக் கணத்தில், அனைவரும் அநுமன் கைப்பட்ட இலங்கையைத் தரிசித்தனர். புளித் தண்ணீர் ஒரு புறம் ஆறாக ஓட, வேகவைத்த பருப்பு, காய்கறிகள் ஒரு பக்கம் இறைந்து வர்ண ஜாலம் காட்ட... ஒரே ரகளையாகி விட்டது.

பிறகு ஒருநாள் யாரையோ அழைத்து வந்து, ''இவன்தான் ஸார். வாயில்லாப் பிராணியை கொடுமைப்படுத்துறான் ஸார். நாங்கள் அதன் மேல் இரக்கம் காட்டி வெளியே கொண்டு போய் விடச் சொன்னா மாட்டேன்னு சொல்றான். வித்தை பழக்கறேன்னு சொல்லி அதை இம்சைப்படுத்தியே கொன்னுடுவான் போலிருக்கு ஸார்...'' என்று அனைவரும் ஒட்டுமொத்தமாகப் புகார் சொன்னார்கள்.

வந்தவர்கள், ''நாங்கள் SPCA-லேர்ந்து வர்றோம். இவங்க கொடுத்த புகார் பேரிலே உங்க மேல நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்...'' என்று பட்டாணியை மிரட்டுவது போல் பேச ஆரம்பித்தனர்.

''ஸார், குடியிருப்புப் பகுதியிலே இதாலே எத்தனை தொல்லை பாருங்க. நீங்களே நல்ல மாதிரி பிடிச்சுண்டு போயிடுங்களேன்'' என்று ஒருவர் சாந்தமாக ஆரம்பித்தார்.

ஆனால், எதற்கும் பட்டாணி அசைந்து கொடுப்பதாய் இல்லை. வந்தவர்களிடம் ஏதோ தனிமையில் பேசிச் சமாளித்து எப்படியோ அனுப்பி வைத்து விட்டான்.

இந்தச் சமயத்தில்தான் வெளியிலிருந்து வேகமாக வந்தான் மோகன். பட்டாணியைப் பார்த்து அவசர அவசரமாக, ''இன்னிக்கு நான் வேலை பார்க்கிற ஸ்டுடியோவுக்கு ஒரு டைரக்டர் வந்தார். பேச்சு வாக்கிலே, அவர் எடுக்கிற சினிமாவில் நடிக்கிறதுக்கு ஒரு குரங்கு வேணும்னு சொன்னதைக் கேட்டதும் பெருமாள் ஞாபகம் தான் எனக்கு. இன்னிக்கு நம்ம பெருமாள் வேற சாதுவா நல்ல 'மூட்'லே இருக்கு. வர்றியா?'' என்றான்.

அன்று ஓர் அதிர்ஷ்டம் பட்டாணிக்கு அடித்தது. ஆம், பெருமாளுக்கு சினிமா சான்ஸ் கிடைத்தே விட்டது!



''சினிமாக்காரங்க வரப் போக இருக்கறப்போ இந்த எலிப் பொந்து உதவாதுப்பா உனக்கு. வேற நல்ல வீடாப் பாத்துக்க'' என்ற மோகனின் யோசனைப்படி, ஒருவழியாகப் பட்டாணியும், பெருமாளும் இடம் மாறினார்கள்.

''அப்பாடா... தொல்லை விட்டது'' எனச் சந்தோஷப்பட்டுக் கொண்டு இருந்த அவர்களுக்கு, ஓராண்டுக்கு மேல் நிம்மதி நீடிக்கவில்லை! வீட்டுச் சொந்தக்காரரிடமிருந்து வந்த கடிதம் அதிர்ச்சியளித்தது.

குரங்கைத் தொடர்ந்து, பட்டாணிக்கும் சினிமாவில் காமெடி ரோலில் சான்ஸ் கிடைத்து விடவே, பல படங்களுக்கு புக் ஆகி, அட்வான்ஸூம் வாங்கிய அவன் ''ராசியான வீடு'' என்று அந்த வீட்டையே விலைக்கு வாங்கி விட்டானாம்! அதனால் அங்கு குடியிருப்பவர்களைக் காலி செய்து விடும்படி எழுதியிருந்தார்! கடிதத்தைப் படித்த அவர்களுக்குக் காலி செய்வதா, பட்டாணியின் காலைப் பிடிப்பதா என்றே தெரியவில்லை!

மு குந்தன் நாற்காலியில் நெளிந்தான். எதிரே மரகதம் பாட்டி தொடர்ந்து அவனை வெறித்துக் கொண்டிருந்தாள். "நிறம் கொஞ்சம் மட்டுத்தான், ஆனாக் கூட உம் புருஷன் லட்சணமாத் தாண்டி இருக்கான் ஜலஜா!" என்று முடிவாய்த் தன் தீர்ப்பை வழங்கினாள், எதிரில் அவன் இல்லாதது போல்.

ஜலஜா நமுட்டுச் சிரிப்புடன் கணவனைப் பார்த்தாள்.

முகுந்தன் எழுந்திருக்க முயன்ற போது, பாட்டி கையமர்த்தினாள்.

"இரு மாப்ளே! அதுக்குள்ளே ஏன் எழுந்திருக்கறே? நிறம் மட்டுன்னு சொன்னேன்னு கோச்சுக்கிட்டியா மாப்ளே? கறுப்புன்னா ஒண்ணும் இளக்காரமில்லேப்பா! நம்ம புராணங்கள்ல கிருஷ்ண பகவான், பார்வதி எல்லாம் என்ன நிறமாம்? கறுப்பும் ஒரு அழகு, காந்தலும் ஒரு ருசின்னு கம்மாவா சொன்னாங்க...?"

விட்டால் போதும் என்று கடைசியில் ஒருவாறு பிய்த்துக் கொண்டு தாம்பரத்திலிருந்து எழும்பூருக்கு வீடு வந்து சேர்ந்ததும் "ஸ்ஸ்ஸ்...!" என்று பெருமூச்சு

முன்னும் பின்னும்

விட்டு முகுந்தன் மனைவியை முறைத்தான். அவள் நிதானமாய் ஒரு காகிதத்தை மேஜை இழுப்பறையிலிருந்து எடுத்து, அதிலிருந்த வரிசைப் பெயர்களில் ஒரு பெயருக்கு முன் டிக் அடித்தாள்.

"என்ன செய்யறே?"

"நாம போய்ப் பார்க்க வேண்டிய என் மனுஷங்க பட்டியலில், போய் வந்தவங்க பேர் முன்னால டிக் மார்க் போட்டுக்கிட்டு வரேன்."

அவன் எழுந்து வந்து, அவள் தோளுக்கு மேலாகக் காகிதத்தைப் பார்த்தான். பத்துப் பெயர்கள் இருந்தன.

"மொத்தம் பத்துப் பேரையா போய்ப் பார்க்கணும்!" என்று விழி பிதுங்கினான் முகுந்தன்.

"ஆமாம்" என்றாள் ஜலஜா சர்வ சாதாரணமாக. "இவங்களெல்லாம் வெவ்வேறு காரணங்களால நம்ம கல்யாணத்துக்கு வர முடியலே. எல்லாரும் என்கிட்ட ரொம்ப அன்பு உள்ளவங்க. அதனால நாம போய்ப் பார்க்கறதுதான் முறை."

"நமக்குக் கல்யாணமாகி இன்னும் முழுசாப் பத்து நாள் ஆகலே. எப்ப இதெல்லாம் முடியறது. எப்ப நாம ஹனிமூன் கிளம்பறது?"

"ஒண்ணு செய்வமா? அஞ்சு பேரை இப்ப பார்ப்போம். மிச்ச அஞ்சு பேரை ஹனிமூன் போய்ட்டு வந்தப்புறம் பார்த்துக்கலாம், என்ன?"

"சரியாப் போச்சு! இதில் 'தொடரும்' வேறயா? எல்லாரையும் பார்த்துத்தான் ஆகணும்னா ஒருவழியா முடிச்சிட்டே போயிடலாம். இல்லாட்டி குன்னூரில் கூட எனக்கு நைட்மேர் வரும்."

"சரி, தாத்தா பாட்டி லெவல் உங்களுக்குப் போரடிக்கிறதால் கொஞ்சம் இறங்கி வந்து, அடுத்தது வெடிச் சிரிப்பு



கோபு மாமாவை வச்சுக்கலாம். லிஸ்டில் அவர்...." காகிதத்தின் மேல் பார்வையை ஓட்டினாள். "...அஞ்சாவது."

"அ ப் ப டி ஒரு அடைமொழியா? ஆமாம், உன் மாமாக்களெல்லாம்தான் நம்ம கல்யாணத்துக்கே வந்தாங்களே?"

"அவங்க என் சொந்த மாமாக்கள். இவர் ஒண்ணுவிட்ட மாமா. நாம இன்னும் பார்க்க வேண்டிய அம்மாவின் பெரியப்பா. தங்கப் பல் தாத்தாவுடைய பிள்ளை."

"தங்கப் பல் தாத்தாவா!"

"ஆமாம்."

"அவரை வேணும்னா... மெதுவா கழட்டி விட்டுடலாமா?" என்றான் முகுந்தன் நம்பிக்கையில்லாமல்.

''அதெல்லாம் முடியாது. அப்பா வழி சிங்கப்பல் தாத்தாவுக்கும் அம்மா வழி தங்கப் பல் தாத்தாவுக்கும் எப்பவும் போட்டி. அவரைப் பார்த்துட்டு என்னைப் பார்க்காம இருந்தியான்னு சண்டைக்கு வருவார்.''

''ம்... அப்போ அடுத்தது இந்த வெங்கலச் சிரிப்பு கோபு மாமாவா?''

''வெடிச் சிரிப்பு. ஆமாம்.''

வெடிச் சிரிப்பு கோபு மாமா தம் அடைமொழியை அடிக்கடி நிலைநாட்டி னார். வாசலுக்கு ஓடி வந்து வரவேற்ற போதே ''வாங்க மாப்ளே, வாங்க வாங்க! உங்க கல்யாணத்தப்ப நான் ஜுரமாய்ப் படுத்துட்டிருந்தேன். இல்லேன்னா உங்க ளையும் ஜலஜாவையும் மாலையும் கழுத் துமாப் பாக்கறதை மிஸ் பண்ணியிருப் பேனா!'' என்று ஒரு வெடிச் சிரிப்பை வீசினார்.

எடுத்துக் கட வேண்டியதுதான் பாக்கி என்று முருந்தன் எண்ணி முடிப்பதற்குள் மாமா இருவர் தலைகள் மீதும் ஒரு நீள அட்டையை வைத்து அளவு பார்த்தார்.

''மாப்பிள்ளை குட்டைன்னு கல் யாணத்துக்குப்போய் வந்த ஒருத்தர் சொன்னார். ஆனா நீங்க ஜலஜாவை விட முழுசா ஒரு இன்ச் அதிக உயரம் மாப்ளே! அது போதுமே! ஆம்பிளை என்கிறதுக்காக பகாகரன் மாதிரி ஆகாயத்துக்கும் பூமிக்கு மாய் நிக்கணுமா என்ன?'' என்று மாமா மீண்டும் ஒருமுறை தம் பட்டப் பெயரை மெய்ப்பித்தார்.

மாமி டிபன் கொண்டு வந்தாள்.

''வெஜிடபிள் சோமாசி மாப்ளே! கல்யாண டின்னரில் உங்களுக்கு இது பிடிச் சிருந்துதுன்னு யாரோ சொன்னாங்க. அதான் இன்னிக்கு அதையே பண்ணச் சொன்னேன். அதுக்காக ஜிலேபியைச் சாப்பிடாம விட்டுடாதீங்க.''



வீட்டுக்குள் இம்முறை முருந்தன் நாற் காலிக்குப் பதில் சோபாவில் நெளிந்தான். மாமாவும் மாமியும் எதுவும் பேசாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். திடீரென்று மாமா துள்ளி எழுந்தார்.

''கொஞ்சம் எழுந்து இப்படி வாங்க மாப்ளே. ஜலஜா, நீயும் வா.''

இருவரையும் மாமா சுவருக்குத் தள்ளிக் கொண்டு போய் அதில் முதுகு பொருந்தி நிற்கச் செய்தார். அடுத்தது துப்பாக்கியை

ஆர்.சூடாமணி

''இல்லே ஸார்... எனக்குத் தித்திப்பு அவ்வளவாய்ப் பிடிக்காது...''

''அப்படியா? சரி. முதல் முதலாய் வந்ததுக்கு ஒரே ஒரு ஸ்வீட் மட்டும் எடுத்துக்குங்க. சோமாசி இன்னும் நாலு போட்டுக்கலாம்.''

''இன்னும் நாலா!''

உள்ளேயிருந்து சில தலைகள் எட்டி எட்டிப் பார்ப்பது தெரிந்தது. ஜலஜா எழுந்து போய் மூன்று பெண்களை வெளியே அழைத்து வந்தாள். ஒருத்தி மாமாவின் பதினான்கு வயதுப் பெண். மற்ற இருவர் அவள் சிநேகிதிகள். அதி முகங்களைத் தொடர்ந்து சுற்றிலும் ஒரே மௌனம். முருந்தனுக்கு உலகமே சுற்றி

நின்று தான் வெஜிடபிள் சோமாசி தின்பதை வேடிக்கை பார்ப்பது போல் இருந்தது. சோமாசியை மெல்லும் ஓசை அந்த மௌனத்தில் இடியோசை போல் அவன் காதுக்குத் தொனித்தது.

"சினிமா ஏதானும் பார்த்தீங்களா ரெண்டு பேரும்?" என்று மாமா கேட்டு ஒருவாறு நிலைமையை மாற்றினார். அவருடன் பேசிக் கொண்டிருந்த போது முகுந்தன் அந்த மூன்று சிறுமிகளும் சற்றுத் தள்ளி ஒரு நீண்ட சோபாவில் உட்கார்ந்திருந்ததைக் கவனித்தான். மூவரும் தலையோடு தலை இடிக்கத் தமக்குள் கிசுகிசுக் குரலில் ஏதோ பேசிக் கொள்வதும் அடிக்கொரு தரம் அவன் பக்கம் பார்வையைச் செலுத்தி மீட்பதுமாய் இருந்தார்கள். மாமா பெண் ஒருமுறை "இல்லேடி, அந்த ராஜூ'வுக்கு மூக்கு வேற மாதிரி" என்று முணுமுணுப்பது கேட்டது.

மூன்று மணி நேரத்துக்குப் பிறகு, மாமா ஓர் இறுதி வெடிச்சிரிப்புடன் விடை கொடுப்பதற்குள் முகுந்தனுக்கு 'இங்கிருந்து கிளம்பத்தான் போகிறோமா?' என்று ஆகி விட்டிருந்தது.

தங்கப் பல் தாத்தா அவர்கள் உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாய் "சிங்கப் பல்லனைப் போய்ப் பார்த்துட்டீங்களா?" என்றார் மிரட்டுகிற குரலில்.

"இன்னும் இல்லே தாத்தா! உங்களுக்கப்புறம்தான்" என்று பதிலளித்த மனைவியின் சமயோசிதத்தை முகுந்தன் மனசுக்குள் மெச்சிக் கொண்டான்.

தாத்தா முகம் மலர்ந்து தங்கப் பல் மிளிரச் சிரித்தார். பெரியவர்களைப் பார்க்கப் போகும்போதெல்லாம் செய்வது போல் மணமக்கள் அவரை விழுந்து வணங்கினார்கள்.

"நல்லாயிருங்க ரெண்டு பேரும். ஜயா, நீ அங்கே உக்காரு. மாப்ளே, நீ இப்படி என் பக்கத்தில் உக்காருப்பா. எனக்குக் கண் கொஞ்சம் மங்கல். கிட்டேருந்து பார்த்தால் தான் எதுவும் தெரியும்."

அருகில் உட்கார வைத்துத் தாத்தா முகத்தைக்கிட்டே கொண்டு வந்து இப்படியும் அப்படியுமாய்த் திருப்பி, பூதக் கண்ணாடி வைத்துப் பார்க்காத குறையாய் காட்டராக்ட் கண்ணாடி வழியே அவனைப் பல கோணங்களிலிருந்து ஆராய்ந்தார். அண்டர்வேரோடு ஓடிக் காட்டச் சொல்லியிருந்தால் அவன் ஆச்சரியப்பட்டிருக்க மாட்டான். மீண்டும் சங்கடத்தில் நெளிவதைத் தவிர முகுந்தனுக்கு வேறு வழியில்லை.

தாத்தா அவன் முதுகில் ஓங்கித் தட்டிக் கொடுத்தார். "நைஸ் யங் ஃபெலோ. நீ



விழுதுகள் தரை இறங்கும்,
வேர்கள் ஓய்வு பெறும்,
இயற்கை தந்த வரம்.
அம்மா!
விழுது நான் - எனில்
வேலையில்லாக் கல்வியுடன்
வேருக்கே சுமையானேன்.

அவையத்தில் முந்தச் சொல்லி
ஆசையாய் அளித்த கல்வி
ஆகாயக் கோட்டையென ஆனதனால்
தந்தை,
எனை ஈன்ற பொழுதினை
இகழ்ந்திடும் பேச்செனும்
ஏவுகணையால் எரிந்து போனேன்.

கிணற்றங் கரை மேடும்
கிழவெளிப் பூவரசும் - நம்
காதலின் கதை அறியும்.
கண்ணே!
கூடிப் பறந்திட வோர்
வேலை என்னும் சிறகில்லை.
நீ பறந்தாய். நான் விழுந்தேன்.

பொன் விழா
போட்டிக் கவிதை

வைகறை நோக்கி



நிலவு நேரம் கதைபேசி,
நீர் சிதற விளையாடி,
கோவிலோரம் பூப்பறிப்போம்.
சகோதரா!
நீ இன்று வெகுதூரம்
நான் மட்டும் தெரு ஓரம்
நமக்கிடையில் விழுந்த சுவர் பொருளாதாரம்.

திங்களின் முதல் தேதி - யாருக்கும்
தெரியாமல் நீ அனுப்பும்
பணம் வந்து கை சேரும்
அம்மா! - அந்நேரம்
கற்ற கல்வி யாவும் உன்முன்
கற்பூரம் போல் பதங்கமாகும்.
உன் காசு தொடக் கரங்கூசும்.

மணல் படுக்கை, நிலவு சுகம்.
பட்டணத்துக் கடற்காற்று என் சுவாசம்.
மாதத்தின் பாதி நாட்கள் உபவாசம்,
என்ற போதும், அம்மா!
இன்றோ, நாளையோ என் காட்டிலும்
மழை பெய்யும் - இந்த
இருளெல்லாம் மறைந்த பின்பு
என் விடியல் அன்று முகிழ்த்து விடும்!

ராகவி
(அறிமுக எழுத்தாளர்)

என்னமோ விளையாட்டெல்லாம் ஆடுவி யாமே?''

''கிரிக்கெட் ஆடுவேன் ஸார். காலேஜ் நாள்ல காலேஜுக்காக ஆடியிருக்கேன். அப்புறம் ஸ்டேட் லெவல்ல கூட ஆடி னேன். அதில....''

''குட். அப்படித்தான் இருக்கணும். அந்த நாளில் எங்க பக்கத்து வீட்ல முத்து முத்துன்னு ஒரு பையன் இருந்தான் பாரு...''

முத்து, ரத்தினம், மாணிக்கம் என்று வரிசையாய்த் தம் இளம் பருவ நண்பர் களோடு அடித்த கொட்டத்தையெல்லாம் தாத்தா வர்ணிக்க வர்ணிக்க...

கொட்டாவிகளை முகுந்தன் உள்ளங் கைக்குள் அமுக்கிக் கொண்டு சற்றுத் திரும்பிய போது, அறைக் கதவிடை ஒரு கும்பல் தெரிந்தது. சற்று வயதான ஆண் - பெண் ஜோடி. ஓர் இளைஞன், அவனுக்குப் பின்னேயிருந்து எட்டிப் பார்க்கும் இளம் பெண், வாயில் விரல் போட்டு விழித்துப் பார்க்கும் இரண்டு சின்னப் பிள்ளைகள்.

ஜலஜா அவர்களை உற்சாகத்துடன் அழைத்தாள். ''உள்ளே வாங்க. ஏன் அங்கேயே நிக்கறீங்க?'' கணவனைப் பார்த்தாள். ''இந்தச் செல்லதுரை இங்கே தாத்தா வீட்ல பல வருஷங்களாய்த் தோட்ட வேலை செய்யறவர். இவங்க மீனாட்சி, அவர் சம்சாரம். மத்தவங்க மகன், மருமக, பேரக் குழந்தைங்க. நான் குழந்தையா யிருந்தப்பலேர்ந்தே செல்லதுரைக்குப் பழக்கம். என்னைத் தோளில் தூக்கி வச்சு விளையாட்டுக் காட்டியிருக்கார். அதனால உங்களைப் பார்க்க ஆசையா வந்திருக்காங்க எல்லாரும். - உள்ளே வாங்கன்றேனே!''

வந்தார்கள். முகுந்தனின் எதிரே அவனைப் பார்த்தபடியே நின்றார்கள். முகுந்தன் இன்னும் சற்று நெளிந்தான். தான் ஏதோ கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்த காட்சிப் பொருளாக மாறி விட்டோமா என்று சந்தேகம் வந்தது.

''ஒம், நம்ம ஜலுப்பாப்பா இப்பத் தான் வீடெல்லாம் தவுந்துக்கிட்டு வந்தாப் பல இருக்கு. அதுக்குள்ள வளந்து கல் யாணம் கட்டி மருமகப் புள்ளை வந்தா யிடிச்சு!'' என்ற செல்லதுரை கண்ணைத் துடைத்துக் கொண்டார்.

''என் ராசா. நல்லா, ஆயுசோட இருக்கணும்'' என்று மீனாட்சி முகுந்தன் முகத்தைக் கைபடாமலே வழித்துத் தன் நெற்றியில் சொடுக்கித் திருஷ்டி கழித்தாள்.

முகுந்தன் தரையைப் பார்த்துப் பல்லைக் கடித்தான்.

''நிமிர்ந்து உக்காருங்க தம்பி! பொம் புளைப் புள்ளையாட்டம் என்ன வெக் கம்?'' என்றார் செல்லதுரை.



திருபர் : உங்க படத்துல ஏதோ ஒரு மெசேஜ் இருக்கிறதாச் சொன்னீங் களே, அந்த மாதிரி எதையும் காணுமே...?

டைரக்டர் : படம் முடியிற கட்டத்துல ஹீரோவோட பாட்டி இறந்துட்டதாத் தந்தியிலே ஒரு மெசேஜ் வருமே, கவனிக்கலையா நீங்க?

- சீர்காழி வி.ரேவதி





"திருடன் வளர்க்கிற நாய்க்கும், போலீஸ்காரர் வளர்க்கிற நாய்க்கும் என்ன வித்தியாசம்?"

"திருடன் வளர்க்கிற நாய் போலீ ஸைக் கண்டா விரட்டியடிக்கும்; ஆனா போலீஸ்காரர் வளர்க்கற நாய் திருட னைக் கண்டா வாலாட்டி வரவேற் கும்!"

- வேளாதாசன்

கடைசியில் உள்ளேயிருந்து ஒரு பெண் மணி சிற்றுண்டியோடு வந்து சோதனைக் கட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்த போது, முருந்தன் அந்தம்மாவின் காலில் விழத் தயாராயிருந்தான்.

அன்றிரவு தன் எதிர்ப்பை வெளி விட்டான் முருந்தன்.

''இனிமேலும் என்னால இதைப் பொறுத்துக்க முடியாது ஜலஜா. நான் என்ன ஏதாவும் மியூஸியம் பீஸா? ஒவ்வொரு இடத்திலேயும் ஆளாளுக்கு வ ந் து வெறிக்கப் பார்த்தா என்ன அர்த்தம்?''

''உங்களைப் பார்க்கணும்கிற ஆசை யில அப்படிச் செய்யறாங்க.''

''இனிமே உன் மனுஷங்க வீட்டுக் கெல்லாம் நான் விஸிட் வர மாட்டேன். என்னைப் பார்க்க ஆசைப்பட்டாங்கன்னா என்னைப் படம் பிடிக்க ஆளுக்கொரு பிரதியைக் கொடு.''

''அப்படித்தான் என்னைப் படம் பிடிக்க உங்க மனுஷங்களுக்கெல்லாம் ஆளுக்கொரு பிரதி கொடுத்தீங்களா?'' என்றாள் ஜலஜா நிதானமாக.

''உன்னை இப்படித்தான் அவங்க பார்த்தாங்களா?''

''இதைவிட மோசமாப் பார்த் தாங்க.''

''அப்படின்னா?''

''என்னைப் பெண் பார்க்க நீங்களும் உங்க பெத்தோரும் வந்தீங்க. நியாயம். கல்யாணமும் நிச்சயமாயிடிச்சு. அதுக்கப் புறம் உங்க வீட்டிலேர்ந்து எத்தனை பேர் ஒவ்வொருத்தரா வந்துக்கிட்டிருந்தாங்க என்னைப் பார்க்க! உங்க அண்ணன், அண்ணி, அக்கா, அக்கா புருஷன், பாட்டி, அத்தை, தாத்தாவுக்குச் சித்தப்பா மகன் அப்படின்னு ஒண்ணா ரெண்டா?''

''அவங்களும் என் மனைவியாய் வரப் போறவ எப்படியிருக்கான்னு பார்க்கத்தான் வந்தாங்க.''

''ஆமாம். ஆனா விமர்சனக் கண் ணோடு. இது சொட்டை 'து சொன் னைன்னு எங்கே குத்தம் க 'ண்டுபிடிக் கலாம்னு என்னை ஆராய்ச்சிக்கு உட்படுத்த வந்தாங்க. என் மனுஷங்க உங்களைப் பார்த்தது நம்ம கல்யாணத்துக்கு அப் புறம். அவங்க உங்களை போரடிச் சிருக்கலாம். ஆனா 'இது நம்ம ஜலுவின் புருஷன்' என்கிற நினைப்போடு உங்க ளுக்காக மனக நிறையப் பிரியமும் பாராட்டும் வச்சுக்கிட்டு உங்களைப் பார்த் தாங்க. அதுவும் இதுவும் ஒண்ணா? நான் கறுப்பாயிருந்திருந்தா உங்க வீட்ல கிருஷ்ண பகவான் கறுப்புத்தானேன்னு சொல்லியிருப்பாங்களா? நான் குள்ளமா யிருந்திருந்தா ஒரு பெண் பகாசுரியாட்டம் இருக்கணுமா என்னன்னு கேட்டிருப்பாங் களா?''

முருந்தன் பதில் சொல்லவில்லை. சிறிது நேரம் அவளையே பார்த்தான். பிறகு தரையைப் பார்த்தான். பிறகு மேஜையை அணுகி இழுப்பறையைத் திறந்து அந்தக் காகிதத்தை எடுத்து 'நெ. 8, தங்கப் பல் பெரிய தாத்தா' பக்கத்தில் டிக் செய்தான்.

''அடுத்தது யாரைப் பா ர் க் க ப் போறோம் ஜல்ஜல்?''

ஜலஜா சிரித்தாள். ''யாரையும் பார்க்க வேணாம். ஹனிமூனுக்கு எப்ப கிளம் பலாம்?'' என்றாள்.

நீரிழிவு நோயைப் பாகற்காய் குணமாக்குமா?

● நா. சிந்துகுமார், திருவட்டார்.
நீரிழிவு வியாதிக்காரர்கள் பாகற்காய் சாப்பிடலாமா? அப்படிச் சாப்பிடுவதால் வியாதி குணமாகுமா?

●● டாக்டர். பி. ஆர். சுப்பிரமணியம், சென்னை - 18

பாகற்காய் சாப்பிடுவதால், ரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகமாகும் வாய்ப்பு இல்லை. அதனால் சாப்பிடலாம். ஆனால், அதற்கு எவ்வளவு தூரம் சர்க்கரை வியாதியைக் குணப்படுத்த முடியும் என்பது ஆதார பூர்வமாக இன்னும் நிரூபிக்கப்படவில்லை. நம் நாட்டு வைத்திய முறைப்படி குணம் கிடைக்கும் என்று நம்பிச் சாப்பிடுகிறார்கள். சாப்பிட்டவர்களின் ரத்தத்தையோ, சிறுநீரையோ பரிசோதித்துப் பார்த்ததில், அப்படி ஏதும் குணம் உண்டானதாகத் தெரியவில்லை. பாகற்காய் மாதிரியே, ஜப்பிக் கொட்டை, ஜம்புநாக மரத்தின் இளம் தளிர் இவற்றையும் குணம் கிடைக்குமென்று நம்பிச் சாப்பிடுகிறார்கள்!

● ஜி. ஜி. கிருஷ்ணன், விசலூர்.
நெல் அரவை மில், தொழிற் சாலைகள், ரயில் நிலையங்கள் போன்ற இரைச்சல் அதிகமான இடங்களில் வசிப்பதால் காதுகள் பாதிக்கப்படுமா? அதற்கு என்ன நிவாரணம்?

சத்தத்தின் சக்தியை டெஸிபல் என்று குறிக்கிறார்கள். சத்தம் ஓரளவுக்கு மேல் அதிகமாக இருந்தால், அதுவும் தொடர்ச்சியாக அந்தச் சத்தத்தைக் கேட்டுக் கொண்டிருந்தால், காது நிச்சயம் பாதிக்கப்படும். மில்களின் அல்லது அது போன்ற இயக்கங்களின் சத்தத்தினால் பாதிக்கப்படாமல் இருக்க, காதில் அடைப்பான்கள் பொருத்திக் கொள்ள வேண்டும். அல்லது பஞ்சை கிளிசரினில் தோய்த்துக் காதை அடைத்துக் கொள்ளலாம்.

● ஜி. குமார், நெல்லிக்குப்பம்.
எனக்குப் பதின்மூன்று வயதிலிருந்தே சிறிது சிறிதாகக் காது கேட்கும் திறன் குறைந்து, இப்போது 80% காது கேட்கவில்லை. ஹியரிங் எய்டு வைத்துக் கொண்டால்தான் கேட்கிறது. ஆயினும் எனக்கு இயற்கையான முறையில் காது கேட்க வாய்ப்பு இருக்கிறது என்று முழுமையாக நம்புகிறேன். என் நம்பிக்கை மெய்யாகுமா?

காது கேட்காமல் இருப்பது வம்சாவளியாகவும் வரலாம். பிறப்பிலேயும் கூட வரலாம். இதற்கு நிவாரணம் இல்லை. காது கேட்காத நிலைமை இரு வகைப்படும். ஒன்று Conduction deafness; இன்னொன்று Nerve deafness. இரண்டுமே கலந்திருந்தால் Mixed deafness என்பார்கள். இதற்கு ஹியரிங் எய்டு ஓரளவு பலன் தரும். ஆபரேஷன் செய்தால் சிறிது குணம் கிடைக்கும். அது நிரந்தரமாயிருக்கும் என்று சொல்ல முடியாது. உள் காதில் காக்லியா என்னும் பாகம் இருக்கிறது. அது பழுதுபட்டிருந்தால் செவிட்டுத் தன்மை உண்டாகும். அதை எடுத்து விட்டு (காக்லியா இம்ப்ளாண்ட்) மாற்று பொருத்தலாம். அப்போதும் கூடப் பூரண குணம் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. இதற்குச் செலவும் அதிகம்.



தொகுப்பு: எஸ். வி. என்.

80–வது ஆண்டு
பிறந்த நாள்

நினைவு அஞ்சலி

அமரர்

திரு M.K. முத்தையா
கண்டி, ஸ்ரீலங்கா



28.4.1912 23.10.1991

நெஞ்சிருக்கும் வரை
உங்கள் நினைவிருக்கும்
அந்த நினைவினில் உங்கள்
முகம் நிலைத்திருக்கும்.

அன்புடன் நினைவு கூறும்
அன்பு மனைவி,
மக்கள்
உற்றார் – உறவினர்

★ ★ ★

'விளம்பரப் பிரியர்' என்கிறார்களே, என்னங்க?



முகராசி, மகராசி

● எம். சந்திரசேகர், மேட்டு மகாதானபுரம்.

? 'வி. பி. சிங்கைக் கவிழ்த்ததுதான்தான்' என்று மார்தட்டுகிறாரே, சு. சுவாமி?

! இப்படி ஏதாவது அளந்தால்தான் அவர் பெயர் நாளிதழ்களில் வரும்; அச் செய்தியை வைத்து நீங்கள் கேள்வி கேட்க, வாரப் பத்திரிகையிலும் அவர் பெயர் வரும்; புகைப்படம் கூடப் பிரசுரமாகலாம்....!

● பிரசன்னகுமார், குடந்தை.

? 'எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருப்பதால் சினிமாவில் இரட்டை அர்த்த வசனம் பேசுவதைத் தவிர்க்கிறேன்' என்கிறாரே, கமல்?

! அதே போல் சினிமா பார்ப்பவர்களில் பலருக்கும் பெண் குழந்தைகள் இருக்கக் கூடும் என்ற உணர்வு சினிமாக்காரர்களுக்கு வந்தால் திரை உலகு சிறப்படையும்.

● என். சீந்தாலட்சுமி, பொள்ளாச்சி.

? 'புரட்சித் தலைவியைப் பெண்கள் பார்த்தால் அழகுகூடும்; ஆண்கள் பார்த்தால் வீரம் அதிகரிக்கும்' என்கிறாரே குன்னக்குடி?

! குன்னக்குடி பார்த்தால் அபஸ்வரங்கள் ஒலிக்கும்.

● நல்லான் இராமசாமி, கோவை ❑

? சபாநாயகராக இருப்பவரே அவைக் குறிப்பில் இடம்பெறக் கூடாத அளவுக்குக் கோபமான சொற்களை உதிர்க்கலாமா சார்?

! நல்லதல்லதான். ஆனால் சராசரி சபாநாயகர்கள் உணர்ச்சிவசப்படக்கூடியவர்களே. அதனால் எதையாவது கூறிவிட்டு, பிறகு 'அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது' என்று தாங்களே அறிவிப்பது உலகின் பல சட்டமன்றங்களிலும் பல சந்தர்ப்பங்களில் நடக்கிற கதைதான். இதைத் தவிர்க்க வேணுமானால் அதற்கேற்ற அளவில் தகுதியான சபாநாயகரைத் தொடக்கத்திலேயே தேர்ந்தெடுக்க வேண்டும்.

● த. சூரியமூர்த்தி, சிதம்பரம்.

? முதல்வரை 'முகராசி உள்ள மகராசி' என்கிறாரே, ஒரு எம். எல். ஏ.?

! பகுத்தறிவுப் பாசறையில் வளர்ந்து வந்தவர்கள் அல்லவா; 'ஜில்'லென்று சுயமரியாதையுடன் பேசுகிறார்கள்!



இரட்டை அர்த்தம்

● பாலசுப்பிரமணியன், செங்குன்றம்.

? அமெரிக்காவில் நடக்கும் வெள்ளையர் - கறுப்பர் இனக் கலவரம் பற்றி?



மரியாதைக்குரிய மேதை

! கறுப்பு நிறத்தவர் ஒருவர் - கிங் - ஓவர் ஸ்பீட் குற்றத்துக்காக வெள்ளை போலீஸ்காரர்களால் அடித்து நொறுக்கப்பட்டார். வழிப்போக்கர் ஒருவர் இதை வீடியோ படம் எடுத்து விட்டார். ஆனால் நீதிமன்றத்தில் போலீஸ் மீது குற்றம் ருசுவாகவில்லை என்று தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது. நாளை வழக்கு உச்சநீதிமன்றம் சென்று நீதி நிலைநாட்டப்பட வாய்ப்புண்டு என்றபோதிலும், இன்று கறுப்பர்கள் குமுறக் காரணம் நீதித் துறையிலேயே இந்த அளவுக்கு இனவெறி இருக்கிறதே என்பதுதான். அந்த ஆத்திரக் குமுறல் எரிமலையாக வெடித்து விட்டது இயல்பானதே. ஆக, சமத்துவச் சட்டங்கள் இயற்றுவது எளிது, ஆனால் அதைவிட முக்கியம் மனமாற்றம் உருவாவதுதான் என்பதை இந் நிகழ்ச்சி உணர்த்துகிறது. இதன் பொருட்டுத்தான் மக்களின் மனமறிந்த ஆட்சி வேண்டும்; மக்களின் மனங்களைப் பக்குவப்படுத்தும் தலைமை வேண்டும் என்பது. அது அவ்வளவு சுலபமாகக் கிடைத்து விடுவதில்லை.

● கிருஷ்ணமூர்த்தி, சாத்தூர்.

? பெரிய பணக்காரர்களும் பிரபலங்களும் வரி பாக்கி வைத்திருப்பது எதைக் காட்டுகிறது?

! சில மேல்நாடுகளில் வருமான வரி விகிதம் குறைவு. ஆனால் வரி ஏய்ப்புச் செய்தாலோ வரி கட்டாமலிருந்தாலோ

அவன் தேசத் துரோகியாகக் கருதப்பட்டு மிகக் கடுமையான தண்டனை பெறுகி றான். இங்கே வரி விகிதம் மிக மிக அதி கம். வரி கட்டாததற்குத் தண்டனை பெரிய அளவில் இல்லை. வரி விகிதம் குறைந் தால் எல்லோரும் சந்தோஷமாக வரி பாக்கி வைக்காமல் கட்டி விடுவார்கள்.

● பூங்குழலி, கெங்கவல்லி.

? பேரவைதான் மிக உயர்ந்த அமைப்பு என் றால் பேரவையில் உள்ளவர்கள் அதன் கௌரவம் பாதிக் காத வகையில் நடந்து கொள்ள வேண்டும் அல் லவா?

! கூண்டில் நிற்கக் கூடாது எனில், 'ஆமாம்' என்ற ஒரு சொல் மட்டுமே பதில்!



● ஜி. சந்திரமதி, பாண்டிச்சேரி.

? 'விளம்பரப் பிரி யர்' என்கிறார்களே, என்னங்க?

! ஜெயந்தி கொண் டாட சினிமா துறைக்குத் தேதி குறித்துத் தருகிறவர். சென்னை மாநகரச் சுவர்களில் இடமே இல்லாத அளவு நாள்தோறும் போஸ்டர் ஒட்டியும் மூலைக்கு மூலை பானர் பொருத்தியும் போதாமல், ஆயிரக்கணக்கில் செலவழித்துத் தனியார் நிறுவனங்கள் நிறுத்தியுள்ள விளம்பர பானர்கள் மீதும் தமது போஸ்டர் ஒட்டப் படுவதைப் பார்த்தும் அதனைக் கண்டிக்காமல் மௌனம் காப்பதன் மூலமே ஆமோதிப்பவர்.



☛ அபஸ்வரங்கள்

● பி. குமார், சேலம்.

? டீவியில் 'தலைமுறைகள்' தொடர் பார்த்தீரா?

! பார்த்தேன்; ஆனால் கந்தசாமியைக் காணவில்லை.



☛ குழம்பி, குழப்பாதவர்!

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
நல்லான் இராமசாமி,
126 B, செல்லப்ப கவுண்டர் லே-அவுட்,
சங்கரநார் மெயின் ரோடு,
ரத்தினபுரி,
கோவை – 641 027.

● முஸ்தபா, தக்கோலம்.

? மே முதல் தேதி என்ன செய்து கொண் டிருந்தீர்?

! மஞ்சக்குடியாரின் மறைவுக்கு வருந்திக் கொண்டிருந்தேன். தமிழ், சமஸ்கிருத மொழிப் புலமையுடன் இசை ஞானமும் உடையவர்; வேத சாஸ்திரங்களில் அபரி மித பாண்டித்யம் உள்ளவர் ; இவ்வள வுக்கும் மேல் ஓர் உயர்ந்த மனிதர். உபன் யாசங்களின் ஊடேயும் உரையாடல்களின் போதும் இந்து மத சாஸ்திர சம்பிரதா யங்களின் ஆழமான உட்பொருள்களை அவர் விளக்கக் கேட்பது ஓர் ஆச்சர்ய அனு பவம். ஒரு சூப்பர் கம்ப்யூட்டர் போல் சத்தான விஷயங்களை அறிவில் தேக்கி மனத்தில் கவைத்து தேவையான சமயங் களில் தேவையானவற்றைத் தந்த மரியா தைக்குரிய மேதை.

● நெ. மணிமேகலை, சென்னை.

? ஊழல் நாட்டின் சுற்றுப்புறச் சூழலில் ஒன்றா?

! கள்ளத்தனமாகக் கொண்டு வரப்பட்ட அரசு சாராயப் பாக்கெட்டுகளைப் பிடித் தது சாமர்த்தியம்தான். ஆனால் அவற்றை அண்ணாசாலையில் போலீஸ் ஸ்டேஷன் எதிரேயே பரப்பி, போகிற வருகிற வாக னங்கள் ஏறி உடைக்குமாறு செய்ததன் மூலம் ஊழல் நாட்டின் சுற்றுப்புறச் சூழ லில் ஒன்றுதான் என்று நிரூபித்து விட்டதே தமிழக போலீஸ்!

● வடமாலவன், வேலூர்.

? தானும் குழம்பி மக்களையும் குழப்பாத தலைவரை நீங்கள் பார்த்ததுண்டா?

! இருக்கிறாரே, எஸ். பி. சவான்! 'விடுதலைப் புலிகளுக்கு இங்கு தடை விதிக்கப் போதிய சாட்சியம் இல்லை; மேலும் தேவை' என்று கூறியதன் மூலம் தாம் குழம்பிப் போயிருப்பதை நிரூபித் தாலும் மக்களைக் குழப்பவில்லை. அவர்கள் தெளிவாகவே இருக்கிறார்கள், இவரது அக்கப் பிக்க அறிக்கையைப் படித்த பின்னரும்!

நீங்கள் கேட்டவை – தராசு

சார்மினார் சானல் :

★ ''நக்சலைட்டுகள் மீதான போர் தொடங்கி விட்டது'' என்று அறிவித்திருக்கிறார் ஜனார்த்தனன் ரெட்டி. பெங்களூரில் பிடிபட்ட (PWG) மக்கள் யுத்தக் குழுவினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள், PWG க்குப் பெரிய அதிர்ச்சியைத் தந்திருக்கிறது. யுத்தக் குழுவின் பிளவைச் சாதகமாக்கி நக்சலைட்டுகளைக் கட்டுப்படுத்தும் பணியில் மாநில அரசு இறங்கி விட்டது.

★ 1948ல் ஹைதராபாத் சிவில் சர்வீஸ் பரீட்சை எழுதினார் ஹனுமந்த ரெட்டி. ஏழாவது ரேங்க் பெற்றிருந்தாலும் தாசில்தார் உத்யோகத்திற்குப் போஸ்டிங் கிடைக்க வில்லை! அவரை விட குறைந்த மதிப்பெண்கள் பெற்றவர்களுக்குப் போஸ்டிங் கிடைத்திருக்கிறது. வழக்கு தொடர்ந்திருக்கிறார். 24 தடவை கோர்ட்டில் வழக்கு தாக்கல். 1990ல் வெற்றி பெற்று விட்டார். கின்னஸ் ரிகார்டு ஆசிரியர் இதைப் பதிவு செய்திருப்பதாக ரெட்டிக்கு எழுதி உள்ளார்.

அட்மிஷன் மோசடி ஆந்திரா ரகம்!

★ DNA கைரேகை மூலம் ஒரு நபரின் பெற்றோர் பற்றிக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியை இங்குள்ள CCMB என்ற நிறுவனம் வெற்றிகரமாய் நடத்தி வருகிறது. '91ல் கேரள பஸ் முதலாளி ஒருவர் தமது மகன் அல்ல என்று ஒரு குழந்தையை விலக்க, குழந்தையின் தாய் தொடுத்த வழக்கில் இந்த நிறுவன ஆய்வு பேருதவியாய் இருந்தது. வெளிநாட்டுடன் ஒப்பிடும் போது இந்த நிறுவனம் இந்த ஆராய்ச்சி முறைக்காக வசூலிக்கும் தொகை கொஞ்சமே என்கிறார்கள். ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிவராசனின் உடல் சதைத் துணுக்கு இங்கு அனுப்பப்பட்டிருந்தது. அவனின் பெற்றோர் பற்றின ஆராய்ச்சிக்கு அது உதவியது என்கிறார்கள்.

★ ''எனது முதல் படத்தின் கதாநாயகன். ஒரு மாநில முதல்வராக இருந்தவர். ஐம்பதாவது படத்தின் கதாநாயகி இன்னொரு மாநில முதல்வர்'' என்கிறார். சினிமா தயாரிப்பாளர் ராமா நாயுடு. முன்னவர் என். டி. ஆர். பின்னவர் தமிழ்நாட்டு முதலமைச்சர். ராமாநாயுடுவின் சமீபத்திய படம் ''சூரி காடு''. தாசரி நாராயணராவ் கதாநாயகன். ராமா நாயுடு நீதிபதியாக முக்ய வேடத்தில். இவரின் 27 வருடப் படத் தயாரிப்பில் படுதோல்வி அடைந்த படம் ''சிவப்பு நிறத்தில் ஒரு சின்னப் பூ'' என்ற தமிழ்ப் படமாம். மூன்றாவது நாள் எல்லா பிரிண்ட்களும் இவரின் வீட்டிற்குத் திரும்பி வந்து விட்டனவாம்.

★ ஆந்திர யுனிவர்சிட்டியில் முதல் ஐந்து ரேங்க்குகள் வாங்கியவர்களுக்கு ஒரு தந்தி: ''இஞ்ஜினியரிங் அட்மிஷன் பரீட்சை ஒத்தி வைப்பு'' அதை நம்பி அவர்கள் கலந்து கொள்ளவில்லை. ஆனால் இஞ்ஜினியரிங் பரீட்சைகள் நடைபெற்றிருக்கின்றன! மாணவர்களுக்குப் பெரும் அதிர்ச்சி. வாழ்த்துத் தந்தி அனுப்புவதாகச் சொல்லி யுனிவர்சிட்டியில் முகவரிகள் பெற்று, சில விஷமிகள் செய்த காரியம் இது!

– அப்பன்



ஆயுதங்களுடன் ஆப்கன் போராளி

அடிக்கடி சீறும் ஆப்கன் எரிமலை!

ஒரு லிட்டர் கெரஸின் விலை ஐம்பது ரூபாய்!

பிறக்கும் ஆயிரம் குழந்தைகளில் ஊட்டச்சத்து இல்லாததால் 300 குழந்தைகள் இறக்கின்றன.

ஆண்களில் ஐந்தில் ஒருவர் உடல் ஊனமுற்று இறக்கிறார்.

ஐந்து பெண்களில் ஒருத்தி விதவை.

போதாக்குறைக்கு 50 லட்சம் பேர் அகதிகளாக நாட்டிலிருந்து வெளியேறுகின்றனர்.

எந்த நாட்டில் இந்த அவலம்?

ஆப்கானிஸ்தான்.

காரணம் போர், அதுவும் உள்நாட்டுப் போர்!

ஏன் இந்த நிலை? விளக்கம் பெற, பின்னோக்கிச் செல்ல வேண்டும்.

1933லிருந்தே மன்னர் ஜாஹிர் ஷாவின் ஆட்சி சர்வாதிகாரமாக நடந்து வர, முற்போக்கான சோஷலிஸ சிந்தனை உள்ளவர்கள் இணைந்து, 'பார்சம்' என்ற அமைப்பை உருவாக்கினார்கள், 'அரசியல் கட்சிகள் அமைய அனுமதி வேண்டும்; தேர்தல்கள் நடத்த வேண்டும்' என்ற கோரிக்கைகள் எழுந்தன. காலம் சென்றது.

மன்னரின் உறவினர்களில் ஒருவரான தாவூத் மக்களின் அதிருப்தியையும் பார்சம் இயக்கத்தின் செல்வாக்கையும் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்டார். 1973-ல் ஜாஹிர்ஷாவைக் கவிழ்த்து விட்டுத் தாமே பதவிக்கு வந்தார். ஆனால் பார்சம் இயக்கம் பெரிய ஏமாற்றத்துக்கு உள்ளாயிற்று. தாவூத், ஜாஹிர் ஷாவை விட மோசமான சர்வாதிகாரியாக விளங்கினாரே தவிர, ஜனநாயக சோஷலிஸ ரீதியில் சீர்திருத்தங்கள் ஏதும் நடக்கவில்லை.

1978ல் தாவூத் தூக்கி எறியப்பட்டார் - ஆத்திரமடைந்த மக்களால். பார்சம் இயக்கத்தின் ஆதரவோடு ஹபீஸுல்லா அமீன் அதிபரானார். ஆனால் இவரால் நிம்மதியாக ஆட்சி நடத்த முடியவில்லை. நாடெங்கும் கலவரங்கள் கிளர்ச்சிகள். இவற்றைத் தூண்டி விட்டவர்கள் மதகுருமார்கள். காரணம், மார்க்ஸிஸம் - லெனினிஸம் பேசும் இளைஞர்கள் நாட்டை ஆண்டால் மதத்துக்கு மதிப்பிராது என்று இவர்கள் எண்ணியதுதான். எனவே மதரீதியாகப் பல இளைஞர்களை ஈர்த்துக் கலவரங்களில் ஈடுபடுத்தினர்.

கிளர்ச்சிகளை அடக்க முடியாமல் அமீன் சோவியத் நாட்டை உதவிக்கு அழைத்தார். சோஷலிஸத்துக்கு ஆதரவு தரும் நோக்கிலும், ஆப்கானிஸ்தானில் தனது செல்வாக்கை நிலைநிறுத்திக் கொள்ளும் நோக்கிலும் ருஷ்யா படைகளை அனுப்பியது. இதே நேரத்தில் பார்சம் இயக்கமும் பிளவுபட அமீன் பதவி இழந்தார். ருஷ்யா, தனது கைப்பாவையாக பாப்ராக் கார்மால் என்பவரை அதிபராக்கியது. இவர் 'வதான்' கட்சி என்பதாக ஒன்றைத் தம் பங்குக்கு ஆரம்பித்தார்.

ருஷ்யா, ஆப்கானிஸ்தானில் மூக்கை நுழைத்த பிறகு அமெரிக்கா சும்மா இருக்குமா? சோஷலிஸத்துக்கு எதிரான மத குருமார்களின் இயக்கத்துக்கு - முஜாஹிதீன் விடுதலைக் குழுக்களுக்கு - ஆயுதம், பணம் என்று உதவி செய்யத் தொடங்கியது. அதிபர் கார்மால் சோவியத் துருப்புக்களின் உதவியுடன் முஜாஹிதீன்களைத் நசுக்க முற்பட,

★ கிட்டத்தட்ட ஒரு லட்சம் ஆப்கன் மக்கள் இதுவரை இறந்திருக்கிறார்கள்.

★ 15,000 சோவியத் துருப்புக்கள் மடிந்திருக்கிறார்கள்.

1986ல் அதிபர் கார்மால் பதவியிலிருந்து இறக்கப்பட்டு மிதவாதி எனக் கருதப்பட்ட முகமது நஜீபுல்லா அதிபராக்கப்பட்டார். ஆயினும் முஜாஹிதீன் குழுக்களின் எண்ணிக்கை அந்நிய ஆதிக்கத்துக்கு எதிராக அதிகரித்துக் கொண்டே போயினவேயன்றி குறையவில்லை. இவர்களுக்கு அமெரிக்கா, பாகிஸ்தான், ஈரான், சவுதி அரேபியா ஆகிய நாடுகளின் பண உதவியும் ஆயுத உதவியும் தாராளமாகக் கிடைத்தன.

1988ல் ஐ. நா. சபை ஒரு சமரசத் திட்டத்தை அறிவித்தது : சோவியத் படைகள் வாபஸாக வேண்டும். ஆட்சியில் உள்ள நஜீபுல்லா பல்வேறு புரட்சி அமைப் புக்களையும் - அதாவது முஜாஹிதீன்களை - இணைத்துக் கொண்டு ஓர் இடைக்கால அரசை அமைக்க வேண்டும். அந்த இடைக் கால அரசு, தேர்தல்களை விரைவில் நடத்தி, மக்கள் ஆட்சி மலரச் செய்ய வேண்டும்.

ஐ.நா. வின் இந்த யோசனைக்கு கோர்பசேவ் ஆதரவு தந்து துருப்புக்களை வாபஸ் பெற்றார். ஆனால் முஜாஹிதீன்கள் பல்டி அடித்தனர். சோவியத் துருப்புக்கள் வாபஸ் பெறப்பட்டதும் தங்கள் தாக்குத லைத் தீவிரப்படுத்தினர். ஏறக்குறைய இதே நேரத்தில் சோவியத் ருஷ்யாவும் தனித்தனி நாடுகளாகப் பிளவுபடவே, 'இனி தாக்குப் பிடிக்க முடியாது; ருஷ்ய ஆதரவையும் எதிர் பார்க்க முடியாது' என்ற நிலையில் நஜீபுல்லா அரண்மனையை விட்டு வெளி யேறி ஆஃப்கனிஸ்தானிலுள்ள ஐ.நா. அலு வலகத்தில் தஞ்சம் புகுந்தார்.

இன்று பல்வேறு புரட்சியாளர்க ளிடையே - முஜாஹிதீன்களிடையே - ஆட்சியைப் பிடிப்பது யார் என்பதில் போட்டி உருவாகியுள்ளது. ஐம்பத்தோரு பேர் கொண்ட முஜாஹிதீன் ஆட்சி மன்றக் குழு தாற்காலிகப் பொறுப்பேற்றுள்ளது. எழுபது வயதான சிப்கதுல்லா முஜாதிதி இதன் தலைவர்.

முஜாஹிதீன் குழுக்கள் போராட நிறைய ஆயுதம் வாங்க வேண்டியிருந்த தால் பணம் பெற, கஞ்சா வியாபாரத்தை ஊக்குவித்தனர். இப்போதோ பதவி போதை பலருக்கும் தலைக்கேறியிருக் கிறது. அதனால் மறுபடி ஆட்சிக் கவிழ்ப்பு - போராட்டங்கள் தொடரும் என்றே எதிர் பார்க்கலாம். சோவியத் யூனியன் போல் ஆப்கானிஸ்தான் துண்டு துண்டாக உடை யவும் வாய்ப்புண்டு.

பல்வேறு இன, மொழிகளைச் சேர்ந்த ஆப்கன் மக்களைப் பொறுத்தமட்டில் இன் னொரு பிரச்னையும் இருக்கிறது. சோவியத் ஆதரவுடன் சோஷலிஸம் பேசிய ஆட்சி பதவியில் இருந்த போது, பெண்கள் சுதந் திரம் மதிக்கப்பட்டது. பலர் உயர் கல்வி கூட கற்றனர். மதச் சார்புள்ள முஜாஹி தீன்கள் ஆட்சியில் (எந்தக் குழு ஆட்சிக்கு வந்தாலும்) இத்தகைய முற்போக்கு சிந்தனைகள் இருக்குமா என்ற ஐயப்பாடு எழுந்துள்ளது.

- ப்ரியன்



கோவைத் தொழிலதிபர்: கோவையாகச் சில பண்புகள்

●● கோவில்பட்டி லக்ஷ்மி மில்லின் விருந்தினர் மாளிகையில் ஒரு சமயம் ஜி. கே. தேவராஜுலு காப்பி அருந்திக் கொண்டிருந்த போது, வரவேற்பறையின் பளிங்குத் தரையில் ஒரு அணில் குட்டி தடுமாற்றத்துடன் ஓடிக் கொண்டிருப்பதைக் கண்டார். உடனே சமையல்காரரைக் கூப்பிட்டு, ''பறவைகளுக்குப் பயந்து இந்த அணில் குட்டி வெளியில் போக அஞ்சுகிறது. அதன் பயம் தெளியும் வரை, ஆகாரம் தந்து காப்பாற்ற வேண்டியது உன் பொறுப்பு'' என்று கூறினார். அப்புறம் என்ன? அந்த அணில்குட்டி, அடுத்த சில நாட்களுக்கு லக்ஷ்மி மில்லின் சிறப்பு விருந்தாளி!

●● ஒரு சமயம் ரோம் நகரில் விமானத்தை விட்டு இறங்கியதும், ஜி.கே.டி. தம் பெட்டிகளைத் தூக்கி வர போர்ட்டர் தேடிக் காத்திருந்தார். அப்போது சக பயணியான பாட்டியாலா மகாராஜா தமது இரு கைகளிலும் இரு பெட்டிகளுடன் செல்வதைக் கண்டார். ''பெரிய சமஸ்தானத்தின் மகாராஜாவே தமது உடைமைகளைத் தாமே தூக்கிச் செல்லும் போது நான் எம்மாத்திரம்?'' என்று எண்ணினார் ஜி. கே. டி. அன்று முதல், தேவைப்படும் போது தம் உடைமைகளைத் தாமே தூக்கிச் செல்ல அவர் தயங்கியதில்லை.

●● அந்தக் காலத்தில் மில் இயந்திரங்கள் எல்லாம் அதிக சப்தத்துடன் ஓடும். ஜி.கே.டி. யின் வீட்டிலும் கேட்கும். இயந்திரங்களிலிருந்து ஏதாவது வித்தியாசமான ஒலி கேட்டால் போதும், நள்ளிரவானால் கூட, உடனே தமது சைக்கிளில் புறப்பட்டு, மில்லுக்கு வந்து இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறைச் சரிப்படுத்தி விட்டுத் திரும்புவார்!

●● ஒருமுறை அலுவலகத்தில் உட்கார்ந்திருந்த ஜி. கே. டி. எதையோ வித்தியாசமாய் உணர்ந்து, நாசியைச் சுருக்கி முகர்ந்து பார்த்தார். ''பருத்திக் கிடங்கில் தீப்பிடித்திருக்கிறது என நினைக்கிறேன்'' என்று கூறி விட்டு, காரில் மில்லுக்கு விரைந்தார். அங்கே அவர் கணித்தபடியே தீ புகைந்து கொண்டிருந்தது. உடனே நடவடிக்கை எடுத்து தீ அணைக்கப்பட்டது.

●● விளம்பரத் துறையில் கூட புதுமை புகுத்தியவர் அவர். லக்ஷ்மி மில்ஸ் விளம்பரங்கள் கவர்ச்சிக்கு முக்கியத்துவம் தராமல், பாரத தேசத்தின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வண்ணம் அழகிய படங்களுடன் உபநிஷதங்கள், பஜகோவிந்தம் போன்றவற்றின் சாரத்தைக் கூறின.

●● ஜி. கே. டி. யின் தந்தையார் குப்புசாமி நாயுடுவின் ஒன்று விட்ட சகோதரி ராஜம்மாள், போதிய மருத்துவ வசதியின்றி ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தவுடன் இறந்து விட, ஒரே வாரத்தில் குழந்தையும் மரணமடைந்தது. இச்சம்பவங்களால் மனம் பாதிக்கப்பட்ட குப்புசாமி நாயுடு, பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் மருத்துவ வசதியளிக்கத் தம்மாலியன்றதைச் செய்ய முடிவெடுத்தார். அவர் ஆசையைப் பூர்த்தி செய்ய எழுந்ததுதான் குப்புசாமி நாயுடு டிரஸ்ட்டும், மகப்பேறு மருத்துவமனையும். அதன் திறப்பு விழாவிலும் ஒரு புதுமை : மைசூர் மகாராஜா மின்சாரப் பொத்தானை அழுத்தியதும் டேப்பில் பதிவு செய்து வைத்திருந்த பச்சிளங்குழந்தைகளின் அழுகுரல் ஒலிக்க, மகப்பேறு மருத்துவமனை திறக்கப்பட்டது!



●● ஜி. கே. டி. தம் வாழ்நாளில் மறக்க முடியாத சம்பவங்களாய்க் கருதி அடிக்கடி பெருமிதத்துடனே நினைவுகூர்ந்தவை இரண்டு : 1. காந்திஜி பழனிக்கு வந்த போது, அவருக்குக் காரோட்டியதும், கோவிலுக்கு அழைத்துச் சென்றதும். 2. நேருஜி ஒருமுறை கொச்சியிலிருந்து திருவனந்தபுரம் சென்ற போது, அவருக்குக் காரோட்டும் சாரதியாக விளங்கியது.

●● இத்தாலி நாட்டுக் கூட்டுறவுடன், சௌத் இந்தியா விஸ்கோஸ், மால்கோ நிறுவனங்கள் அமைக்கப் பெரிதும் பாடுபட்ட ஜி. கே. டி.யைக் கௌரவிக்கும் வகையில் 1974-ல் இத்தாலிய அரசு தந்த பட்டம்தான் 'கவேலியர்'. இதற்கு 'தர்மத்தின் பக்கமிருந்து போரிடும் வீரர்' என்பது பொருள்.

ஆதாரம் : ஜி. கே. டி. வாழ்க்கை வரலாறு

தொகுப்பு : எஸ். சந்திரமௌலி

◆ தலையங்கம் கண்டேன். தமது கட்சியினரைப் போலவே பத்திரிகைகளும் தமக்கு 'ஜால்ரா' போட வேண்டும் என்ற முதல்வரின் எதிர்பார்ப்பு சிரிப்பைத்தான் வரவழைத்தது. அதிகாரத்தினாலும், அராஜகத்தினாலும் பத்திரிகைகளை அடக்கி ஒடுக்கி விடலாம் என நினைக்கும் ஆட்சியாளர்களின் ஆசைகள் முடிவில் நிராசையாகப் போய் விடும் என்பது திண்ணம்.

திண்டுக்கல் - 1, எப்போதும்வென்றான்.

◆ ''கண்ணா நீ காப்பாக வேண்டும்'' - என்ற கவிதையைப் படித்த போது மேனி சிலிர்த்தது. வள்ளலாரின் - திருமூலரின் - பாரதியின் அகக் கருத்துக்கள் அனைத்தும் சேர்ந்து மிக எளிமையாக உள்ளத்தை வருடியது. ஸ்ரீபத்ரா கோவிந்தராஜன் என்ற பெயர் கூட கவிதை எழுதியவருக்குப் பொருத்தமாக உள்ளது.

வேலூர், காமாட்சி சந்திரநாராயணன்.

◆ ''மன்னிப்பதில் ஒரு மகிழ்ச்சி'' சிறுகதையில் வருகின்ற மாமியார் மருமகள் நல்லுறவு கண்டு என் விழிகள் விரிந்தன!

வேலூர், பாற்கடல் வேந்தன்.

◆ அபிமானியின் ''கருகின்ற திரள்'' நம் வீட்டுச் சம்பவங்களின் ஆச்சரிய வெளிப்பாடாக அமைந்திருக்கிறது!

பெரியவர்களின் தவறான கண்ணோட்டம் குழந்தைகளைக் குட்டிச்சுவராக்குவது வேதனையான விஷயம். குழந்தை வளர்ப்பு பலருக்குப் புரிபடாத அருவமான விஷயமாகவே இருக்கிறது. சமூகக் களமான குடும்ப நிலையை ஆழ்ந்து கவனிக்கும் கதாசிரியரின் விரிந்த பார்வைக்கு ஒரு ஷொட்டு.

திருச்சி, தாமு. ஆண்டாள்.

◆ ''தமிழ் சினிமாவில் பெண்கள்'' கட்டுரையில் சொல்லப்பட்டிருந்த கூற்றுகள் முற்றிலும் உண்மை. என் நெடுநாளைய மனக்குமுறலை வெளிப்படுத்தும் விதமாக அக்கட்டுரை இருந்தது. திருமண வாழ்க்கை மட்டுமே பெண்ணுக்கு என்று காலம் காலமாக மூளைச் சலவை செய்ததில், தமிழ் சினிமாக்களும் தம் பங்கினை அளித்திருக்கின்றன என்பதை மறுக்க முடியாது. ஒருபக்கம் பெண்ணுரிமைப் போராட்டம் நடந்தாலென்ன, கலப்பான பொழுதுபோக்குச் சாதனமான சினிமா அவற்றையெல்லாம் அமுக்கி விடும் 'சாதனையை' நன்றாகவே செய்கிறது. நல்ல கல்வி ஒன்றே இதுபோன்ற பிற்போக்கு சக்தியிலிருந்து பெண்ணை விடுவிக்கும் ஆயுதமாக விளங்கும்.

கடலூர், கலைமாரி இராமநாதன்.

◆ கர்நாடக, தமிழ் நாடு மாநிலங்களின் எல்லையில் 1962-63 - ம் ஆண்டுவாக்கில் அமைப்பதெனத் திட்டமிடப்பட்ட, ஹொகனேக்கல் நீர்மின் திட்டம் பற்றிய பேச்சுவார்த்தைகளின் போது, மின் உற்பத்திக்குத் தொடர்ந்து கிடைக்கக்கூடிய நீரின் அளவும் கணிக்கப்பட்டது. 1962-63, 1963-64 ஆண்டுகளில் பாய்ந்து வந்த தண்ணீர் அளவையும், இதே போன்று 1950-60 காலத்தில் இரு ஆண்டுகளில் பாய்ந்து வந்த தண்ணீரையும் கணக்கிட்டு எந்த நிலையிலும், எந்த ஒரு ஆண்டிலும், காவிரியில் 650 TMC க்கு குறையாமல், பாயக்கூடும் எனவும், இதில் கர்நாடகத்தில் இருந்து, ஹொகனேக்கல் நீர் மின் திட்டத்திற்கு நிச்சயமாக 380 TMC க்குக் குறையாமல் அனுப்ப இயலும் என்றும், கணிக்கப்பட்டது.

மூன்று கட்ட மின் உற்பத்தி முடிந்தபின், அடுத்தப் பகுதியில், தமிழக எல்லைக்குள் இந்த 380 TMC யும் நிச்சயம் கிடைத்துக் கொண்டிருந்திருக்கும். இந்தத் திட்டம், புதுமையானதாக கருதப்பட்டது - காரணம், அ) இதன் கட்டுமானச் செலவுகள், ஆ) செயல்படத் துவங்கியபின் ஏற்படும் நிர்வாகச் செலவுகள் இ) உற்பத்தியாகும் மின் சக்தி, இவை இரு மாநிலங்களிடையேயும் சமமாகப் பங்கிட்டுக் கொள்வது என்பதுதான்.

திரு காமராஜ், திரு பக்தவத்சலம், இவர்கள் உருவாக்கிய இத்திட்டம் செயல்படுத்தப் பட்டிருக்குமானால் தனது பற்றாக்குறையான மின்சக்தியைப் பெற, கர்நாடக அரசு, ஹொகனேக்கல்லுக்கு, அன்று திட்டமிட்டபடி தொடர்ந்து தண்ணீர் அனுப்பிக் கொண்டிருந்திருக்கும். மின் உற்பத்திக்குப் பின், இத்தண்ணீர், மேட்டூர் அணைக்கு வந்து கொண்டே இருந்திருக்கும்.

இத்தகைய திட்டத்தைச் செயல்படுத்தத் தவறி காவிரி நதி நீர் விவகாரத்தைப் பிரச்னையாக்கிக் குழப்பியவர்கள் 1967 க்குப் பின் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பேற்றவர்கள்தான்.

தேப்பெருமாநல்லூர், எஸ். பாலசுப்பிரமணியன்

◆ தஞ்சைச் சிறப்பிதழில் (கல்கி, ஏப்ரல் 26) புஷ்பக் கலைஞர் வேணுகோபால் தாம் மாநாட்டுப் பந்தல் முகப்புக்களைப் பூக்களைக் கொண்டே அலங்காரம் செய்ததைக் கூறியிருக்கிறார். இதற்கு எடுத்துக்காட்டு போல ஒரு புகைப்படம் பிரசுரமாகியுள்ளது. ஆனால் புகைப்படத்தில் உள்ள முகப்பு, நான் ஜெமினியில் ஆர்ட் டைரக்டராகப் பணியாற்றிய காலத்தில் வாசனின் கட்டளையின் பேரில், மதுரையில் இருவாரங்கள் கிருஷ்ணாஜியுடன் சேர்ந்து தங்கியிருந்து, ஜெமினி தொழிலாளர்கள், மற்றும் பல புஷ்பக் கலைஞர்களின் ஒத்துழைப்புடன் தயாரித்ததாகும்.

சென்னை - 17, எம்.எஸ். ஜானகிராம்

நழுவ விடப்பட்ட வாய்ப்பு

அட, அப்படியா?



மீனுக்குப் பல் தேய்த்துவிடும் உயிரினம்!

!! பூமியில் இருப்பதைக் காட்டிலும் கடலில் மிக அதிகமான உயிரினங்கள் உள்ளன. கண்ணுக்குப் புலப்படாத ஜந்துக்கள் முதல், மிகப் பெரிய டினஸாரை விடப் (சரித்திர காலத்துக்கும் முந்தைய விலங்கு) பெரிதான 'ப்ளூ வேல்' என்ற திமிங்கலம் வரை பில்லியன் கணக்கில் உயிரினங்கள் கடலுக்குள் வசிக்கின்றன. இவற்றுள் மலர்களைப் போல் பூக்கும் விலங்குகளும் 180 அடி நீளத்துக்கு வளரும் புழுக்களும் அடங்கும். எட்டுவித நிறங்களில் மாறக்கூடிய மீன்கள் மற்ற சில மீன்களின் வாய்க்குள் புகுந்து அவற்றின் பற்களைச் சுத்தம் செய்யும் 'ஷ்ரிம்ப்' என்ற உயிரினம்... இப்படி கடலுக்கடியில் பல அற்புதங்கள்.

!! கடல் நீருக்குக் கரிப்புத் தன்மை இருப்பது எதனால் தெரியுமா? கடலுக்குள் வந்து சேரும் நதிகளும் ஓடைகளும் உப்புச் சத்தைப் பாறைகளிலிருந்தும் பூமியின் மேல் பரப்பிலிருந்தும் சிறுகச் சிறுக அடித்துக் கொண்டு வந்து கடலில் சேர்ப்பதால்தான். கடல் நீர் ஆவியாக மாறி மீண்டும் மழையாகப் பொழிகிறது. உப்பு மட்டும் கடலிலேயே தங்கி விடுகிறது.

!! கிரேட் ஸால்ட் லேக் என்ற ஏரியிலும் டெட் ஸீ (Dead Sea) என்ற கடலிலும் நாம் முழுக முடியாது. ஏனெனில், இவை இரண்டிலும் உப்புத் தன்மை மிக அதிகமாயிருப்பதால், நம் உடல் இத் தண்ணீரில் அமிழ்வதே கடினம்.

!! கடலுக்கு நீல நிறம் கொடுப்பது சூரியன்தான். உண்மையில் தூய கடல் தண்ணீர் நிறமற்றது. சூரியனிலிருந்து வெளிப்படும் பல நிற ஒளிக் கதிர்களுள் நீல நிறத்தைத் தவிர மற்ற அனைத்தையும் கடல் கிரஹித்துக் கொள்கிறது. நீல நிறக் கதிர்கள் மட்டும் கடலினால் எதிரொலிக்கப்படுவதால் அது நீலநிறமாகத் தோன்றுகிறது.

!! முழு நிலவின் ஈர்ப்புச் சக்தியினால் கடல் நீர் எழுச்சியடைவது போல், உலகின் பூமிப் பிரதேசமும் கொந்தளிக்கிறது. பூமியின் நிலப்பரப்பு சில சமயங்களில் ஆறு அங்குலம் கூட எழுந்து மீண்டும் அடங்குகிறது.

!! உலகப் பரப்பின் எழுபது சதவிகிதம் தண்ணீர்தான். ஆனால் இதில் ஒரு சதவிகிதம்தான் குடிக்க லாயக்கானது.

!! ஜெர்மனியில் உள்ள ஹெமல்ஸ்டார்ஃபர் (Hemelsdorfer) ஏரியின் மேல் பகுதி நீர் இனிப்பாகவும், அடிப்பகுதி நீர் கசப்பாகவும் இருக்கும். அதனால் இதற்கு 'Sea of Matrimony' என்று பெயர். (Matrimony - மண வாழ்க்கை)

தொகுப்பு : உதய்லால்

எம்.ஜி.ஆர். செய்த மாயாஜாலம்!

'வெண்ணிற ஆடை' படத்துக்குச் சென்னை, தலைமை சென்ஸார் அதிகாரி 'ஏ' சர்ட்டிஃபிகேட்தான் கொடுத்தார். இது படத்துக்கு மிகவும் பரபரப்பான ஒரு விளம்பரமாக அமைந்தது. ஆனால் அந்தப் படத்துக்கு 'ஏ' சான்றிதழ் தர வேண்டிய அவசியம் என்ன என்றுதான் எனக்குப் புரியவில்லை!

என்னுடைய பாணியே அழுத்தமான காதல் கதையைச் சொல்வதுதான். ஆபாச மற்ற டிராயிங் ரூம் காமெடியைத்தான் நான் பயன்படுத்துவேன். ஆபாசக் காட்சிகளையும் வசனங்களையும் படத்தில் திணித்துத்தான் மக்களைக் கவர முடியும் என்பதில் எனக்கு நம்பிக்கையே கிடையாது. வெண்ணிற ஆடையையும் இந்த அடிப்படையில்தான் எடுத்திருந்தேன். ஆக, எதற்கு 'ஏ'? நான் சென்ஸார் போர்டு சென்னைத் தலைமை அதிகாரியிடம் வாதாடினேன். '''யு' சான்றிதழ் தர வேண்டும்'' என்று கேட்டேன். ஆனால் அவர் பிடிவாதமாக மறுத்ததுடன் காரணம் கூறவும் இல்லை! ஆனால் பின்னால் எனக்குச் சுற்றி வளைத்துக் கொண்டு காரணம் தெரிய வந்தது. அந்தக் காரணத்தைச் சொன்னால் நீங்கள் சிரிப்பீர்கள்! இன்று மிக சகஜமாக ஏற்றுக் கொள்ளப்படும் 'ஸ்லீவ் லெஸ் ஜாக்கெட்' அணிந்து, அந்தப் படத்தில் ஜெயலலிதா சில காட்சிகளில் தோன்றுகிறார். அதுதான் சென்சார் இப் படத்துக்கு 'ஏ' சர்ட்டிஃபிகேட் தரக் காரணம்!

ஆக, ஒன்றுமில்லாத விஷயத்துக்கு 'ஏ' சான்றிதழ் பெற்ற வெண்ணிற ஆடை, அந்த சர்டிஃபிக்கேட் காரணமாகவே பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டு ரிலீஸ் ஆனது. ஆனந்த் தியேட்டரில் முதல் நாள், முதல் காட்சி. ''ஏ' பெறுமளவில் அப்படி என்ன இருக்கிறது படத்தில்?' என்ற ஆவலால் தூண்டப்பட்டு இளைஞர்கள் ஆயிரக் கணக்கில் கூடியிருந்தனர். கூட்டம் அலை மோதுவதாகச் செய்தி வர, நான் சற்றுக் கவலையுடனேயே ஆனந்த் தியேட்டருக்குப் போனேன்.

என்னை அடையாளம் தெரிந்து கொண்ட ரசிகர்கள் சிலர் சூழ்ந்து கொண்டு, ''படம் முழுக்க ஒரே செக்ஸா இருக்குமா சார்?''; ''நீங்க கூடவா சார்?'' என்றெல்லாம் கேள்விகள் கேட்க ஆரம்பித்தனர். ''தமிழில் சமூகப் படம் ஒன்று 'ஏ' பெறுவது இதுதான் முதல் தடவை; அதிரம் புதுமை செய்துட்டீங்க!'' என்று ஜோக் அடித்தார் இன்னொருவர்.

''படத்தைப் பார்க்கத்தானே போறீங்க; பார்த்து விட்டுச் சொல்லுங்க'' என்று கூறி, கைகூப்பி ஒதுங்கினேன். ''நல்ல எதிர்பார்ப்பு இருக்கிறது; படம் ஏமாற்ற மளிக்கப் போவதும் இல்லை; அதனால் நிச்சயம் பாக்ஸ் ஆஃபீஸ்தான்'' என்று ஆனந்த் தியேட்டர் அதிபர் உமாபதி, என் மனத்திலிருந்ததையே கூறவும் மகிழ்ச்சி இரட்டிப்பாகியது. அதே நேரத்தில் மாட்னி ஹவுஸ்ஃபுல் ஆனதுடன் மாலைக் காட்சிக்கு அதே கியூ கலையாமல் நிற்கும் அதிசயத்தையும் பார்த்தேன்!

படம் ஆரம்பித்தது. சற்று நேரத்துக்குப் பின் ''ஆ ஊ!'' என்றெல்லாம் ஊளையிடும் சத்தங்கள் கேட்க ஆரம்பித்தன! ரசிகர்கள் படம் பார்க்கும் சந்தோஷத்தில் இப்படி கூச்சலிடுவதாகத்தான் முதலில் எண்ணினோம். பிறகுதான், 'ஏதோ ஒரு வெறுப்பில் கத்துகிறார்கள்' என்று புரிந்தது. நெஞ்சு கலங்க நின்றோம். படம் முடிந்து வெளியே வரும் போது பலர், ''கோவிந்தா! கோவிந்தா.'' என்று கத்திக் கொண்டு வந்தார்கள். படத்தில் இவர்களுக்கு ஏமாற்றமளித்தது என்ன? ஒன்றுமே புரியவில்லை. யோசிக்க யோசிக்கக் குழப்பம்தான் மிஞ்சியது.

தியேட்டர் காலியானதும் உள்ளே சென்ற சுத்திகரிப்பு ஊழியர்கள் பதறி அடித்துக் கொண்டு வெளியே ஓடி வந்தனர். ''ஸார்! ஸார்! ஏகப்பட்ட ஸீட்டுகள் கிழிஞ்சிருக்கு ஸார்; பிளேடு போட்டிருக்காங்க!'' என்றனர். அதிர்ச்சி அடைந்து நின்றேன். 'இது என்ன அநியாயம்? நான் என்ன குற்றம் செய்திருக்கிறேன், படத்தில்?'

டைரக்டர் ஸ்ரீதர்



அன்று மாலையே ஃபோன் கால்கள் பல ஊர்களிலிருந்தும் வந்தன. தமிழ் நாட்டின் பல நகரங்களில் வெண்ணிற ஆடை ரிலீஸான தியேட்டர்களிலெல்லாம் இதே மாதிரி இருக்கை கிழிப்புச் சம்ப வங்கள்! நான் யோசித்தேன். ஒன்று நிச்சயம் : 'கோவிந்தா' போடவும் ஊளையிடவும் ஸீட் கிழிக்கவும் வைப்பது போன்ற ஏமாற்றமளிக்கக்கூடிய படம் அல்ல என் னுடையது. ஒருவேளை, 'ஏ' சர்ட்டி ஃபிகேட் வழங்கப்பட்ட படத்தில் அதற் கேற்ப ஆபாசக் காட்சி ஏதும் இல்லாதது உருவாக்கிய கோபமாக இருக்குமோ? அல்லது, என்னைப் பிடிக்காத சிலர் பொறாமை கொண்டு திட்டமிட்டு நிறை வேற்றும் சதியோ?' மர்மத்தை விடுவித்தே ஆக வேண்டும் என்று தீர்மானித்தேன்.

இரவுக் காட்சியின் போது ஆங்காங்கே நம்பகமான ஆட்களை நிறுத்தி வைத்தேன். கூச்சல் எழுப்பி சீட்களைக் கிழிப்பவர் களைக் கண்டுபிடித்து, அவர்களை மிரட்டா மல், நல்ல வார்த்தையாகப் பேசித் தனியே அழைத்து வர ஏற்பாடு செய்தோம். இப்படி வந்து சேர்ந்த சிலரை விசாரித்த போது திடுக்கிடச் செய்த விவரம் தெரியவந்தது! அவர்கள் எல்லோருமே எம். ஜி. ஆர். ரசிகர்கள்!

எம். ஜி. ஆரை வைத்துச் சில காட்சி களை மட்டுமே எடுத்து விட்டு, அந்தப் படம் (அன்று சிந்திய ரத்தம்) பாதியில் நிற்க, 'காதலிக்க நேரமில்லை' என்றும் 'வெண்ணிற ஆடை' என்றும் மேலும் மேலும் வண்ணப்படங்களை - வெற்றிப் படங்களை - எடுத்துக் கொண்டிருக்கும் என் மீது அவர்களுக்கு இயல்பான கோபம் பொங்கியிருக்கிறது! தங்களுடைய அபிமான ஹீரோவை அலட்சியம் செய்து விட்டு நான் புதுமுகங்களைப் புகுத்திப் படம் எடுத்துக் கொண்டிருப்பதாக எண்ணி எரிச்சல் அடைந்திருந்தார்கள்.

நான் எம். ஜி. ஆரை அலட்சியம் பண்ணவில்லை என்பதும் 'அவர் படு பிஸியாக இருப்பதால் எனக்குக் கால்ஷீட் தரவில்லை என்பதும் படம் எடுத்து முடியாமல் இருப்பதற்கு இதுதான் காரணம் என்பதும் அவர்களுக்குத் தெரிய நியாயமில்லையே. அவர்களுடைய கோபத்தின் வெளிப்பாடு என்னைப் பாதித்தபோதிலும் எம். ஜி. ஆர். மீது அவர்களுக்குள்ள உணர்ச்சிபூர்வமான பேரபிமானத்தையும் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

பிரச்னைக்கு முடிவு காண, நேரடியாக எம். ஜி. ஆரையே அணுகினேன். விஷ யத்தை விவரமாக நான் கூறக் கேட்டதும், "அப்படியா! இது ரொம்பத் தப்பாயிற்றே! என் ரசிகர்கள் இப்படியெல்லாமா செய் தார்கள்" என்றார் சற்று திகைப்புடன். சற்று நேரம் யோசித்தார். பிறகு என்னை ஆழமாகப் பார்த்து, "எனக்கு இதெல்லாம் பிடிக்காது; கவலைப்படாதீங்க; இனிமேற் பட்டு அப்படிப்பட்ட காரியங்களெல்லாம் நடக்காது; நான் பார்த்துக்கறேன்" என்றார். எனக்கு வயிற்றில் பால் வார்த்தது போலிருந்தது. நன்றி கூறி விடைபெற்றுக் கொண்டேன்.

இரண்டு நாட்களில் நிலைமை அடி யோடு மாறிப் போயிற்று. ஆனந்த் தியேட் டரில் மட்டுமின்றி தமிழகத்தில் வெண் ணிற ஆடை திரையிடப்பட்டிருந்த எல்லா தியேட்டர்களிலும் ரசிகர்கள் அமைதியாகப் படம் பார்த்தார்கள். ஏதோ மாயாஜாலம் மந்திரஜாலம் போலிருந்தது! என் படத்தை மட்டுமல்ல; என் மரியாதையையும் காப் பாற்றிய எம். ஜி. ஆருக்கு மனப்பூர்வமாக நன்றி சொன்னேன்.

"பனி விலகி விட்டது; இனி இந்தப் படத்தை நீங்கள் நன்றாகப் பார்க்கலாம்" என்று நான் நாளிதழ்களில் விளம்பரம் செய்தேன்.

'காதலிக்க நேரமில்லை' அளவுக்கு 'வெண்ணிற ஆடை'யும் வெற்றி பெற்றது என்று சொல்ல முடியா விட்டாலும் நூறு நாள் ஓடியது. நல்ல படம் என்று எல்லோரும் பாராட்ட, நடிக நடிகையர், டெக்னீஷியன்கள் ஆகிய அனைவருக்கும் சிறப்புச் சேர்ந்தது. ஆனால், இந்தப் பெருமையில் பங்குபெற, என் இனிய நண்பர் வின்ஸெண்ட் இந்தப் படத்தில் என்னுடன் சேர்ந்து பணியாற்றவில்லையே!

பாதுகாப்புக்கு எதிராகப் போராட்டம்!


ஆக்கிரமிப்பு, அநீதிக்கு எதிராகத்தான் போராட வேண்டும்; பாதுகாப்புக்கு எதிராகக் கூடவா? நடந்திருக்கிறது, ஆஸ்திரேலியாவில்!

ஆஸ்திரேலிய பூர்வ குடிமக்கள் எதிர் நோக்கும் பிரச்னைகளை விவரிக்கும் சில டாக்குமெண்டரி படங்கள் அண்மையில் திரையிடப்பட்டன.

அந்த மக்களின் பாரம்



☛ ஆஸ்திரேலிய....



...... பூர்வ குடிமக்கள்

பரியம், கலாசாரம், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவை அடியோடு அழிந்து விடாமல் தடுத்து நிறுத்துவது எப்படி?

அவர்களுடைய மண் உரிமையைப் பாதுகாத்துக் கொள்வது எப்படி?

இந்த இரண்டு பிரச்னைகளையும், இவை தொடர்பாக ஆஸ்திரேலிய அரசாங்கம் நடத்து கொள்ளும் முறைகளையும் வெவ்வேறு கோணங்களில் அணுகி, அலசி, ஆராய்கின்றன இப் படங்கள்.

ஏற்பாடு செய்திருந்தவர்கள் : ஆஸ்திரேலிய ஹை கமிஷன் + ஃபெடரேஷன் ஆஃப் ஃபிலிம் சொஸைட்டீஸ்.

'பூர்வ குடிமக்கள் பாதுகாப்புக் குழு' என்று ஓர் அமைப்பு. நியூசவுத்வேல்ஸ் மாநிலத்தில் இயங்கி வந்த இந்த அமைப்பு பூர்வ குடிமக்கள் சமுதாயத்தை உடைப்பதற்காக 1909-ல் ஒரு திட்டம் தீட்டியது. அதன் பலனாக, அவர்களுடைய குழந்தைகள் வலுக்கட்டாயமாகக் குடும்பங்களிலிருந்து பிரிக்கப்பட்டு, வெள்ளை இனத்தவரின் வீடுகளில் வேலை செய்ய அமர்த்தப்பட்டனர். வாரத்தின் ஏழு நாட்களிலும் வேலை. இதற்காக அவர்களுக்கு வழங்கப்பட்ட கூலி ஒரு ஷில்லிங், ஆறு பென்ஸ். இதில், ஒரு ஷில்லிங் பாதுகாப்புக் குழுவுக்கு அனுப்பப்பட்டு விடும். ஆறு பென்ஸ் வேலை செய்யும் குழந்தைக்குக் கைச் செலவுக்காகத் தரப்பட வேண்டும். ஆனால் பலருக்கும் அது தரப்படுவதில்லை.

1930களில் பூர்வ குடிமக்கள் ஒன்றிரண்டு இந்த அமைப்புக்கு எதிராக ஒரு போராட்டமே நடத்தினர். அந்தக் காலகட்டத்தின் நிகழ்ச்சிகளையும், அவர்களுடைய போராட்டங்களையும், அதன் முடிவாக அரசாங்கம் அந்தப் பாதுகாப்புக் குழுவை 1941-ல் கலைத்து விட்டதையும் விவரிக்கும் படம் : 'லௌஸி லிட்டில் ஸிக்ஸ் பென்ஸ்.'

பிரிட்டிஷார் ஆஸ்திரேலியாவைத் தங்களுக்குச் சொந்தம் கொண்டாடியது 1788-ல். அந்த நேரத்தில் அந் நாட்டில் வசித்த பூர்வ குடிமக்களின் எண்ணிக்கை சுமார் ஐம்பது லட்சத்துக்கும் அதிகம். இருப்பினும், அவர்கள் யாருக்கும் அந்த மண்ணின் மீது உரிமை இல்லை எனக் கூறப்பட்டு விட்டது.

இப்போது அந்தக் கூற்றை எதிர்த்து ஆஸ்திரேலிய நீதிமன்றத்தில் ஒரு நீண்ட நாள் போராட்டம் நடைபெற்று வருகிறது. மர்ரே தீவைச் சேர்ந்த மூன்று குடும்பத்தினர் போராடி வருகிறார்கள்.

''இந்த நிலம் உங்களுக்குத்தான் சொந்தம் என்பதற்கு என்ன சாட்சியம் இருக்கிறது?'' என்கிற கேள்விக்கு அவர்கள் சொல்லும் பதில் : ''என் தந்தை எனக்குச் சொன்னார். அவருக்கு என் பாட்டனார் சொன்னார். பாட்டனாருக்கு அவருடைய தந்தை சொன்னார். இப்படிப் பரம்பரை



☛ லிஸ் மாக்திவன் - தமது மகளுடன்...

யாக எங்கள் முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை ஒவ்வொருவரும் மதிக்கிறார்கள். அவரவருக்கென்று வரையறுக்கப்பட்ட வாய்மொழி எல்லையை மீறி மற்றவர் நிலத்தில் நாங்கள் ஆக்கிரமிப்புச் செய்வதில்லை. அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று - முன்னோர்கள் வார்த்தையை நாங்கள் மதிக்கிறோம். மற்றொன்று - அத்துமீறினால், அப்படி மீறுபவர் தலை துண்டிக்கப்பட்டு விடும்.''

''வாய்மொழி உரிமையை ஏற்பதற்கில்லை. எழுத்து மூலமாக உள்ள உரிமையைத்தான் சட்டம் ஏற்க முடியும்'' என்பது அரசுத் தரப்பு வாதம்.


''அது நீங்கள் கொண்டு வந்த சட்டம். எங்களுடையதல்ல'' என்கிறார்கள் பூர்வ குடிமக்கள்.

முன் காலத்தில் மரப்பட்டைகளால் கட்டப்பட்ட வீடுகளிலேயே பூர்வ குடிமக்கள் வசித்தனர். குடும்பத் தலைவர் இறந்து விடும் போது, அந்த வீட்டை விட்டு வெளியேறி விடுவதோடு அந்த வீட்டையே எரித்து விடுவது வழக்கம்.

இன்று காலம் மாறி விட்டது. அவர்கள் வசிப்பது மேற்கத்திய பாணியில் அமைந்த நவீன வீடுகள். ஒருவர் இறந்து விடும்போது முன் போல வீட்டை எரித்து விட முடியாது. அப்படி எரிக்காவிட்டால் இறந்தவர் ஆவி அங்கேயே சுற்றிக் கொண்டிருக்கும். அதை வெளியேற்ற என்ன வழி?

இப்படி நம்பிக்கைகளுக்கும் நவீன வாழ்க்கை முறைக்கும் இடையே எழும் மோதலின் விளைவாக உருவாகும் ஒரு சமரச மார்க்கத்தை விவரிப்பது 'தி ஹவுஸ் ஓப்பனிங்' என்கிற படம்.

☛ மைக்கேல் லீ



திரையிடப்பட்ட பத்துப் படங்களில் மாதிரிக்குச் சில இவை. இப் படங்கள் எடுக்கப்பட்ட பின்னணி, சூழ்நிலை, இவை விவரிக்கும் பிரச்னைகள் ஆகியவற்றைத் தெளிவுபடுத்தியவர்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து வந்திருந்த திருமதி லிஸ் மாக்திவன், மைக்கேல் லீ ஆகியோர்.

முன்னவர் புட்ஜிடி பூர்வ குடியினத்தைச் சேர்ந்தவர். இவர் ஒரு ஓவியர், கவிஞர், வீடியோ படத் தயாரிப்பாளர்.

பின்னவர் பிரிட்டனில் பிறந்து, மலேசியாவில் வளர்ந்து ஆஸ்திரேலியாவில் குடியேறியவர். சிட்னி பல்கலைக் கழகத்தில் சமஸ்கிருதத்தில் ஹானர்ஸ் பட்டம் பெற்றுள்ள இவர் தமது கருத்துக்களை வெளிப்படையாகப் பேசுகிறார். அரசின் கொள்கைகளைத் தயக்கமில்லாமல் விமர்சிக்கிறார். பூர்வகுடிமக்களின் மண் உரிமைக்காகப் போராடி வருகிறார்.

அரசின் சார்பில், அரசின் நிதியுதவியோடு வந்து விட்டு, அந்த அரசின் கொள்கைகளையே விமர்சித்து எதிர்ப்புத் தெரிவித்துக் கண்டனம் எழுப்புவது எவ் வகையில் நியாயம் என்கிற கேள்விக்கு அவர் அளித்த பதில் :


''அதற்குப் பெயர் - ஜனநாயகம்.''

– சி. ஆர். கே.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்...

மே 16, 1942
மகாபுருஷர்

"மாமுனிவோர் பலர் வாழ்ந்த பொன்னாடு" என்றார் பாரதியார். இந்தக் காலத்திலும் பாரத நாட்டில் மாமுனிவர் பலர் வாழ்கின்றார்கள். இதற்குப் பிரத்யட்ச சாட்சியாக அருணாசல க்ஷேத்திரம் என்னும் திருவண்ணாமலையில் இன்று ஸ்ரீ ரமண மகரிஷி எழுந்தருளியிருக்கிறார். பூர்வ ஜன்ம சுகிர்தத்தினால் பதினாறு வயதில் பள்ளியில் படிக்கும்போதே ஆத்ம ஞானமடைந்து, "நான் என் தகப்பனாரைத் தேடிக் கொண்டு அவருடைய உத்தரவின்படி இவ்விடத்தை விட்டுக் கிளம்பி விட்டேன்" என்று எழுதி வைத்து விட்டுக் கிளம்பியவர் அப்பெரியார். வழியில் பல துன்பங்களுக்கு ஆளாகி, திருவண்ணாமலையை அடைந்து, மோனத் தவம் செய்து, பல கடுஞ் சோதனைகளில் வெற்றி பெற்று, பூரண ஆத்ம ஞானியான பரமஹம்சர், இன்று ரமணாசிரமத்தில் வீற்றிருந்து தம்மை அடுத்து வந்தவர்களுக்கெல்லாம் ஞானானந்தத்தை வழங்கி வருகிறார். கல்வி கேள்விகளில் சிறந்த சீடர்கள் அம்மகரிஷியிடம் தாங்கள் அடைந்த ஞான போதத்தை நாடெங்கும் பரப்பி வருகிறார்கள். இத்தகைய மகா புருஷரை உலகுக்கு அளித்த தமிழ்நாட்டின் பாக்கியமே பாக்கியம்.



- அட்டைப்பட விளக்கம்

ஒப்பற்ற தலைவர்

நிலைமையைச் சீர்திருத்துவதற்குத்தான் நமது தலைவர் ராஜாஜி மறுபடியும் ஒரு யோசனை சொன்னார். "முஸ்லிம் லீக் கேட்கும் பாகிஸ்தான் உரிமையைக் கொடுத்து விடுவோம்" என்றார். அது, மகாத்மாகாந்தி ஒப்புக் கொண்ட உரிமைதான். அதாவது "முஸ்லிம்கள் பிரிந்து போக விரும்பினால் பிரிந்து போகலாம்" என்னும் அநுமதி மட்டுந்தான். இந்த உரிமையை இப்போதே காங்கிரஸ் ஒப்புக் கொண்டு விட்டால், முஸ்லிம்களின் மனம் அடியோடு மாறுதல் அடையும் - ஃதாத்தி லேயே அளவிலாத உற்சாகம் உண்டாகும் - பிரிட்டிஷார் நமது ஒரு முகமான கோரிக்கைக்கு இணங்கியே தீரவேண்டும் - ஜப்பான் படையெடுப்பு அபாயத்தையும் ஒற்றுமையாக எதிர்க்கலாம் - என்றெல்லாம் தீர்க்காலோசனை செய்துதான் ராஜாஜி கூறினார். "இந்தப் பெருந்தன்மையான காரியத்தினாலேயே முஸ்லிம்களுக்கு இருதய மாறுதல் ஏற்பட்டு, இந்தியாவின் ஒற்றுமை சரியான அஸ்திவாரத்தில் அமைக்கப்படும்" என்றார்.



ஆனால், நாம் சென்ற இதழில் எழுதியிருந்தது போல், "மனத்தில் ஆத்திரம் இருக்கும்போது அறிவு தெளிவாக இரா"தாகையால், ராஜாஜியின் யோசனையை வட இந்தியத் தலைவர்கள் ஏற்கவில்லை; அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியும் நிராகரித்து விட்டது.

ராஜாஜியின் யோசனையை ஒப்புக் கொண்டாலொழிய இந்தியா பூரண சுதந்திரம் பெறப் போவதில்லையென்று நாம் உறுதி கூறுகிறோம்.

தீர்க்க திருஷ்டி வாய்ந்த நமது ஒப்பற்ற தலைவர் ராஜாஜியை ஒரு முகமாகப் பின்பற்றுவதே நமது கடமை. அதுதான் நமக்குத் தற்காலப் பாதுகாப்பையும் வருங்கால க்ஷேமத்தையும் அளிக்கும். அதுவே பாரத நாட்டின் முடிவான க்ஷேமத்துக்கும் உகந்ததாகும்.

- தலையங்கத்திலிருந்து சில பகுதிகள்

எதிர்தாக்குதல்!

அபிப்பிராயத்தைத் தாக்குவது ஒன்று; அபிப்பிராயம் கூறியவரின் நோக்கத்தைத் தாக்கி அவருடைய ஒழுக்கத்துக்கே மாசு கற்பிப்பது முற்றும் வேறொன்று. சென்ற இருபத்தைந்து வருஷ காலமாக ஒப்பற்ற தியாகங்களைச் செய்து, இரவு பகல் இடைவிடாமல் தேசத்துக்காக உழைத்து, ஆறு தடவை சிறை புகுந்து, 'இருளடைந்த சென்னை மாகாணம்' என்ற அவப் பெயரை மாற்றி, தமிழ்நாட்டை தேசத்தின் முன்னணியில் கொண்டு வந்து நிறுத்தி, இவ்வளவுடன் சகலரும் அறிய மாசற்ற புனித தவ வாழ்க்கை நடத்தி வரும் ஒரு மகானைப் "பதவி மோஹம் கொண்டவர்" என்று ஒரு பித்தல் பத்திரிகைக்காரர் எழுதுவதென்றால், அந்தப் பத்திரிகைக்காரருடைய (அரசியல்) குலம் என்ன, கோத்திரம் என்ன,

பூர்வோத்திரம் என்ன, அவர் இதுவரையில் தேசத்துக்காகச் செய்திருக்கும் சேவை என்ன, தியாகம் என்ன, அவர் எந்த தேசியப் போராட்டத்திலாவது ஈடுபட்டதுண்டா, சிறை புகுந்ததுண்டா, அல்லது ஹரிஜனத் தொண்டு, கதர்த் தொண்டு ஏதாவது செய்ததுண்டா என்று தமிழ் மக்கள் கேட்காமல் இருக்க முடியாது.

''பொதுஜனங்களுக்குப் பகுத்தறிவு இருக்கிறது'' என்று மேற்படி ஆபாலப் பிரியப் பத்திரிகைக்காரர் மனமுவந்து ஒப்புக் கொள்கிறார். இதைப் பற்றி நமக்கு எப்போதும் சந்தேகம் கிடையாது. ராஜாஜியைப் ''பதவி மோகம் கொண்டவர்'' என்றும், பச்சை மெத்தை ஆலைவத்துக்கு ஆசைப்பட்டவர்'' என்றும் சொல்லக் கூடிய ஒரு பத்திரிகைக்காரருக்கு எவ்வளவு பகுத்தறிவு இருக்கும் என்பதையும் பொது ஜனங்கள் நிச்சயமாக உணர்ந்துதானிருக்கிறார்கள்.

- ''பல்டியும் பாதகமும்'' என்ற கட்டுரையிலிருந்து இரு பகுதிகள்

பலசாலி அப்பா!



முதல் பையன் : ஒரு தடவை எங்க அப்பா, ஒரு கையினாலேயே ஓடுகிற ரயிலை நிறுத்தி விட்டார், தெரியுமா?

இரண்டாவது பையன் : அடே! எப்படிடா?

முதல் பையன் : அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்து இழுத்தார்!

தமிழ்த்தாத்தாவின் சுயசரிதம்

ரயில் பாதைக்கு வெகு தூரத்திலுள்ள ஒரு கிராமத்தில், ஏதோ ஒரு வீட்டின் பரணில், ஓர் ஓலைச் சுவடி கிடக்கும். இதை ஆகாரமாக உட்கொண்டு விடுவதென்ற தீர்மானத்துடன் கறையான் படைகள் முன்னேறி வந்து கொண்டிருக்கும். இதே சமயத்தில் மேற்படி ஓலைச்சுவடி மேற்படி வீட்டுப் பரணில் கிடக்கும் செய்தியை டாக்டர் உ.வே. சுவாமிநாதய்யர் எப்படியோ தெரிந்து கொண்டு விடுவார். அவர் மேற்படி கிராமத்தை நோக்கி விரைந்து வருவார். ரயிலோ, கட்டை வண்டியோ, கால்நடையோ - எதுவாயிருந்தாலும் அவருக்கு லட்சியமில்லை. பகல் இராத்திரி என்று பாராமல் ஓடி வருவார்.

நான் சிலசமயம் தனியாகவும், பெரும்பாலும் டி.கே.ஸி. யுடனும் தமிழ்த் தாத்தாவை அடிக்கடி பார்க்கப் போவதுண்டு. அப்போதெல்லாம் அப்பெரியாரின் வாழ்க்கை அநுபவங்கள் சிலவற்றை அவருடைய வாய் மொழியாகக் கேட்க நேரும். கேட்கக் கேட்க, அந்த அநுபவங்களையெல்லாம் அவர் புத்தகமாக எழுத வேண்டும் என்ற ஆசை உண்டாகும். ''உங்களுடைய சுயசரித்திரத்தை நீங்கள் எழுத வேண்டும்'' என்று அடிக்கடி தெரிவித்துக் கொள்வோம். மகாத்மா, ஜவாஹர்லால் நேரு முதலியவர்கள் 'சுயசரிதம்' எழுதியிருப்பதையும் எடுத்துக் காட்டுவோம். ''என்னுடைய சரித்திரத்தை நாவே எழுதிக் கொள்வது என்பது பிடிக்கவில்லையே?'' என்பார் ஐயர்வாள். ஆனாலும் நாங்கள் விடுவதில்லை. ''அதில் ஒரு பிசகும் கிடையாது. தங்களுடைய சுயசரித்திரம் என்றால், அது தமிழ்நாட்டின் எண்பது வருஷத்துச் சரித்திரமாக அல்லவா இருக்கும்?'' என்று வற்புறுத்துவோம். எங்களுடைய வேண்டுகோளை அவருடைய அருமைப் புதல்வர் ஸ்ரீ கல்யாண சுந்தரமய்யரும், அவருடைய தலைசிறந்த சிஷ்யரான ஸ்ரீ கி. வா. ஜகந்நாதய்யரும் ஆதரித்தபடியால், கடைசியில் எங்கள் மனோரதம் நிறைவேறிற்று. தமிழ்த் தாத்தா தமது சுயசரிதத்தை எழுதச் சம்மதித்து எழுதியும் வந்தார். அது பூர்த்தியாவதற்குள் அவர் காலஞ்சென்றது தமிழ்நாட்டின் பாக்கியக் குறைவேயாகும்.

- விழ்ந்த ஆலமரம் - ரா. கி. கட்டுரையிலிருந்து



ஸ்ரீ சத்திய மூர்த்தியின் அபயப் பிரதானம்





பாலம்

மருத்துவ நூலகம்

மருத்துவ நூலகம் அமைக்க ஏற்பாடு செய்து வருகிறேன். தமிழ்/ஆங்கிலம் அல்லது இதர மொழிகளில் பழைமையான மருத்துவ நூல்கள், ஓலைச் சுவடிகள் இருந்தால் தொடர்பு கொள்ளவும். மருந்துகள் அல்லது மருத்துவம் சம்பந்தமான எதுவானாலும் சரி. உங்கள் நண்பர்களிடம் இருப்பினும் சொல்லுங்கள். பணம் கொடுத்துப் பெற்றுக் கொள்ளவும் சித்தமாயிருக்கிறேன்.

- டாக்டர் என்.கே. ஷண்முகம்,
6, 53 வது தெரு, அசோக் நகர்,
சென்னை - 600 083.

குடிப் பழக்கத்தை விட்டொழிக்க...

கிடைக்குமா, கைப்பை?

கும்பகோணத்திலிருந்து கல்லணை செல்லும் வி.ஆர்.வி. பேருந்தில், 8.3.92 ஞாயிறு மாலை எனது கைப்பையைத் தவற விட்டேன். அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, குருங்குளம் என்ற முகவரி யிட்ட அந்தப் பையை யாரோ எடுத்துச் சென்று விட்டனர். அதில் புதுநகைகள், ஆபரணம், கைக்கடிகாரம், ரொக்கம் தவிர முக்கிய மருந்துச் சீட்டும் இருந்தது. எடுத்தவர் அல்லது தகவல் தெரிந்தவர் தொடர்பு கொள்ள முகவரி :

- பி. ஜீவானந்தம்,
3/24 மெயின் ரோடு,
ஈச்சங்குடி அஞ்சல்,
திருவையாறு
- 613 204.

அரவிந்தர் அன்பர்கள்

ஒவ்வோர் ஆண்டும் பாண்டிச்சேரி அரவிந்தர் ஆசிரமத்துக்குத் தரிசன நாட்களில் தனியாகவோ குழுவாகவோ சென்று வருவது வழக்கம். ஆசிரம விடுதிகளில் தங்க இடம் கிடைப்பது அரிது. இந்தப் பிரச்னை தீர, தனித்தோ அல்லது குழுவாகவோ வரும் எங்களுக்குத் தங்க இடம் தந்து உதவக்கூடிய நபர்களுடன் தொடர்பு கொள்ள விருப்பம். (ஆசிரமத்துக்கு அருகிலிருப்பது நலம்.)

- ஆர். ரங்கராஜன்,
கணக்குப் பிரிவு,
டி.வி.எஸ். அண்டு சன்ஸ்,
211, தெற்கு வெளி வீதி,
மதுரை - 1.


குடிப்பழக்கத்தை விட்டொழிக்க....

தங்களுக்கோ அல்லது தங்களைச் சேர்ந்தவருக்கோ குடிப்பழக்கம் இருந்து, அதிலிருந்து விடுபட விரும்பினால் இலவச உதவிக்குக் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம். எங்கள் அமைப்பு உலகம் முழுவதும் கிளை விட்டுப் படர்ந்துள்ள ஒரு சமுதாய நல அமைப்பு.

- ஆல்கஹாலிக்ஸ் அனானிமஸ்
த.பெ. எண் : 369,
மயிலாப்பூர், சென்னை - 600 004.

(பாலம் பகுதி மூலம் இணையும் அன்பர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி நிறுவனம் பொறுப்பேற்க இயலாது.)

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600032. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.



அழகொளிரும் மேனி. ஸிந்தால் சாண்டல் மேனி.
CINTHOL
இப்போது நீங்கள் ஸிந்தால் சாண்டல் மூலம் பெற்றிடலாம் குறைபாடற்ற, மாசிலா மேனியை. ஸிந்தாலில் மட்டுமே உண்டு - மேனியில் மாசு மற்றும் துர்நாற்றத்தை உண்டாக்கும் பாக்டீரியாவை அழிப் பதற்கான TCC. மென்மையான, அழகொளிரும் மேனிக்கு தொன்றுதொட்டு பயன்படுத்தப்பட்டுவரும் சந்தனத்தின் நன்மைகள்.
இன்றைய நங்கையர்க்கான இன்றைய சாண்டல் சோப்.
Godrej
CINTHOL
Sandal

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka